

APR 2023



அமரர்

பேராசிரியர் இரத்தினம் விக்கினேஸ்வரன்

அவர்களின் சிவபதப்பேறு குறித்த

# விக்னதீபம்

19.03.2023

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

19 APR 2023
யாழ்ப்பாணம்

உ

சிவமயம்



இணுவிலைப் பிறப்பிடமாகவும்

கோண்டாவிலை வசிப்பிடமாகவும் கொண்ட

*அமரர்*

# பேராசிரியர் இரத்தினம் விக்கினேஸ்வரன்

அவர்களின்

சிவபதப் பேறு குறித்து வெளியிடப்பட்ட

# "விக்ன தீபம்"

**19.03.2023**

11182(P)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

எங்கள் அன்புத் தெய்வத்தின்

பாதங்களுக்கு இந்நூல் சமர்ப்பணம்

அன்பின் உருவமாய் அனுபவ அறிவின் விளக்காய்
பேராசிரியனாய், மனிதருள் மாணிக்கமாய், பண்பின்
இருப்பிடமாய், கருணை வள்ளனாய், விட்டுக்கொடுப்பவராய்,
பொறுமைசாலியாய், சீரிய வழிகாட்டியாய், அனைவருக்கும்
ஒளிவிளக்காய் தமது உடல் பொருள் ஆவி அனைத்தையும்
எமது நல்வாழ்விற்காக அர்ப்பணித்த அன்பும் பண்பும் அறிவும்
பாசமும் எமக்களித்து என்றும் எம் உணர்விலும் உயிரிலும்
கலந்து வையத்துள் வானுறையும் தெய்வமாகிய
எமது அன்புத் தெய்வத்துக்கு இம்மலரை
காணிக்கையாக்குகின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாநதி!! ஓம் சாந்தி!!!

*இங்ஙனம்*

*மனைவி, பிள்ளைகள்,*

*சகோதரர்கள்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மண்ணில்
1958.02.03

விண்ணில்
2023.02.17

அமரர்

# பேராசிரியர். இரத்தினம் விக்கினேஸ்வரன்

## திதிவெண்பா

பரிவுடனே பக்குவமும் பாசமும் எமை மிஞ்சி
பிதாமகராய் என்றும் பிள்ளைகளாய் எமை நடத்தி
பிபில மாசி அபரபக்க துவாதசி திதிதனிலே
பரமனுடன் பந்தமாகி பரமானந்திபதம் பணிந்தீரே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



# பஞ்சபுராணம்

திருச்சிற்றம்பலம்

## விநாயகர் துதி

ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகந்தனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே.

## தேவாரம்

அங்கமும் வேதமும் ஓதும்நாவர்
அந்தணர் நாளும் அடிபரவ
மங்குல் மதிதவழ் மாட வீதி
மருகல் நிலாவிய மைந்த சொல்லாய்
செங்கய லார்புனற் செல்வ மல்கு
சீர் கொள் செங் காட்டங் குடியதனுள்
கங்குல் விளங்கெரீ யேந்தியாடுங்
கணபதி யீச்சரங் காமுறவே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே
பொய்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் தனக்குச்
செம்மையே யாய சிவபதமளித்த
செல்வமே சிவபெருமானே
இம்மையே யுன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந்தருளுவதினியே.

## திருவிசைப்பா

கற்றவர் விழுங்குங் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணை மாகடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்ற எஞ்சிவனைத்
திருவீழி மிழலை வீற்றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டு கண்டுள்ளம்
குளிர என் கண் குளிர்ந்தனவே

## திருப்பல்லாண்டு

மன்னுக தில்லை வளர்கநம் பத்தர்கள்
வஞ்சகர் போயகல
பொன்னின் செய் மண்டபத்துள்ளே புகுந்து
புவனியெல்லாம் விளங்க
அன்னநடை மடவாள்உமை கோன்
அடி யோமுக் கருள் புரிந்து
பின்னைப் பிறவியறுக்க நெறிதந்த பித்தற்குப்
பல்லாண்டு கூறுதுமே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புராணம்

ஆதியாய் நடுவுமாகி யளவிலா வளவுமாகிச்

சோதியா யுணர்வுமாகித் தோன்றிய பொருளுமாகிப்

பேதியா ஏகமாகிப் பெண்ணுமா யாணுமாகிப்

போதியா நிற்குந் தில்லைப் பொதுநடம் போற்றி போற்றி.

## திருப்புகழ்

இறவாமற் பிறவாமல் எனையாள்சற் குருவாகிப்

பிறவாகித் திரமான பெருவாழ்வைத் தருவாயே

குறமாதைப் புணர்வோனே குகனேசற் குமரேசா

கறையானைக் கிளியோனே கதிர்காமப் பெருமாளே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்

கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க

நான்மறை யறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க

மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

திருச்சிற்றம்பலம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேராசிரியர் இரத்தினம் விக்கினேஸ்வரன் அவர்களது வாழ்க்கை வரலாறு

**விக்னேஸ்வர விற்பன்னம்**

**"தோன்றிற் புகழொடு தோன்றுக"**

ஈழமணி திருநாடதன் வடகோடியில் வலிகாமமதனில் மண் வளமும், ஆன்மீக வளமும் பொழிந்து திகழும் இறை சந்நிதானங்கள் நிறை இணுவையம்பதியதனில் தாவடியூர் தம்புரத்தினம் இணுவை பஞ்சவர்ணம் தம்பதியினர் செய் தவத்தால் 1958 மாசித் திங்கள் மூன்றாம் நாள் - தைப்பூச நன்னாளில் விக்கினம் தீர்க்கும் விநாயகர் திருநாமமாம் விக்கினேஸ்வரன் பெயர் கொண்டு இரண்டாவது பிள்ளையாக அவதரித்திட்டார்.

இவருக்கு மூத்தவர் அமரர் மேனகா. தம்பி சண்முகேஸ்வரன் கணிதப் பட்டதாரியாகி ஆசிரியர் தொழிலில் ஈடுபட்டு 2021.08.02ல் சேவைக்கு ஓய்வு தந்தவர். தங்கையர் இருவர். ரேணுகா என்னும் பெயர் கொள் நங்கை. தற்போது கனடாவில் கால் கொண்டுள்ளார். மல்லிகா என்ற சகோதரி லண்டன் மாநகரில் வாசம் செய்கின்றார்.

சகோதரர் நால்வருடன் பிறந்த விக்கினேஸ்வரன் அவர்கள் ஆரம்பக் கல்வி, இடைநிலைக் கல்விகளை (தரம் 1-7) யா/இணுவில் சைவப்பிரகாச வித்தியாசாலைதனில் (இன்றைய இணுவில் இந்துக் கல்லூரி) கற்றதன் பின், யா/ இந்துக் கல்லூரி தனில் உயர்தரம் வரை கற்றார். பொருளாதாரம் போதா நிலைமையதனிலும் கிடைக்கும் நேரமதில் வாழ்வாதார தொழிலாம் விவசாயத்திலும், சுருட்டுக் கைத்தொழில் செய்வதிலும் தன் பாரிய பங்கை வழங்கி குடும்பத்தின் சுமையைக் குறைத்துக் கொண்டார். தன் கூடப் பிறந்தோர் கல்வியில் அக்கறை செலுத்தி உந்துதலாய் இருந்து தன்னையும் கற்றலில் வளர்த்துக் கொண்டார். 1977 ல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்தையின் இழப்பு, இவருக்கு சவாலாகியது. உயர்தரம் கற்கும் வேளை தந்தை சுமந்தவை தனயனின் தோள்களில். இத்தகைய நிலையிலும் தளர்ந்தார் அல்லர். தன் குடும்பம், தன் கல்வி உயர உழைத்தார். சகோதரனாய் மட்டுமன்றி, தந்தையாய், வழிகாட்டியாய் நின்று உழைத்திட்ட அப் பெருமகனது கஸ்டங்கள் கூட இருந்த எமக்கு மட்டுமே தெரியும். இன்றும் அவர் நினைவுகள் நிழலாய் தெரிகின்றன.

உயர்தரக் கல்வியில் 1976 ல் பரீட்சைக்கு முகங் கொடுத்து சிறப்பான சித்திகள் பெற்று யாழ் பல்கலைக்கழக பௌதிக விஞ்ஞான பிரிவிற்கு தெரிவு செய்யப்பட்ட நிலையில், அதனை நிராகரித்து, 1977 ல் மீளவும் பரீட்சைக்கு தோற்றி, மீளவும் அத் துறைக்கே தெரிவாகிய நிலையில் கற்கைகள் ஆரம்பமாக, கால அவகாசம் இருந்த காரணத்தால் அதனை சாதகமாக்கி மூன்றாம் முறையும் பரீட்சைக்கு தோற்றி மிகச் சிறப்பான பெறுபேறுகளைப் பெற்ற வேளை, பொறியியல் கற்றைக்கு போதுமானதாக இருந்த போதில், முன்னைய கற்றை நெறியை இரத்துச் செய்ய நினைத்த போது, மீண்டும் அனுமதி கிடைப்பது கடினமென கருதியதால் பௌதிக விஞ்ஞான பட்டப்படிப்பை மேற்கொண்டு, சிறப்பு பட்டப்படிப்பிற்கு (கணிதம்) தெரிவாகி, 1982 ல் கணித சிறப்பு பட்டதாரியாகி வெளியேறினாலும், யாழ் பல்கலைக்கழக கணித புள்ளிவிபரவியல் துறையில் தற்காலிக விரிவுரையாளராகவும் (1982-1984), தொடர்ந்து கிழக்குப் பல்கலைக்கழகத்திலும் (1984-1986) சேவையாற்றி 1987 ல் உதவி விரிவுரையாளராக பதவியுயர்வு பெற்று சேவை தொடர்ந்தார்.

1988ல் பிரித்தானியா புலமைப்பரிசில் பெற்று அங்குள்ள University of Sussexல் கணித துறையில் கலாநிதி பட்டப்படிப்பை மேற்கொண்டு வந்த நிலையில், 1989ல் கோண்டாவில் மேற்கைச் சேர்ந்தவரும் Hansard Parliamentary Reporter ஆகிய திருவாளர் செல்லப்பா நடராசா, பத்மாவதி தம்பதியினரின் சிரேஸ்ட புத்திரி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பவானி என்பவரை வாழ்க்கைத் துணையாய் இணைத்துக் கொண்டு இல்லறமாம் நல்லறத்தில் தடம் பதித்தார். இவரது கற்கை நெறி 1991 ல் பூர்த்தியடைந்து கலாநிதி பட்டத்தையும் பெற்றுக் கொண்டார்.

மீண்டும் அவர் சேவைக்காய் 1992 ல் கிழக்குப் பல்கலைக்கழகம் மீள்கின்றார். சிரேஸ்ட விரிவுரையாளராய் பதவி பெற்று 1994 ல் கணித துறையின் தலைவருமாகி 1997 வரை பணி தொடர்கின்றார். புத்தாயிரம் ஆண்டதனில் கலாநிதி பட்டப்பின் கற்கை நெறிக்கான பொதுநலவாய புலமைப்பரிசில் (Post Dectorial Studies Under Common Wealth Fellowship) பெற்று மீண்டும் University of Sussex ல் இணைந்து கற்கை தொடர்ந்த வேளையில் தன் ஆராய்ச்சிகளை கனடாவிலுள்ள British Colombia University, Dundee University, Scotland, UK போன்ற இடங்களில் நடைபெற்ற சர்வதேச மாநாட்டில் சமர்ப்பித்த நிலையில் அங்கு முன்வைக்கப்பட்ட ஆலோசனைக்கமைவாக எழுதப்பட்ட ஆராய்ச்சிக் கட்டுரைகள் இரண்டினை சர்வதேச Journal களில் வெளியிட்டார்.

இவரது கல்விப் பயணம் தொடர்கின்றது. மீண்டும் 2002 கிழக்கு நோக்கி துறைகளது தலைவர் பதவி, 2004 ல் கிழக்கில் ஏற்பட்ட பதற்றம், யாழ் பல்கலைக்கழகம் நோக்கி அவரது பயணம், கணித புள்ளிவிபரவியல் துறைத் தலைவர் ஆகின்றார். 2004 ல் உலக வங்கியினால் வழங்கப்படவிருந்த நிதிக்கு ஒரு திட்ட உருவாக்கத்துக்கு முன்னின்று உழைத்தார். இதன் பயனாக 77.08 மில்லியன் ரூபா உலக வங்கியால் கிடைக்கப் பெற்றது. இத்திட்டத்தை 2006-2010 காலப்பகுதியில் நடைமுறைப்படுத்து வதற்காக இணைப்பாளராக செயற்பட்டார். 2009ல் இணைப் பேராசிரியராக பதவியுயர்வு பெற்றார். அதன் பின் பேராசிரியராகி தன் கடமைகளைத் தொடர்ந்தார். 2016 விஞ்ஞான பீடாதிபதி தேர்தல், அதிகப்படியான வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற்று


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பீடாதிபதியாகின்றார். 2017 உபவேந்தர் தெரிவில் தேர்வாகி மூன்றாண்டுகள் பல்கலைக்கழகத்தை வழிநடத்துகின்றார். தோல்வியில் துவளாது, துணிந்து நின்றவர். மாணவர்களை நேசித்த மாபெரும் (உப) வேந்தர். எல்லோரையும் மதித்தவர். எல்லோரும் மதித்தவர்.

மறுபுறம் இணுவை முருக பக்தனிவர். முருகனையே எண்ணி, முருகனையே பாடி, முருகனையே ஏந்தி, முருகன் அருகிருந்து, மூத்தபிள்ளை பேர் பெற்ற உத்தமரிவர்கு முருகனருளால் 2008 ல் விசாகன் (யா/ இந்துக் கல்லூரி மாணவன்) வாசனா (யா/ உடுவில் மகளிர் கல்லூரி) என்னும் ஆஸ்திக்கும், ஆசைக்குமாய் இரட்டையர் பிறந்தனர். அளவிலா ஆனந்தத்தில் திளைத்தனர் பெற்றோர்.

2012-2014 காலப்பகுதியில் இணுவைக் கந்தப் பெருமான் கோவில் புனருத்தாரண வேலைகள் நடைபெற்று 2014 ஆடி மாதம் நடைபெற்ற 33 குண்ட உத்தமோத்தம மகா கும்பாபிசேகம் சிறப்புற நடைபெற முன்னின்று உழைத்த பெருந்தகையும் இவரே.

கல்விப் பணியும், கடவுள் பணியும் தொடர்கின்றது. இணுவில் கந்தசாமி கோவில் தர்மகத்தா சபை உறுப்பினராய், பொருளாளராய், தலைவராய் அவர் பணி தொடர்ந்தது. உடல் நிலை இடங்கொடாத போதிலும், மனம் முருகனைக் காணும் ஆவலினால், நித்தம் அவன் தரிசனம் வேண்டி, அவன் சந்நிதானம் சென்று, அவனைக் கண்ணார, மனதாரக் கண்டு, ஏத்திப் போற்றிய பின்னரே அவர் கடமை தொடரும். ஆலய தெற்கு வாசல் கோபுரம் இவர் நாமம் சொல்லி நிற்கும்.

அன்பு இவர்தம் பண்பு, அமைதி இவர்தம் அணிகலன், அளந்தாற் போல் வார்த்தை, எவரையும் நோதல் செய்யும் சொல் சொல்லத் துணியார். கோபித்து ஒரு போதும் கேட்டதில்லை, கண்டதில்லை. எதையும், எவ்விடத்தும் பொறுக்கும் பண்பினர்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகும் தீமையும் பொறுக்கும் தூய உள்ளத்தினர். சொல்வதை விட செய்தவை அநேகம். சுற்றம், உறவுகள், நிகழ்வுகள் எதுவெனிலும் காணலாமிவரை. மதிநலமும், மனவலிமையும், விரிந்த மனமும், உயர்ந்த குணமும் கொண்டோன். இறை பக்தி, தொழில் பக்தி நிறையவுண்டு. எண்ணியதைத் திண்ணமுற நிறைவேற்றும் கைங்கரியமுடையோன். நீதி வழுவா நெறி முறையில் இட்ட பெரியவர். இவரின்றில்லை என்பது நெருப்பாய் சுடுகின்றதே.

சீலத்தால், அறிவால், அறம் வளர்க்கும் பண்பால், உயர்ந்த உத்தமர் இவரை 2023.02.17 ல் காலன் இத்தனை விரைவாய் கவர்வானென்று கனவிலும் நினைத்திலர் எவரும். தொற்றா நோய் தொற்றினும் கட்டுப்பாடுகள் விதித்திட்டவருக்கு இந்நிலை வந்ததெண்ணி இதயங்கள் துவள்கின்றன. அவரிடம் நிரப்பிட இனி யாருளர்?

பன்னூற்றோர் அன்போடும், நன்றியோடும் போற்றும் பெருமை பெற்றவர் என்பதை சோதரர் தம் இறுதி நிகழ்வில், யாத்திரையில், அஞ்சலி உரைகளில் கண்டு கொண்டோம். செவிமடுத்தோம். சோதரா! உமக்கு இத்தனை பேரா! இத்தனை பெயரா!!! கண்டு திகைத்தோம். இவ்வண்ணம் சிறந்திலங்கிய இனிய நற்சோதரரை எவ்வண்ணம் போற்றிடவே, எம் சொல் வண்ணம் போதாது, போதாது.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

"பெருமையுடையவர் ஆற்றுவார் ஆற்றின்

அருமையுடைய செயல்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரங்கல் செய்தி

சைவமும் தமிழும் தழைத்தோங்கும் இணுவில் திருப்பதியில் பல புண்ணிய சீலர்கள் வாழ்ந்து சிறப்புற்று இறையின்பம் அடைந்துள்ளனர். அவ்வகையில் பேராசிரியர் இ.விக்கினேஸ்வரன் அவர்கள் கல்விப் புலத்தில் பெருமை, புகழ் சேர்த்தது மட்டுமல்லாது, சமயப் பணி, சமூகப் பணி என்னும் நிலைகளிலும் பணியாற்றிய பெருமகனார். எமது இணுவில் கந்தசாமி கோயில் நிர்வாக சபையில் பல வருடங்களாக இருந்து பொருளாளர், தலைவர் என்னும் நிலைகளில் அரும்பணி ஆற்றியவர். அது மட்டுமல்ல சண்முகர் வாசல் இராஜ கோபுரத்தை அமைத்துத் தந்தவர். இதற்கு மேலாக பழைய கோவிலை புதிய கோவிலாக அமைத்துத் தரும் திருப்பணியில் முன்னின்று உழைத்தவர். அத்தகைய சமயத் தொண்டன். இவ்வுலகில் பல சமூகப் பணிகளையும் ஆற்றி புகழ் உடம்பை கல்வி, சமயம், சமூகம் என்ற நிலையில் நிறுத்தி தன் உடம்பை விட்டு நீங்கி முருகனின் விந்தங்களை அடைந்து விட்டார். பேராசிரியர் விக்கினேஸ்வரனின் ஆத்மா எல்லாம் வல்ல இணுவை கந்தனதும், வைரவப் பெருமானதும் விந்தங்களை அடைய வேண்டுமென்று பிரார்த்திக்கின்றேன்.

**உருத்திரமூர்த்தி குருக்கள்**
**உ. அபராஜித குருக்கள்**
**கந்தசாமி கோவில் பரம்பரை குருக்கள்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசியுரை

சைவமும் தமிழும் செழித்தோங்கி வளரும் இவ் இணுவிலைப் பதியிலே சைவத்தையும், தமிழையும் வளர்க்க வந்த எங்கள் பேராசிரியர் இ.விக்கினேஸ்வரன் இணுவைக் கந்தன் மீது அளவற்ற பக்தி கொண்டு பல சேவைகளைச் செய்து கந்தசாமி கோவிலில் தர்மகத்தா சபையிலும் சேவை செய்து ஆலய வளர்ச்சிக்கு பெரிதும் பாடுபட்டவர். கல்வியில் சிறந்து விளங்கி பேராசிரியர் ஆகவும், முன்னால் துணை வேந்தராகவும் பணியாற்றினார்.

உலகப் பெரும் மஞ்ச நாயகனின் ஆறுமுகத்தான் தெற்கு வாசல் கோபுரத்தை உருவாக்கி கந்தப் பெருமானின் அருளைப் பெற்றார். இணுவைக் கிராமத்திற்கு பல சேவைகளை, பெருமைகளை சேர்த்தார். அவர் வாழ்ந்த காலம் இனிமையான காலங்கள் எனலாம்.

**சிவஸ்ரீ கந்தராஜக் குருக்கள்**
**சிவஸ்ரீ ஜெயந்தராமக் குருக்கள்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெட்டிலிப்பாய் விநாயகர் ஆலய பிரதம குருவின் இரங்கலுரை

தாம் வாழும் காலத்தில் மற்றவர்கள் வாழும் வகை செய்து மறைந்த பின்னும் மக்கள் மனங்களில் வாழுகின்ற பேராளர் பேராசிரியர் இரத்தினம் விக்கினேஸ்வரன் அவர்கள்.

அவரது திடீர் மறைவு கேட்டு மிகுந்த அதிர்ச்சி அடைந்தோம். அவர் துணைவேந்தராக இருந்த காலத்தில் யாழ் பல்கலைக்கழக பரமேஸ்வரன் ஆலயத்துடன் எம்முடனும் மிகுந்த தொடர்பில் இருந்தார். அவரது ஆளுமை மற்றவர்களை அவரணைக்கும் பண்பு மற்றவர்க்கு உதவும் நெஞ்சம் என்பனவற்றால் அனைவர்க்கும் முன்னுதாரணமாக திகழ்ந்தவர்.

அன்றியும் அவரும் அவரது குடும்பத்தினரும் எம் நெட்டிலிப்பாய் விநாயகர் மீது அளவற்ற பக்தி கொண்டவர்கள். அந்த பக்தியின் வெளிப்பாடாக எமது ஆலய வளர்ச்சியின் ஒவ்வொரு கட்டத்திலும் அவர்களது பங்களிப்பு மிகுந்திருந்தது. உபயங்களை முன்னின்று விரும்பி செய்வதிலும் அடியார்களுக்கு வேண்டிய உதவிகளை செய்வதிலும் முன்னின்று உழைத்தவர். அவரது இழப்பு ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும். எனினும் "நெருநல் உளலொருவன் இன்றில்லை எனும் பெருமை உடைத்ததிவ்வுலகு" என்ற வள்ளுவன் வாக்கை எண்ணி மனம் தேறி அன்னாரது ஆன்மா நெட்டிலிப்பாய் விநாயப் பெருமானின் பாதகமலங்களில் சாந்தியடை பிரார்த்திப்போமாக.

**சிவஸ்ரீ பி. கிருபாஹரக் குருக்கள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என்றும் நினைவில்

அமரர் யாழ் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் இரத்தினம் விக்கினேஸ்வரன் 17.02.2023 அன்று காலமான செய்தியை அறிந்து சந்நிதியான் ஆச்சிரமமும் பேரவையும் மிகுந்த அதிர்ச்சி அடைகின்றோம்.

அமரர் அவர்கள் துணைவேந்தராக பதவி வகிக்கின்ற காலத்தில் பல்கலைக்கழகத்தின் ஊடாக அவர் ஆற்றிய பணிகளை பத்திரிகை வாயிலாகவும், ஊடகங்களின் ஊடாகவும் அறியக் கூடியதாக இருக்கின்றது. துணைவேந்தர் என்ற பெருமையை விரும்பாது ஒரு சாதாரண குடிமகனாக தனது பணியின் மூலம் பல்கலைக்கழக செயற்பாட்டினை நிறைவேற்றிய ஒரு பெருந்தகை.

இவற்றிலும் பார்க்க சந்நிதியான் ஆச்சிரம சுவாமி அவர்களுக்கு தமிழ்நாடு பல்கலைக்கழகம் வழங்கிய கலாநிதி என்னும் விருதினை தமிழ்நாட்டிலிருந்து எடுத்து வந்து சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் வைத்து வழங்குவதற்கு பெரும் உறுதுணையாக விளங்கியவர்.

இத்தகைய செயற்பாடுகளை உடையவரது ஆத்மா சந்நிதி வேல் பெருமானின் பாதார விந்தங்களில் நிரந்தரமாக அமைதி அடைய வேல் பெருமானை வேண்டுவதோடு அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஓம் சாந்தி ! சாந்தி ! சாந்தி!

**சந்நிதியான் ஞானசுடர்**

**பேரவையினர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செஞ்சொற் செல்வரின் பிரார்த்தனை செய்தி..

இணுவில் கந்தப் பெருமானின் திருவருளால் பிறந்து அவன் திருவடியே சதா நினைந்து போற்றிய பேராசிரியர் இரத்தினம் விக்கினேஸ்வரன் அவர்களது திடீர் மரணம் குறித்து மிகுந்த கவலையடைகின்றேன். சைவப் பாரம்பரியமிக்க குடும்பத்தில் பிறந்து இணுவில் இந்துக் கல்லூரியிலும், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியிலும் கற்று யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்றவர் இவர். அவரோடு பழகும் வாய்ப்பு 1973 முதல் எனக்கு கிடைத்தது. அவருடைய உயர்ந்த பக்தியையும், கல்வியாற்றலையும் கண்டு வியந்தவன் யான். தனது ஒப்பற்ற புலமையால் கல்வியில் உச்சத்தை தொட்டவர் இவர். துறைத்தலைவராக, பீடாதிபதியாக, துணை வேந்தராக உன்னத பதவிகளை வகித்து பல ஆயிரம் மாணவர்கள் மனதில் வாழும் பேறுபெற்றவர். கிழக்கு பல்கலைக்கழகத்திலும் தனது அரிய சேவையை வழங்கி பலரது பாராட்டைப் பெற்றவர்.

சமூக உணர்வோடும், சமய உணர்வோடும் செயற்பட்ட பேராசிரியர் அவர்கள் இணுவில் கந்தசாமி கோவில் இளந்தொண்டர் சபையில் இணைந்து ஆன்மீக தொண்டாற்றியவர். இணுவில் கந்தசாமி கோவில் அறங்காவல் சபையில் பல பொறுப்புக்களை வகித்து ஆலயத் திருப்பணியை ஆற்றுப்படுத்தியவர். இணுவில் அறிவாலயத்தின் வளர்ச்சியிலும் அவரது பணி மறக்க முடியாது. இணுவில் கந்தசாமியாருடைய தென் திசைக் கோபுரத்தை தனது சொந்தச் செலவில் கட்டியவர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராக பதவி வகித்த இவர் துணைவேந்தர் பதவி நிறைவு பெற்ற பின்பும் தனது உன்னதமான கல்விப் பணியை தொடர்ந்தவர். உயிர் பிரிந்த அன்றும் காலை பல்கலைக்கழகம் சென்று தனது கடமையை நிறைவேற்றிவிட்டு மாலையும் கடமைக்கு சென்ற வேளை அவரை காலன் பறித்து விட்டது. காலனின் கணக்கை யார் அறிவார்? விக்கினேஸ்வரன் அவர்களின் வாழ்வு நிறைவு பெற்று விட்டது. அவரது மனைவி, சகோதரி பவானிக்கும், பிள்ளைகளுக்கும் ஆறுதல் சொல்ல முடியவில்லை. என் செய்வோம் நியதியை யார் வெல்ல முடியும். அன்னாரது ஆத்மா சாந்தி பெற துர்க்கை அம்மனை பிரார்த்தனை செய்து எனது பிரார்த்தனைச் செய்தியை நிறைவு செய்கிறேன்.

**கலாநிதி. ஆறு. திருமுருகன்**
**தலைவர்**
**ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்**
**தெல்லிப்பளை**
**தலைவர்**
**சிவபூமி அறக்கட்டளை**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இல்வாழ்வின் இன்னுயிர்

அன்பும் அறனும் நிறைந்தது எம் இல் வாழ்க்கை
அதற்கு இன்னுயிராய் நீங்கள் இருந்தீர்!
இனிய மழலைகள் இருவரைப் பெற்று மகிழ்ந்தோம்
பெருமரமாகிப் போன உங்கள் வாழ்வில் - நீங்கள்
பெற்ற பதவிகள் கண்டு உங்கள் மனையாள்
நான் என இறுமாந்திருந்தேன்
எல்லாம் ஒரு நொடியில் கனவாகிப்போனது
அன்றும் வழமை போல் பல்கலைக்கழகம் சென்றீர்கள்
இனி திரும்பி நீங்கள் வரப்போவதில்லை என்பதை அறியாது
நான் விடைகொடுத்தேன்
இன்று நினைக்கும் போதும் என் உயிர் நடுங்குகின்றது
ஓ... என் எதிர்காலத்தையே கேள்விக் குறியாக்கி விட்ட
என் தெய்வமே!
உங்கள் ஆன்மா இறைவன் திருவடிகளில் இளைப்பாறட்டும்
உங்கள் நினைவுகளுடன் எம் பிள்ளைகளுக்காய் வாழும்

**உங்கள் இனிய மனைவி**
**பவானி விக்கினேஸ்வரன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அப்பா..

பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராய் இருந்த எம் அப்பா! எம் குடும்ப பல்கலைக்கழகத்திலும் நீங்கள் தானே வேந்தர் அப்பா!

குடும்பம் என்னும் கழகத்தில் அம்மாவோடு எம்மையும் அரவணைத்து ஆட்சி செய்தீங்கள். உங்கள் ஆட்சியில் நாம் கண்டதெல்லாம் அன்பு ஒன்றே எம் அப்பா!.

தாத்தாவும், பாட்டியும் அருகிருந்து சிறகணைக்க உங்கள் ஆட்சியின் கீழ் அற்புதமாய் வாழ்ந்து விட்டோம். இடைநடுவில் எமை விட்டு தாத்தா செல்ல நீங்களும் அவ்வழி சென்றதேனோ?

அப்பா! அப்பா! என உங்கள் குழந்தைகள் உங்கள் நாளும் தேடித் தேடி அலைகிறோம். அன்போடும் பண்போடும் எமை வளர்த்தீர்! உங்கள் பெயர் சொல்ல நாம் வாழ்வோம். ஈன்ற பொழுதில் பெரிதுவக்கும் சான்றோராய் நாம் பரிணமிப்போம்.

**உம் உயிர் விழுதுகள்**

**விசாகன், வாசனா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இனி என்று காண்பேன் என் அண்ணனை...

நேர்மை என்ற பதத்துக்கு மறுபெயர் என்றால் அது பேராசிரியர் விக்கினேஸ்வரன் அவர்களே. என்னுடன் கூடப்பிறந்த ஒரேயொரு அண்ணன் எம்மை விட்டு பிரிந்ததை எண்ணும் போது என் நெஞ்சு வலிக்கின்றது. அவருக்கும் நான் தான் ஒரேயொரு கூடப்பிறந்த தம்பி என்பதால் என்னிடத்தில் மிகுந்த பற்றும், மதிப்பும் கொண்டிருந்தவர் என் அண்ணன்.

மேலும், என் பிள்ளைகளிடத்தில் அளவுக்கதிகமாக அன்பும், பாசமும் கொண்டவர். எனது பிள்ளைகளும், பெரியப்பா, பெரியப்பா என்று அவரிடத்தில் அதீத பாசமும் மரியாதையும் கொண்டிருந்தனர்.

எங்கள் குடும்பம் மிகவும் வறுமையான குடும்பம். எங்களுக்கு சிறு வயதிலேயே எமது தந்தையார் எம்மை விட்டு பிரிந்தார். தாயாரின் வழிநடத்தலில் வாழ்ந்தோம். குடும்ப வறுமை எங்களை வாட்டினாலும், கல்வியில் நாம் எந்த விதத்திலும் பின்தங்கவில்லை. என் அண்ணன் ஓய்வு நேரங்களில் என்னுடன் சேர்ந்து விவசாயத்தில் ஈடுபட்டு குடும்ப வறுமையை ஓரளவு போக்கி வந்தார். அவரது வழிநடத்துதலிலேயே நான் எனது கல்வியைத் தொடர்ந்தேன்.

உயர்தர வகுப்பில் நான் அவரிடமே தூய கணிதம், பிரயோக கணிதத்தை கற்று அதிவிசேட சித்திகளை பெற்று பல்கலைக்கழகம் சென்றேன். ரியூசனுக்கு செல்வதற்கு பணம் இருக்காத நிலையில் ஏதோ முயற்சி செய்து என்னை ரியூசனுக்கு அனுப்பி வைத்தவர். நான் ஒரு கணிதப் பட்டதாரியாகி ஆசிரியராக இருந்தமைக்கு மிகவும் முக்கியமானவர் என் அண்ணன் தான். வஞ்சகம், சூது வாது இல்லாத ஒரு பெருந்தகை. கோபப்பட மாட்டார். அனைவருடனும் அன்பாகவும், பண்பாகவும் பழகியவர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிகவும் அமைதியான சுபாவம் கொண்டவர். தன் கல்வி நோக்கத்தை அடைவதில் மிகவும் கண்ணாய் இருந்தவர். பொறியியல் பீடத்திற்கு தெரிவு செய்யப்பட்ட பின்னர் அது கிடைக்காத நிலையில் கிடைத்த பௌதிக விஞ்ஞான துறையில் மிகவும் ஆர்வம் காட்டி அதி உச்ச நிலையை அடைந்தவர்.

கிழக்கு பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராகி கலாநிதி பட்டம் பெற்று, துறைத்தலைவராகி, பின்னர் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் சிரேஸ்ட விரிவுரையாளராகி, துறைத்தலைவராகி, விஞ்ஞான பீடாதிபதியாகி, இணை பேராசிரியராகி, பேராசிரியரானார். இறுதியாகி ஒரு பல்கலைக்கழகத்தின் அதி உன்னத பதவியாகிய துணை வேந்தர் பதவியையும் பெற்று சிறப்பான பல்கலைக்கழகத்தை வழிநடத்திய பெருமை என் அண்ணனுக்கே. இதனால் இணுவை மண்ணுக்கும், யாழ்ப்பாண மண்ணுக்கும் பெருமையை தேடிக் கொடுத்தார்.

இணுவைக் கந்தனில் அதீத பற்றும், பக்தியும் கொண்ட என் அண்ணனை கந்தப் பெருமான் விரைவாக அழைத்துச் சென்றமை என்னால் தாங்க முடியவில்லை. அவரது இழப்பை எவராலும் ஈடு செய்ய முடியாது. என்றும் அவரது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இணுவைக் கந்தப் பெருமானை வேண்டுகின்றேன்.

நன்றி

**என்றும் அண்ணனின் நினைவில் வாழும்**
**தம்பி**
**இ. சண்முகேஸ்வரன்**
**(ஓய்வு நிலை ஆசிரியர்)**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எங்களுடைய இரங்கற்பா

எங்கள் அண்ணா, நீங்கள் எங்களது தெய்வம், பாசத்தின் பிறப்பிடமே, பண்பின் உறைவிடமே, எங்கள் வாழ்வின் வழிகாட்டியாய் வாழ்ந்த எம் குல விளக்கே, வாழ்நாள் முழுவதும் உங்களை நினைக்கும் போதெல்லாம் விழிகள் கண்ணீராய் நிறைகிறது அண்ணா! எங்கள் விக்கி அண்ணா என்று அழைத்தால் அது விலைமதிக்க முடியாத பொக்கிசம். நான் அவரின் சகோதரியாக இருப்பதில் பெருமைப்படுகின்றேன்.

ஆனால் நீங்களோ எங்களை விட்டு நிரந்தரமாக விண்ணுலகம் சென்று விட்டீர்கள். நீங்கள் எங்களை விட்டுச் சென்றாலும் மனது ஆறவில்லை. ஆண்டுகள் பல சென்றாலும் ஆறாது, ஆறாது. உன் நினைவுகள் அல்லும் பகலும் அயராது உழைத்து எங்கள் அனைவரதும் வாழ்விற்கும் ஒளி கொடுத்த எம் அன்பு தெய்வமே, அண்ணா நீங்கள் மறைந்தாலும் எங்களோடு தான் என்றும் வாழ்கின்றீர்கள், வாழ்வீர்கள். உங்கள் உருவம் மறைந்ததே ஒழிய எங்கள் அனைவரது உள்ளத்திலும் என்றும் அண்ணாவாய், தெய்வமாய் வாழ்வீர்கள். உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி

**அன்புத் தங்கை**

**ரேணுகா (கனடா)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்புத் தங்கையின் வேதனை

அன்பிற்கு இலக்கணமாய் அவனியில் வாழ்ந்து பண்புடமை காத்து பக்குவமாக வழி நடந்தீர்

இரக்கத்தின் இருப்பிடமாய் ஈகை பல செய்து எல்லோருக்கும் நல்லவராய் நாணயமாய் நடந்தீர். ஏனோ இறைவன் இடை நடுவில் பறித்து விட்டான்.

துன்புற்றோர் துயர் துடைத்து துணைக்கரமாய் அடைக்கலம் தந்த உம்மை ஆண்டவன் ஏன் அழைத்தான்

பண்புள்ளோரை பல காலம் வாழவிடக் கூடாதென்றோ? என்ன செய்வோம் இறைவன் சித்தம் இது, இனி காண முடியாத

சோகத்தோடு

இங்கிருந்து ஏங்கி அழுகின்றோம்

கண்முன்னே வாழ்ந்த காலம் கனவாகிப் போனாலும்

எங்கள் முன்னே உங்கள் முகம் எந்நாளும் உயிர் வாழும் அண்ணா

அண்ணா அண்ணா என்று இனி யாரைக் கூப்பிடுவேன். நீங்கள் எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காக இருந்து எங்கள் எல்லோருக்கும் நல்லது செய்து எங்களை விட்டு பிரிய எப்படி மனம் வந்தது.

உங்கள் செல்ல தங்கை தவித்து போய்விடுவாள் என்று நினைக்கவில்லையே

உங்கள் துயர் செய்தி கேட்டவுடன் என் மனம் பட்ட பாட்டை யார் அறிவார்

எங்கள் அண்ணாவுக்கு இப்படி ஓர் நிலைமையா என்னால் இன்னும் நம்ப முடியவில்லை அண்ணா, மனம் பதை பதைக்கிறது அண்ணா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது ஒரு கனவாக இருக்கக்கூடாதா என மனம் ஏங்குகிறது அண்ணா,

நீங்கள் இல்லாத இந்த உலகத்தில் எங்களுக்கு ஏன் இந்த வாழ்க்கை என்று தோன்றுகிறது அண்ணா

உங்கள் உடன் இருந்த காலத்தை எண்ணிப் பார்க்கிறேன் அண்ணா

அந்த மகிழ்ச்சி ஆன காலங்கள் இனி எப்ப கிடைக்கும் என மனம் ஏங்குகிறேன் அண்ணா

உங்கள் செல்லத் தங்கச்சி புலம்புகிறேன் என்றும் உங்களை நினைத்து, உங்களுக்கு கேட்கவில்லையே அண்ணா நான் உயிர் வாழும் வரை உங்கள் நினைவுகள் உடன் தான் வாழ்ந்து வருவேன் அண்ணா

உங்கள் போல ஒரு அண்ணன் கிடைக்க நாங்கள் கோடி புண்ணியம் செய்திருக்க வேண்டும்

உங்கள் தங்கச்சி என்று பெருமையாக வாழ்ந்து வந்தேன் அண்ணா

நீங்கள் எங்கள் தெய்வம் அண்ணா

எங்கள் குடும்பத்தினரின் ஒளிவிளக்கு அண்ணா

எங்கள் அண்ணாவின் ஆத்மா சாந்தி அடைய எல்லாம் வல்ல இணுவில் ஆறுமுகசாமியாரை வேண்டுகிறேன்

ஓம் சாந்தி ஓம் சாந்தி ஓம் சாந்தி

**அன்புத் தங்கை - மல்லிகா**

**(லண்டன்)**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# My Dear Maama.

You were our soul supporter to our journey and I'm where I'm today because of you. When we were kids, we did not understand the impact of not having parents because of you. You and my Maami taken care of not only us but my grandma and my aunt. I cannot recall a day where you said you were tired of doing this responsibility. Later in my life I realized that you did so much work for us to help us get to Canada, you never spoke of it and did not ask anything from us. I remember on last day from Sri Lanka to Canada flight, you walked us all the way to airport entrance and we could not hold our tears knowing that we were leaving what would become our best parts of our lives. Memories we had with you and places we lived together has been the best moments of our lives. I sometime wish if we can go back to that life. It truly not same without you, I do not know what life has for us going forward but you will always be remembered.

***by***
***Jeneepan and Sujeevan***
***(Canada)***


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் பெரியப்பா

அன்பிற்கு இலக்கணமாய் அவனியில் வாழ்ந்து
பண்புடமை காத்து பக்குவமாய் வழி நடந்தீர்
இரக்கத்தின் இருப்பிடமாய் ஈகை பல செய்து
நல்லவராய் நாணயமாய் நடந்தீர்
ஆண்டவன் ஏனழைத்தான் பண்புள்ளோரை
பலகாலம் வாழ விடக்கூடதென்றோ

ஒருமுறையாவது உங்கள் திருமுகம்
கண்டுவிட வேண்டும் என்று நெஞ்சம் ஏங்குகிறது
காலங்கள் பல சென்றாலும் உங்கள் இழப்பு
எங்களால் ஜீரணிக்க முடியாதது
எந்நாளும் இணுவைக்கந்தன் புகழ்பாடும்
அடியானுக்கு ஏன் இந்த நிலைமை
திருமஞ்ச விழாவினில் எப்போது உங்களை
இனி காணப் போகின்றோம்
ஒரு புதையலை தொலைத்து விட்டோம்
என நினைக்கும் போது இதயம் நொருங்குகின்றது

கண்முன்னே வாழ்ந்த காலம் கனவாகிப் போனாலும்
எங்கள் முன்னே உங்கள் முகம் எந்நாளும் உயிர் வாழும்
மண்விட்டு மறைந்து விண் நோக்கி சென்றாலும்
எம் நினைவை விட்டு மறையாமல் எந்நாளும்
இருப்பீர்கள் பெரியப்பா

**பாசமிகு பெறாமகள்கள்**
**இனியாள்**
**ஆரபி (கனடா)**
**கனிமொழி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## My Dear Perriappa...

It was the morning on Friday, February 17th when my Amma informed me that my dear Vicky Perriappa had suddenly passed away. Needless to say, I was overcome with immense shock and sorrow. I could not and still do not understand why he was taken away from us so quickly.

I met Vicky Perriappa when I was one year old. He and my Perriamma came to the United Stated to celebrate my first birthday with the entire family. I do not have many memories from this time, but looking through pictures and videos, I could tell that he was very fond of me.

I saw him again when I was five, ten, thirteen and twenty one years old when I visited Sri Lanka. During my first visit, he would play with my brothers, Varrun and Jeevan, and I. He was also very fond of my brothers, as they were of him. He used to give them motorcycle rides around Jaffna for fun. He would take us to the temple and buy us snacks and sweets. My brothers miss him, and we will always cherish these memories with him.

When I was young, I only knew him as my Vicky Perriappa whom I liked very much. As I grew older, I came to know that he was a doctorate in Mathematics, a distinguished professor & eventually Vice Chancellor of University of Jaffna.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Throughout all of the interactions I have had with him, he has never mentioned any of these achievements. I only learned of them through my mother, who told me out of admiration of his achievements. Such a man was modest and humble about his accomplished career that he never felt the need to boast about it.

I am really sad by the sudden demise of my Perriappa, but I know that we will all continue to look back and celebrate his life and legacy. May his soul rest in peace.

"All the world's a stage, and all the men and women merely players. They have their exits and their entrances, and one man in his time plays many parts" - William Shakespeare

***Niece,***
***Shaampavy Rathakrishnan***
***Bloomington, Illinois, USA***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## To our dearest Vicks Perriappa,

We are honored and blessed to have known you in this lifetime and to call you our Perriappa. Though we were very little the last time we visited Sri Lanka, you sat and played with us for hours on end which is all two little girls could ask for. As time went on and we grew up, we got to learn about the intellectual side you possessed as well. Anyone who had met you can easily say you were one of the most humble, kind and intelligent individuals they knew. To hear how well-respected and distinguished you were in the mathematics field, as well as your dedication to your colleagues and students is truly admirable. We could not be more proud and inspired to have you as our uncle.

Thank you for being a part of our childhood, for spoiling us every chance you and Perriamma could, and for proving to us that distance means nothing when it comes to the people you care about.

Time is precious and we wish we had the chance to spend more time with you. You were taken from us too soon, but your legacy will live on forever in our hearts as well as all the lives you have impacted. We love you immensely, Perriappa.

With love always from your nieces,
Thamara and Abira



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தன்னலங் கருதாச் சேவையாளன்

'தோன்றின் புகழொடு தோன்றுக
அஃதிலார் தோன்றலின் தோன்றாமை நன்று'

என்பது வள்ளுவன் வாக்கு. இதற்கமைவாகத் தோன்றிப் புகழ் மணக்க வாழ்ந்து இன்று எம்மை விட்டுப் பிரிந்தவர் பேராசிரியர் இரத்தினம் விக்கினேஸ்வரன்.

பேராசிரியர் அவர்களின் நிலைத்த புகழுக்குக் காரணம் அவரின் தன்னலங்கருதாத சேவை மனப்பாங்கே எனலாம். அவர் ஓர் கர்மவீரர். அயராத உழைப்பாளி. தான் எடுத்துக்கொண்ட காரியத்தினைச் சாதிப்பதில் உறுதியும் திடசங்கற்பமும் கொண்டவர். இளமைக் காலம் முதலாகவே இத் திறன்கள் அவரிடம் ஊறிக் கிடந்தன.

இவர் இணுவில் சைவப்பிரகாச வித்தியாசாலை, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி என்பனவற்றில் பயின்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கு 1978 இல் தெரிவானார். 1982 ஆம் ஆண்டு கணிதத்தில் சிறப்புப் பட்டதாரியானார். அதைத் தொடர்ந்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கணித புள்ளிவிபரவியல் துறையில் இரண்டு வருடங்கள் (1982-84) தற்காலிக விரிவுரையாளராகப் பணியாற்றினார். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கல்விகற்ற காலந் தொட்டு அவரை நான் நன்றாக அறிவேன். அன்றிலிருந்து இன்றுவரை சுமார் நாற்பத்து நான்கு ஆண்டு காலத் தொடர்பு அவருக்கும் எனக்கும் இருக்கின்றது.

1984 ஆம் ஆண்டிலிருந்து கிழக்குப் பல்கலைக்கழகத்தில் பணியாற்றும் வாய்ப்பு அவருக்குக் கிடைத்தது. ஆரம்பத்தில் இரண்டு வருடங்கள் (1984-86) அங்கு தற்காலிக விரிவுரை யாளராகப் பணியாற்றி 1987 இல் நிரந்தர விரிவுரையாளராக நியமனம் பெற்றார். கிழக்குப் பல்கலைக்கழகத்தில் இரட்ணம் விக்கினேஸ்வரன் அவர்களது பணி குறிப்பிட்டுச் சொல்லத்தக்க விதத்தில் அமைந்தது. கணிதத்துறை அப் பல்கலைக்கழகத்தில் வலுப்பெறுவதற்கு முழுமையான அர்ப்பணிப்பினை அவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்கியிருந்தார். விரிவுரையாளராக, சிரேஷ்ட விரிவுரையாளராக, துறைத்தலைவராக கணிதத்துறையில் பணியாற்றிய காலங்களில் தனது திறமையாலும் சேவையாலும் அத்துறையின் முன்னேற்றத்திற்கு அரும்பாடுபட்டு உழைத்திருக்கின்றார். குறிப்பாக, கணிதத்தில் விசேட கற்கை நெறி (Special Degree in Mathematics) உருவாவதற்கு முக்கிய காரணகர்த்தாவாக இவர் விளங்கியுள்ளார். சிறப்புக் கற்கைநெறிக்கான பாடத்திட்டத்தினை வடிவமைத்தல், வளங்களை ஒன்று திரட்டல், மாணவர்களுக்கு உரிய முறையில் கற்பித்தல் என்பவற்றுக்குப் பலமான தூணாகக் கைகொடுத்தவர் பேராசிரியர் இரத்தினம் விக்கினேஸ்வரன். நூற்றுக்கணக்கான கணிதத்துறை மாணவர்களைக் கிழக்குப் பல்கலைக்கழகத்தினூடாக வெளிக்கொணர்ந்த பெருமை இவருக்கிருந்தது. இவற்றை மிக இக்கட்டான காலத்தில் அருந்தலான வளங்களுடன் இவர் செய்து முடித்திருக்கின்றார் என்பதை நினைத்துப் பார்க்கும் போது வியப்பாக இருக்கின்றது.

இதற்கிடையில் தனது அறிவையும் ஆற்றலையும் வளர்த்துக் கொள்வதிலும் அவர் பின்னிற்கவில்லை. 1988 இல் புலமைப் பரிசில் பெற்று பிரித்தானியாவில் உள்ள 'சசெக்ஸ் பல்கலைக்கழகத்தில்' கணிதத்தில் கலாநிதிப் பட்டப் படிப்பினைத் தொடர்ந்தார். 1991 ஆம் ஆண்டு கலாநிதிப் பட்டத்தினைப் பெற்றுக் கொண்டார். 2000 ஆம் ஆண்டு கலாநிதிப்பட்டப் பின்கற்கை நெறிக்கான பொதுநலவாய புலமைப்பரிசில் (Post Doctorial Studies Under Common Wealth Fellowship) பெற்று மீண்டும் சசெக்ஸ் பல்கலைக்கழகத்தில் 2000-2001 காலப்பகுதியில் ஆய்வுகளில் ஈடுபட்டார். தனது ஆய்வு முடிவுகளை சர்வதேச மகாநாடுகளிலும் சர்வதேச ஆய்விதழ்களிலும் பிரசுரித்தார். இங்ஙனம் தன்னை வளப்படுத்துவனூடாக 'ஊருணி நீர் நிறைந்தாற்போல்' தன்னை நம்பியிருக்கும் நிறுவனத்திற்கும் மாணவர்களுக்கும் பெரும்பணியாற்ற அவர் முயன்றுள்ளார். ஆராய்ச்சிகளை மேற்கொள்வதிலும் அவை தொடர்பான கருத்துக்களைப் பகிர் வதிலும் அவர் காட்டிய ஆர்வமும் சுறுசுறுப்பும் கவனிக்கத்தக்கன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையில் மட்டுமல்லாது இங்கிலாந்து, கனடா, பிரான்ஸ் முதலான நாடுகளில் நடைபெற்ற ஆய்வு மாநாடுகளில் பங்கேற்று தனது ஆய்வு முடிவுகளைப் பகிர்ந்து கொண்டார். இவை மாணவர்களுக்கும் மற்றவர்களுக்கும் முன்மாதிரியாக அமைந்ததோடு அவர் மீது பெரும் மதிப்பையும் வளர்த்தன.

கிழக்குப் பல்கலைக்கழத்தில் பலகாலம் பணியாற்றிய இவரின் சேவை 2004 ஆம் ஆண்டு முதலாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகதத்துக்குக் கிடைக்கத் தொடங்கியது. அமரத்துவம் அடையும் வரை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் அவர் ஆற்றிய பணிகளும் வகித்த பதவிகளும் குறிப்பிட்டுச் சொல்லத்தக்கவை. தனது திறமையால் பேராசிரியராக உயர்ந்த இரத்தினம் விக்கினேஸ்வரன் கணித புள்ளிவிபரவியல் துறையின் தலைவராக (2006-2009, 2013-2016), விஞ்ஞான பீடத்தின் பீடாதிபதியாக (2016-2017), யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராக (2017-2019) பணியாற்றியிருக்கின்றார். தான் சார்ந்த துறையின் பெருமையையும் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் சிறப்பினையும் அவர் தனது அர்ப்பணிப்பு மிகுந்த பணியினால் உயர்த்தியிருக்கின்றார். எல்லாவற்றையும் விட மாணவர்களின் மனம் நிறைந்த பேராசிரியாராக விளங்கியிருக் கின்றார். மாணவர்களுக்குக் கற்பிப்பதில் அவருக்கு அலாதிப் பிரியம். உடல் உபாதைகளை ஒருபுறம் ஒதுக்கிவைத்து விட்டு கற்பித்தலில் ஆர்வத்துடன் ஈடுபடுவார். தனது வாழ்வின் இறுதிநாள் வரை (17.02.2023) இப் பணியினை ஆத்மார்த்தமாகவும் திருப்தியாகவும் அவர் செய்து வந்ததைக் காணலாம். கடைசி மணித்துளியிலும் கடமையை மறக்காது செயற்பட்ட அவரின் பண்பினை எண்ணி வியக்காமல் இருக்க முடியாது.

பேராசிரியர் இரத்தினம் விக்கினேஸ்வரன் அவர்கள் ஆசிரியர் சங்கத்துடனும் தன்னை வலுவாக இணைத்துக் கொண்ட ஒருவர். சங்கத்தினூடாக ஆசிரியரின் நலன்களுக்காக அவர் ஆற்றி வந்த சேவைகள் குறிப்பிடத்தக்கவை. பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தின் தலைவராகவும் பல்கலைக்கழக ஆசிரியர் சம்மேளனத்தின் உப தலைவராகவும் பணியாற்றியவர். அவ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேளையில் பல்கலைக்கழக ஆசிரியர்களின் சம்பள உயர்வு கோரிய போராட்டம் நிகழ்ந்த போது அவரின் உள்ளூரமும், துணிவும், திறமையும் துலாம்பரமாக வெளிப்பட்டு நின்றன. எந்தவிதமான அழுத்தங்களுக்கும் அஞ்சாது ஆசிரியர் நலனுக்காகப் பணியாற்றி அதில் வெற்றியும் பெற்றுத் தந்தார்.

உலக வங்கியின் நிதி அனுரசணையின் கீழ் ஆரம்பிக்கப்பட்ட IRQUE-QEF செயற்றிட்டத்தின் இணைப்பாளராக இருந்து 2006-2010 ஆண்டுகள் காலப் பகுதியில் அதனைத் திறம்படச் செயற்படுத்திய பெருமையும் இவருக்கு இருக்கின்றது.

பேராசிரியர் இரத்தினம் விக்கினேஸ்வரனுக்கு அழகான குடும்பம் உள்ளது. அன்பு நிறைந்த மனைவி பவானி; விசாகன், வாசனா எனும் அருமையான இரண்டு செல்லக் குழந்தைகள் என மகிழ்ச்சியோடு அவர் வாழ்ந்தார். இவர்கள் மீது இணையில்லா பாசமும் பற்றும் அவருக்கு இருந்தது. அவர்களின் நலன்கள், முன்னேற்றங்கள் குறித்து அவர் அடிக்கடி அக்கறைப்படுவார். தனது சகோதரர்கள், மனைவியின் குடும்பத்தினர் என்போர் இடத்திலும் அவருக்கு மதிப்பும் அன்பும் இருந்து வந்துள்ளது. இளவயது தொடக்கம் குடும்பப் பொறுப்பினைச் சுமந்து பழகிய அவர் குடும்ப உறவுகளின் பெறுமதியை உணர்ந்து வாழ்ந்ததில் வியப்பில்லை.

தனது ஊரின் மீதும் உறவுகள் மீதும் அவருக்கு மதிப்பு அதிகம். ஊரவர்களும் அவர் மீது பெரும் மரியாதை காட்டி வந்தனர். அவரிடம் ஆலோசனை பெறுவது அவருக்கு உரிய கௌரவம் வழங்குவது என்பதில் அவர்கள் ஒருபோதும் பின்னின்ற தில்லை. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராக அவர் தெரிவுசெய்யப்பட்ட போது ஊரெல்லாம் கூடி அவருக்கு இணுவிலில் நிகழ்த்திய பாராட்டு விழா ஊரில் அவருக்கு இருந்த மதிப்பிற்கும் கௌரவத்திற்கும் சிறந்த எடுத்துக்காட்டு. வேலைப் பழுக்களுக்கிடையிலும் ஊர் தொடர்புகளையும் உறவுகளையும் அவர் பேணிவந்திருக்கின்றார். வாழ்நாளின் இறுதி மணித்துளி வரை அதனை அவர் கைவிடவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணுவில் கந்தன் மீது பேராசிரியருக்குப் பெரும் பக்தி இருந்தது. தினமும் அதிகாலையில் எழுந்து உதயகாலப் பூசையினைப் பார்ப்பதற்காக அவர் செல்வது வழமை. அந்த ஆலயத்தின் அறங்காவல் சபையின் உறுப்பினாராகவும் தலைவர், செயலாளர், பொருளாளர் எனும் பதவிகளிலும் பல ஆண்டுகள் பணியாற்றியிருக்கின்றார். ஆலயம் மிகப் பிரமாண்டமாக கோபுரங்கள் சுற்றுப் பிரகாரங்கள், வீதிகள் என்பவற்றுடன் விளங்க இவர் பங்களிப்பும் கணிசமாக இருந்துள்ளது.

பலர் பிறந்து வாழலாம். ஆனால் அவர்களுள் ஒரு சிலர் மட்டுமே தம்மை அர்ப்பணம் செய்கின்றனர். அவர்களுள் ஒருவரே பேராசிரியர் இரட்ணம் விக்கினேஸ்வரன். அவர் மிகச் சிறந்த தியாகி. தன்னையே கடமைக்காக அர்ப்பணம் செய்தவர். அவர் ஓர் ஒப்பரிய சேவையாளர். கடமையை ஒருபோதும் தட்டிக் கழிக்காதவர். குறைவாகப் பேசுவார். ஆனால் நிறைய விடயங்களை அமைதியாகச் செய்து முடிப்பார். அவரது அர்ப்பணிப்பு மிக்க சேவைகளை எழுதி முடிப்பது என்பது இயலாது.

பல்கலைக்கழகத்தை மட்டுமல்ல குடும்பத்தை நண்பர்களை, தன்னுடன் பயின்றோரை, ஊரை, உறவுகளை, தான் வாழ்ந்த தேசத்தை நேசித்த உத்தமமான மனிதர் இவர். நேர்மையானவர்; தன்னலங்கருதாதவர்; திறமைசாலி; இன்று அவர் எம்மை விட்டுப் பிரிந்தாலும் எல்லோர் மனதிலும் நீங்காது நிறைந்திருக்கின்றார். தோன்றாத் துணையாய் அவர் எப்போதும் எம்முடன் கூட வருவார். அவரின் ஆத்மா சாந்தியடைய உங்கள் எல்லோருடனும் சேர்ந்து எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்.

**பேராசிரியர் சிறீ. சற்குணராசா**
**துணைவேந்தர் யாழ்ப்பாணப்**
**பல்கலைக்கழகம்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் உயர்திரு பேராசிரியர் இரத்தினம் விக்கினேஸ்வரன்

இலங்கை கிழக்குப் பல்கலைக்கழத்தின் உபவேந்தர் என்றவகையில் அமரர் உயர்திரு பேராசிரியர் ரெட்ணம் விக்கினேஸ்வரன் அவர்களின் 31ஆம் நாள் அந்தியேட்டி நினைவுமலரில் இலங்கை கிழக்குப் பல்கலைக்கழகம் சார்பாக எனது கடந்தகால நினைவலைகளை மீட்டுப் பார்ப்பதில் பெருமிதமடைகின்றேன்.

அமரர் பேராசிரியர் விக்கினேஸ்வரன் அவர்கள் 1984ஆம் ஆண்டில் தற்காலிக விரிவுரையாளராகக் கிழக்குப் பல்கலைக்கழக விஞ்ஞான பீடத்தின் கணிதவியல் திணைக்களத்தில் இணைந்து கொண்டார். மூன்றாண்டு (1984-1986) காலம் தனது அயராத சேவையின் அடிப்படையிலும், தனது திறமையினாலும் 1987ஆம் ஆண்டு உதவி விரிவுரையாளராக நிரந்தர சேவையில் அமர்த்தப்பட்டார். 1988ஆம் ஆண்டில் இலங்கை கிழக்குப் பல்கலைக்கழகம், பிரித்தானியாவிலுள்ள சசெக்ஸ் பல்கலைக் கழகம் ஆகியவற்றின் (Sussex Link Programme) புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்டு கணிதத் துறையில் கலாநிதிப் பட்டத்தினை 1991ஆம் ஆண்டில் பெற்றார். 1992ஆம் ஆண்டு மாசி மாதம் 18ஆம் திகதியன்று சிரேஸ்ட விரிவுரையாளர் தரம் II இல் பதவியுயர்வு பெற்றதுடன் கணிதத் துறையில் விசேட கற்கை நெறியினை (Special Degree in Mathematics) ஆரம்பிப்பதற்கு அடித்தளமிட்டவர் என்பதுடன், அதன் பெருமை இவரையே சாரும்.

1994ஆம் ஆண்டு முதல் 1997ஆம் ஆண்டுவரை மூன்றாண்டு காலப்பகுதிகளில் கணிதவியல் துறைத் தலைவராகவும், கணினிப் பிரிவுத் தலைவராகவும் (Head,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Department of Mathematics & Computer Unit) கிழக்குப் பல்கலைக்கழகத்திற்கும், விஞ்ஞான பீடத்திற்கும் அளப்பெரும் சேவையாற்றினார். இவரது சேவைக்காலம் மேலும் மூன்றாண்டுகாலம் 1997 முதல் 2000 வரை) தொடர்ந்தது. இவர் 1998ஆம் ஆண்டில் சிரேஸ்ட விரிவுரையாளர் தரம் I இற்குத் தரமுயர்த்தப்பட்டார். கடந்த 2000-2001 காலப்பகுதியில் கலாநிதிப் பட்டப் பின் கற்கை நெறிக்கான பொதுநலவாய புலமைப்பரிசில் (Post Doctoral Studies under Commonwealth Fellowship-Sussex, United Kingdom) பெற்று மீண்டும் பிரித்தானியாவிலுள்ள சசெக்ஸ் பல்கலைக்கழகத்தில் கற்றுத் தேறினார். இவரால் குறிப்பிட்ட காலத்தினுள் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சிக் கட்டுரைகள் சர்வதேச மட்டத்தில் பிரசுரிக்கப்பட்டன.

கடந்த 2002ஆம் ஆண்டுமுதல் மீண்டும் கணிதவியல் துறைத்தலைவராகவும், கணினிப் பிரிவுத் தலைவராகவும் சேவை ஆற்றியதுடன் ஊழியர் அபிவிருத்தி நிலையப் பணிப்பாளராகவும் (Staff Development Centre) கடமையாற்றினார். இக்காலத்தில் ஊழியர்களுக்காக அதிகளவான பயிற்சிப் பட்டறைகள், பயிலரங் கங்கள், கருத்தரங்குகள் போன்றவை ஒழுங்கமைக்கப்பட்டு நடாத்தப்பெற்றன. இவரது சேவைக் காலப்பகுதியில் கணினி விஞ்ஞானமாணி (Bachelor of Computer Science (B.CSc)) மற்றும் தகவல் தொழிநுட்பமாணி (Bachelor of Information Technology (BIT)) போன்ற கற்கைநெறிகளை ஆரம்பிப்பதற்கு முயற்சிகளை மேற்கொண்டிருந்தார். இதன் பயனாக கணினி விஞ்ஞானமாணி கற்கைநெறி இவரது காலத்தில் ஆரம்பிக்கப்பட்டது. கணினிப் பிரிவினை தகவல் தொடர்பாடல் தொழிநுட்பப் புலமாக (Centre for Information & Communication Technology) தரமுயர்த்துவதற்கு அரும்பாடுபட்டவர். இவரது காலப்பகுதியிலேயே கணினிக் கட்டமைப்பு புத்துருவாக்கம் பெற்றதென்றால் மிகையாகாது. இவரது காலத்திலேயே கிழக்குப் பல்கலைக்கழகத்தின் விஞ்ஞான


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பீடத்தில் முதன்முதலாக ஆண்டிறுதிப் பரீட்சை (Year End System) முறைமையிலிருந்து அரையாண்டு (Semester System (GPA System)) முறைமைக்கு இவரது தலைமையின்கீழ் அறிமுகம் செய்யப்பட்டது. இவரது காலப்பகுதியில் கணிதத்துறையின்கீழ் புள்ளிவிபரவியல் (Statistics) மற்றும் கணினி விஞ்ஞானம் (Computer Science) போன்ற பாடங்களும் அறிமுகப்படுத்தப் பட்டன.

இவர் கிழக்குப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தின் தலைவராகவும் (President/University Teachers' Association (UTA)) ஒரு சிறந்த தொழிற்சங்கவாதியாகவும் செயற்பட்டவர். விஞ்ஞான பீடத்தினால் நடாத்தப்பபட்ட வெளிவாரி விஞ்ஞானமாணி கற்கை (External Degree Programme - Physical Science) நெறியினைத் தொடர்ந்து நடாத்துவதற்கு அரும்பாடு பட்டவர். கிழக்குப் பல்கலைக்கழக இந்து மாணவர் மன்றத்தின் பெரும் பொருளாளராகவும், Senior Common Room Society யின் தலைவராகவும் சேவையாற்றினார். அமரர் பேராசிரியர் ரெட்ணம் விக்கினேஸ்வரன் அவர்கள் கல்வியணி, நிருவாக அணி, கல்வியணிசாரா மற்றும் ஏனைய உத்தியோகத்தர்களின் நன்மதிப்பையும் பெற்றிருந்தார்.

1984ஆம் ஆண்டு தொடக்கம் 2004ஆம் ஆண்டு காலப் பகுதிகளில் இவரிடம் கல்விகற்ற மாணவர்கள் ஒழுக்கசீலர் களாகவும், கல்விமான்களாகவும், பல்கலைக்கழகங்களில் விரிவுரையாளர்களாகவும் மற்றும் அரச, அரச சார்பற்ற மற்றும் தனியார் நிறுவனங்களில் உயர்பதவிகளை வகிப்பவர்களாகவும் காணப்படுவதைக் கண்கூடாகக் காணக்கூடியதாகவுள்ளது.

துரதிஸ்டவசமாக கடந்த 2004ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியில் கிழக்குப் பல்கலைக்கழகத்திலிருந்து இடமாற்றம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கணித, புள்ளிவிபரவியல் துறையில் இணைந்து தனது பணியினைத் தொடர்ந்தார்

அமரர் பேராசிரியர் இரத்தினம் விக்கினேஸ்வரன் அவர்கள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் உபவேந்தராகச் சேவையாற்றிய காலப்பகுதியில் (ஆவணி 2017 முதல் வைகாசி 2019 வரை) நான் திருகோணமலை வளாக முதல்வராக சேவையாற்றியதால் உபவேந்தர் மற்றும் வளாக முதல்வர்களுக்கான குழுக்கூட்டங்களில் இவருடன் இணைந்து பணியாற்றக்கிடைத்தமை பெரும்பாக்கியமாகக் கருதுகிறேன். அவரது அனைவரையும் அரவணைத்துப்போகும் சாதாரண மனப்பாங்கும், சமூக சேவை மனபாங்கும் அவரது சிறப்பான பல்கலைக்கழகம் சார்ந்த வினைத்திறனான நிருவாகத்திறனை கிழக்குப் பல்கலைக்கழத்தின் உபவேந்தர் என்றவகையில் மெச்சுகிறேன்.

இவரது மறைவானது கல்விச் சமூகத்தினருக்கும், மாணவர் சமூகத்தினருக்கும் அவரது குடும்பத்தினருக்கும் பேரிழப்பாகும். இவரது குடும்பத்தினருக்கு கிழக்குப் பல்கலைக்கழகம் சார்பாக எமது சிரம்தாழ்த்திய இரங்கலையும், அனுதாபங்களையும் சமர்ப்பிக்கின்றேன்.

**பேராசிரியர் வல்லிபுரம் கனகசிங்கம்**
**உபவேந்தர்**
**இலங்கை கிழக்குப் பல்கலைக்கழம்**
**வந்தாறுமூலை**
**செங்கலடி**
**09.03.2023**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மண்ணில் நீங்கா இடம்கொண்டு நிலைத்திருக்கும் பேராசிரியர் இரத்தினம் விக்கினேஸ்வரன் அவர்களின் மகத்தான சேவைக்கான ஒரு நினைவுப்பகிர்வு

பேராசிரியர் விக்கினேஸ்வரன் அவர்கள் யாழ் பல்கலைக்கழகத்தின் கணிதவியல் மற்றும் புள்ளிவிபரவியல் துறையில் கணிதவியல் பேராசிரியராகவும், துறைத் தலைவரா கவும், விஞ்ஞான பீடத்தின் பீடாதிபதியாகவும், யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராகவும், கடமையாற்றினார். மறைந்த பேராசிரியர் யாழ் பல்கலைக் கழகத்தில் இணைய முன்பு கிழக்குப் பல்கலைக்கழகத்தில் சிரேஷ்ட விரிவுரையாளராக பணிபுரிந்தார்.

அவர் தனது அதிகளவான நேரத்தை பல்கலைக் கழகத்திலும் ஆலயங்களிலும் தான் செலவிட்டார். நாம் தற்போது பேசுகின்ற வாழ்க்கை தொழில் சமநிலையில் அவர் தனது தொழிலுக்கு கூடுதலான நேரத்தையும், தனிப்பட்ட வாழ்க்கைக்கு குறைந்தளவான நேரத்தையும் செலவிட்டு தொழிலுக்கு முன்னுரிமை அளித்திருந்தார். அவர் எம்மை விட்டுப் பிரிகின்ற அந்நாளில் கூட விரிவுரையாற்றியுள்ளமை தொழிலில் அவர் கொண்டிருந்த ஈடுபாட்டை சுட்டி காட்டி நிற்கின்றது.

அவர் துணைவேந்தராக இருந்த காலத்தில் யாழப்பாணப் பல்கலைக்கழகத்தின் வவுனியா வளாகமாக இருந்த போது எமது நிறுவனத்தினை வவுனியாப் பல்கலைக்கழகமாக தரமுயர்த்த


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும் என்ற எமது நீண்ட கால கோரிக்கையினை ஏற்று தூரநோக்கோடு அதற்கான முழுமையான ஆதரவினை மனப்பூர்வமாக வழங்கி எமது உயர்கல்வி நிறுவனத்தின் வளர்ச்சியில் பாரிய பங்கினை வழங்கி எமது பிரதேசத்திற்கும் நாட்டுக்கும் வரலாற்றுப் பங்களிப்பினை மேற்கொண்டார்.

பேராசிரியர் அவர்கள் பெருமை வேண்டாதவராகவும், எளிமை விரும்பியாகவும், சாதுவானவராகவும், அமைதியானவராகவும், தீர்க்கமான முடிவுகளை மேற்கொள்ளும் சிறந்த மனிதராகவும் வாழ்ந்தார்.

அன்னாரது ஆத்மா சாந்தியடைய எமது பல்கலைக் கழகத்தின் சார்பாகவும், தனிப்பட்ட முறையிலும் இறைவனை பிரார்த்திப்பதோடு அவரது குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**பேராசிரியர். த. மங்களேஸ்வரன்,**
**துணைவேந்தர்,**
**வவுனியாப் பல்கலைக்கழகம்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முனைப்போடு முயன்று உயர்வு கண்ட பேராசிரியர் இரத்தினம் விக்னேஸ்வரன்

"நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்து இவ்வுலகு"

என்ற வள்ளுவன் வாக்குக்கு இணங்க எம்முடன் இணைந்து பயணித்து, இவ் உலக வாழ்வில் தனக்கான பயணத்தை நிறைவு செய்து இயற்கை எய்திய பேராசிரியர் இரத்தினம் விக்னேஸ்வரன் அவர்களது நினைவுகள் எம்மனங்களில் என்றும் நீங்காதவை.

மூன்று தசாப்தங்களுக்கு மேலாக கிழக்கு, மற்றும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இணைந்து விஞ்ஞான பீடத்தின் கணிதத்துறை சிறப்புப் பட்டதாரியாகவும், விரிவுரையாளராகவும், துறைத்தலைவராகவும், பீடாதிபதியாகவும், துணைவேந்தராகவும், கல்வி சார் தொழிச்சங்களின் தலைவராகவும், முனைப்போடு முயன்று உயர்வு கண்டவர் பேராசிரியர் விக்னேஸ்வரன் அவர்கள்.

இளமைக்காலம் தொடக்கம் ஓய்வு நிலையை நெருங்கிய இக்காலம் வரையும் கணிதத்துறைசார் கற்றலிலும், கற்பித்தலிலும் இயல்பாகவே ஆர்வம் கொண்டவராக திகழ்ந்தார். இவ் உலகை விட்டு நீங்கும் கடைசிச் சில மணிநேரங்கள் வரை தனது மாணவர்களுக்கு விரிவுரை நடாத்தியமை கற்பித்தலில் அவருக்கான ஈடுபாட்டை எடுத்துக்காட்டுகின்றது.

கிழக்கிலங்கைப் பல்கலைக்கழகத்தில் 1984 இல் உதவி விரிவுரையாளராக இணைந்து கொண்ட இரத்தினம் விக்னேஸ்வரன் அவர்கள் தனது சேவைக்காலத்துள் பல நிர்வாக பதவிகளை வகித்துள்ளார். தனது கலாநிதிப் பட்டப்படிப்பை ஐக்கிய இராட்சியம் சசெக்ஸ் (Sussex) பல்கலைக்கழகத்தில் நிறைவு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்து, கலாநிதிப் பட்டம் பெற்றதோடு, ஆய்வுகளையும் மேற்கொண்டு, கனடா, இங்கிலாந்து மற்றும் இந்தியா போன்ற நாடுகளில் நடைபெற்ற சர்வதேச அறிவியல் மாநாட்டில் தனது ஆய்வுக் கட்டுரைகளையும் சமர்ப்பித்துள்ளார். கிழக்கு பல்கலைக்கழகத்தில் கணித புள்ளிவிபரவியல் துறைத் தலைவராக ஒன்பது ஆண்டுகள் (1994-2000, 2002-2004) பதவி வகித்த கலாநிதி இரத்தினம் விக்னேஸ்வரன் கணிதத்தில் சிறப்பு பட்டப்படிப்புக்கான கலைத்திட்ட உருவாக்கத்திலும் அப்பட்டப்படிப்பினை ஆரம்பிப்பதற்கும் தனது பங்களிப்பினை நல்கினார். இடர் மிகுந்த காலங்களிலும் தளராது கல்வி சார் நிர்வாகப் பணிகளில் தன்னை முனைப்போடு ஈடுபடுத்தி வந்துள்ளார்.

2004 இல் கிழக்குப் பல்கலைக்கழகத்தில் இருந்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் சிரேஷ்ட விரிவுரையாளராக இணைந்து கொண்ட கலாநிதி இரத்தினம் விக்னேஸ்வரன், எமது விஞ்ஞானபீடத்தில் ஆறு ஆண்டுகளாக (2006-2009, 2013-2016) கணித புள்ளிவிபரவியல் துறைத்தலைவராக பதவி வகித்தது மட்டுமன்றி பல நிர்வாகக் குழுக்களிலும் தன்னை இணைத்துக் கொண்டு செயற்பட்டு வந்தார். கல்வி சார் பணியாளர்களின் நலனில் மிகுந்த அக்கறை கொண்ட அவர் யாழ் பல்கலைக்கழகத்தின் விஞ்ஞான ஆசிரியர் சங்கத் (JUSTA) தலைவராகவும், ஆசிரியர் சங்கத் (JUTA) தவைராகவும், ஆசிரியர்களின் கூட்டமைப்புச் சங்க (FUTA) துணைத் தலைவராகவும் பதவிகள் வகித்திருந்தார்.

2015 ஆம் ஆண்டு கலாநிதி விக்னேஸ்வரன் கணிதத்தில் இணைப் பேராசிரியராக பதவியுயர்வு பெற்று, 2019 இல் பேராசிரியரானார். 2016 இல் யாழ் பல்கலைக்கழகத்தின் விஞ்ஞான பீடாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டு ஒரு வருட காலத்துள் துணைவேந்தராக நியமிக்கப்பட்டார். அவர் துணைவேந்தராக


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதவி வகித்த காலத்தில், யாழ் பல்கலைக்கழகத்தின் விஞ்ஞான பீடத்தினர், மேற்க்கு நோர்வே பல்கலைக்கழகத்துடன் இணைந்து ஒழுங்கு செய்த பிரமாண்டமான ஆய்வு மாநாட்டில், இலங்கையிலும், உலக நாடுகள் பலவற்றிலிருந்தும் நானூறுக்கும் மேற்பட்ட ஆராய்ச்சியாளர்கள் பங்கு கொள்வதற்கும், பௌதிகவியற்துறையில் தூய சக்தி ஆராய்ச்சி ஆய்வுகூடம் நிறுவுவதற்கும் எமது விஞ்ஞான பீடத்திற்கு உறுதுணையாக இருந்தார்.

முப்பது ஆண்டுகளுக்கு மேலான தனது பல்கலைக்கழகப் பணியில் பதினெட்டு ஆண்டுகளை நிர்வாகப் பணியில் நிறைவு செய்து, ஆரவாரம் இல்லாத எளிமையுடனும், அமைதியான ஆளுகையுடனும், முரண்பாடற்ற முகாமையுடனும் தன்பணிகளை ஆற்றி இவ்வுலக வாழ்வைவிட்டு நீங்கிச் சென்றுள்ளார்.

உயர்ந்தோர்தம் தூல வடிவம் எம்மை விட்டுச் நீங்கிச் சென்றாலும் அவர்கள் விட்டுச் சென்ற அடையாளங்களால், சூக்குமவடிவில் எம்முடன் வாழ்ந்து கொண்டிருப்பர் என்ற நம்பிக்கையோடு, அவரது இழப்பால் துயருறும் பல்கலைக்கழக சமூகங்களும், அன்பானவரை இழந்து நிற்கும் அவரது குடும்பமும், உறவுகளும், ஆறுதலைப் பெறவேண்டும்.

பிறப்பு இல்லாமலே நாளொன்று இல்லை
இறப்பு இல்லாமலும் நாளொன்று இல்லை
இரண்டும் இல்லாவிடில் இயற்கையும் இல்லை
இயற்கையில் ஆணைதான் ஞானத்தில் எல்லை

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

**சிரேஷ்ட பேராசியர் புண்ணியமூர்த்தி ரவிராஜன்**
**விஞ்ஞான பீடாதிபதி,**
**யாழ். பல்கலைக்கழகம்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்



## பேராசிரியர் விக்கினேஸ்வரன் பெரு(மா)மனிதனின் நினைவலைகளில்

இவர் மிகவும் எளிமையான, புன்முறுவலுடன் எவருடனும் பழகியதனால் பலரின் நனமதிப்பைப் பெற்று பல கோணங்களிலும் கிழக்கிலங்கை பல்கலைக்கழகத்தில் வெவ் வேறு பதவிகளை வகித்தார். தலைவர், கணிதத்துறை, பகுதித்தலைவர் கணினிக்கான கற்கை நிலையம், Director SDC, தலைவர் ஆசிரியர்களின் தொழிற்சங்கம், சிரேஷ்ட பொருளாளர் இந்து மாமன்றம் போன்றனவாகும்.

தொழிற்சங்கத்தினை கட்டுக்கோப்புடன் 1990 களுக்கு பிந்திய காலத்தில் வளர்த்து எடுத்து வந்த நிலையில் உபவேந்தரின் செயல்களால் சில தொழிற்சங்க போராட்டங்களிலும் ஈடுபட்டு கோரிக்கைகளை வென்றெடுத்தார். ஏனைய ஊழியர்களின் நலன்களுக்காக மிக இக்கட்டான காலகட்டத்தில் பல்கலைக்கழகம் சீராக இயங்குவதற்கு ஆக வேண்டிய நிலைமைகளை முன்னிறுத்தி எவருடனும் கதைத்து பல்கலைக்கழகத்தில் முதலான தேவையை மாணவர்களுக்கு பெற்று கொடுத்தார். மேலும் பல்கலைக்கழகத்தின் பிள்ளையார் கோவிலை பராமரிக்கும் இந்துமாமன்ற சிரேஷ்ட பொருளாளராக பல வருடங்களாக சேவையாற்றிய காலத்தில் கோவிலும் பரிணாம வளர்ச்சி கண்டது.

தற்போதைய நிலையில் 24×7 என்ற 365 நாளும் பல்கலைக்கழகத்திற்கு சேவையை தளராது எவ்விடர் வரினும் செய்து வந்தார். அக்காலகட்டத்தில் E-mail இற்காக பேராசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனோ சபாரத்தினத்தின் பீடாதிபதி அலுவலகத்தின் தொலைபேசி இணைப்பை பயன்படுத்தி முதன்முதலாக அச்சேவையை கணினி பிரிவிற்கு ஏற்படுத்திக் கொடுத்து பலரும் பயனடைய செய்தார்.

2004இல் நடைபெற்ற குழப்பங்களினால் பாதிக்கப்பட்ட இவர் அச்சமயங்களில் யாழ். பல்கலைக்கழகத்தில் ஏற்பட்ட வெற்றிடத்திற்கு தன்னை அர்ப்பணித்து மாற்றலாகிச் சென்று துறைத் தலைவர், பீடாதிபதி, துணைவேந்தர் என்ற வேறுபட்ட பதவிகளுக்கு இவரின் ஆளுமையின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டு சேவை செய்த காலகட்டத்தில் அநாவசிய கருமங்களால் துணைவேந்தரின் பதவி இடை நடுவில் பறித்து எடுக்கப்பட்டதனாலோ என்னவோ அவரின் மனநிலை பாதிக்கப்பட்டு 24×7 வேலையிடத்தில் என்றது மாற்றமடைந்து பல்கலைக்கழகத்தில் ஆஜராகும் நேர அளவினை குறைத்து கொண்டார்.

எனினும் காலம் செல்ல அது மாற்றமாகி வந்து கொண்டிருந்த காலகட்டத்தில் மாணவர்களுக்கு விரிவுரைகளை 17ம் திகதி மாசி 2023 காலையில் எடுத்து, மதிய போசனத்திற்கு சென்று பிந்திய நேர 3.00 மணிக்கு விரிவுரைக்காக காத்திருந்த மாணவர்களுக்கு அதிர்ச்சி செய்தி பி.ப 2.30 அளவில் கிடைக்கப்பெற்றது. அந்த நேரமே எனக்கும் செய்தி நவீன தொழில்நுட்ப உலகில் கிடைக்கப் பெற்றது நாம் இருவரும் அதிர்ந்தே போய்விட்டோம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர் தனது பட்டப்பின்படிப்பை மேற்கொள்வதற்கு ODA இன் நிதிபுதவியுடன் University of Sussex, UK இனை சென்றடைந்து அங்கு எங்களுடன் பழகியநிலைமையில் எமது கலியாணம் இண்டன் ஈஸ்ற்காம் முருகன் கோவிலிற்கு குடும்பத்துடன் வந்து கலந்துகொண்டார். அதன் பின்னரே நாம் நெருங்கி பழகி வந்தோம்.

இந்த காலகட்டத்தில் பொதுநலவாய நாடுகளிற்கான fellowship கிடைத்து ஐக்கிய இராச்சியத்திற்கு University of Sussex இற்கு போக வேண்டிய காலகட்டத்தில் சிரேஷ்ட பொருளாளர் Director SDC இனை என்னிடம் ஒப்படைத்து அவரின் கணித ஆராய்ச்சிகளிக்காக ஐக்கிய இராச்சியம் பயணமானார். இது 2000 ஆண்டுகளில் நடைபெற்றது மீண்டும் திரும்பி வந்து பல்கலைகழகத்தில் தன் கடமைகளை பலரும் நாட்டை விட்டு வெளிநாடு சென்ற சமயத்திலும் பல்கலைக்கழகத்திற்கு சேவையாற்றும் உன்னத நோக்குடன் திரும்பியவர்.

யாழ் பல்கலைக்கழகத்திற்கு மாற்றமாகிச் சென்றாலும் பலவருடங்களாக ஆலடி சித்திவிநாயகரிற்கு ஆவணிச் சதுர்த்திக்கு நல்லபடியாக அபிஷேகம் செய்யும் படி கூறி தொடர்ந்து தனக்கென இரு பிள்ளைச் செல்வங்களை பெற்றெடுத்து பின்பும் செய்து வந்தார்.

Snr Prof P Vinobaba Dean, Faculty of Science, Eastern University, Vantharumooai, Chenkalady and

Dr (Mrs) M Vinobaba, Head, Department of Zoology, Eastern University, Vantharumoolai, Chenkaady


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எங்கள் கணிதப் பேராசானின் நினைவுகளில்

அந்த துக்ககரமான செய்தி எம்மை வந்தடைந்த போது நாம் அனைவரும் இடிந்து போனோம். மதியம் 1.30 வரை எம்மோடு ஒன்றாய் இருந்த எம் அன்பிற்கும் மதிப்பிற்கும் உரிய பேராசிரியர் இ.விக்கினேஸ்வரன் எம்மை விட்டுப் பிரிந்து விட்டார் என்பதை எம்மால் ஜீரணிக்கவே முடியவில்லை. அன்றைய தினம் 11-12 வரை முதலாம் வருட மாணவருக்கு கற்பித்த பேராசிரியர் எம்மையும் அவர் மிகவும் நேசித்த இந்த கணிதத் துறையையும் விட்டுப் பிரிந்து விட்டார் என்பதை ஏற்றுக்கொள்வது கடினமானதொன்றாகும். மூன்று தசாப்பதமாய் கற்பிப்பதை விருப்போடும், அர்ப்பணிப்போடும் செய்து வந்த ஒரு நல்ல ஆசான் எம்மை எல்லாம் தவிக்க விட்டு மிக நீண்ட தூரம் பயணித்து விட்டார்.

கிழக்குப் பல்கலைக்கழகத்தில் சிரேஸ்ட விரிவுரையாளராய், துறைத்தலைவராய் அர்ப்பணிப்போடு சேவையாற்றிய பேராசிரியர் 2004இல் எமது துறையில் இணைந்து கொண்டு சில வருடங்களில் துறைத் தலைவராய்ப் பொறுப்பேற்றுக் கொண்டார். அது ஒரு மிக நெருக்கடியான காலம். அவர் மட்டுமே ஒரு சிரேஸ்ட விரிவுரையாளர் ஆயினும் அவர் மிகுந்த அர்ப்பணிப்போது அக்கடமையை செவ்வனே நிறைவேற்றினார். அக்காலத்தில் அவர் ஒரு விரிவுரையாளராக, சக முகிழ்நிலை விரிவுரையாளர்களை ஆலோசனை கூறி வழிநடத்துபவராக, வினாத்தாள்களைத் தயாரிப்பவராக, விடைத்தாள் திருத்துபவராக, நிர்வாகச் செயற்பாடுகளைச் செய்ய வேண்டிய நிர்வாகியாக எனப் பல பாத்தரங்களை வகிக்க வேண்டி இருந்தது. நேரம் காலம் பார்க்காது ஓய்வு உறக்கம் துறந்து பம்பரமாய்ச் சுழன்று அவர் சேவையாற்றினார். இவற்றிற்கு மேலதிகமாய் உலக வங்கி உதவியில் கிடைத்த பீடத்தின் அபிவிருத்திக்கான செயற்திட்டம் ஒன்றையும் இணை இணைப்பாளராய் இருந்து செவ்வனே நிறைவேற்றிக் கொடுத்தார். அவரின் அர்ப்பணிப்புக் காரணமாய்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரை 2016இல் விஞ்ஞான பீடத்தின் பீடாதிபதியாக தெரிவு செய்தனர். அடுத்த வருடமே அவர் துணைவேந்தராக தெரிவு செய்யப்பட்டார். எந்தப் பதவிகளில் இருந்த போதும் அவர் கற்பித்தல் பணியை மிக விருப்போடு எந்த தொய்வும் இன்றி செய்து வந்தார் என்பது அவரது கணிதம் மீதான பற்றுதியைக் காட்டி நிற்கிறது.

பேராசிரியர் ஒரு மிகச் சிறந்த ஆசான் என்று எப்போதும் மாணவரால் மெச்சப்பட்டவர். அவரது வழிகாட்டல்களும் தூர நோக்கான சிந்தனைகளும் எப்போதும் அனைவராலும் மதிக்கப்படுகின்ற, கொண்டாடப்படுகின்ற ஒரு ஆளுமையாக அவரை உருவகப்படுத்தி இருந்தன.

பேராசிரியர் வெறுமனே பல்கலைக்கழகத்தோடு தனது சேவைகளை மட்டுப்படுத்திக் கொள்ளவில்லை. க.பொ.த. (உ/த) கணித பாட இணை கட்டுப்பாட்டாளராக, பரீட்சகராக தமிழ் மாணவ சமூகத்திற்கு தொண்டாற்றினார். மேலதிகமாக பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம், ஆலயப் பரிபாலனசபை, சமூக அமைப்புக்கள் போன்றவற்றினூடாக தமிழ் சமூகத்திற்கு தனது புலமையை பயன்படுத்தி சேவையாற்றினார்.

அவர் எம்மை விட்டு பிரிந்தாலும் அவரது நினைவுகளும் அவரது வழிகாட்டல்களும் எப்போதும் எம்மை வழிநடத்தும். இணுவைக் கந்தனின் காலடியில் இளைப்பாறும் அன்னாரது நல் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்போம்.

**திருமதி. நளினி சற்குணநாதன்**
தலைவர்,
கணிதமும் புள்ளிவிபரவியல் துறை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேராசிரியர் R. விக்னேஸ்வரன்....

விக்கி Sir, என்றாலே மனக்கண் முன் தோன்றும் நினைவலை வார்த்தைகள் எதுவுமற்ற பார்வை ஒன்றே. அந்தப் பார்வையின் அர்த்தத்தை அவர் முன் நிற்கும் நபரால் இலகுவாகப் புரிந்து கொள்ள முடியும். அறிவுக்கும், ஆளுமைக்கும், தலைமைத்துவத்திற்கும் எங்களைப் போன்ற அவரது மாணவர்களுக்கு ஒரு முன்மாதிரியானவர்.

கிழக்குப் பல்கலைக்கழகத்தில் 1984ல் இருந்து இருபது வருடங்கள் கடமையாற்றியவர். கிழக்குப் பல்கலைக்கழகத்தின் கணிதத்துறையில் ஏறத்தாழ எட்டு வருடங்கள் துறைத்தலைவராக பதவி வகுத்தவர். கணிதப் பிரிவில் தற்போது கடமையாற்றும் விரிவுரையாளர்களில் பெரும்பாலானோர் அவரிடம் கல்வி கற்றவர்கள் என்று சொல்லிக் கொள்வதில் பெருமையடை கின்றோம். "விக்கி Sir" எனும் சுடரால் ஏற்றி வைக்கப்பட்ட தீபங்கள் பல.

அனாவசியப் பேச்சுகளற்ற, அடுத்தவர் மனதைக் காயப்படுத்தாத அற்புதமான மனிதர் அவர். அவரது இழப்பு இரண்டு பல்கலைக்கழக சமூகங்களுக்கு மட்டுமல்ல ஒட்டுமொத்த கல்விச் சமூகத்திற்கும் பெரும் இழப்பாகும்.

நமக்கு உலகைக்காட்ட நம்மை உருவாக்கியவள் நம் தாய், உலகிற்கு நம்மைக்காட்ட நம்மை உருவாக்கியவர்கள் ஆசிரியர்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Sir, எங்கள் எல்லோருடனும் நீங்கள் வாழ்ந்த காலம் கனவாகிப் போனாலும் எங்கள் மனங்களில் உங்கள் முகம் எப்போதும் உயிர் வாழும், இம்மண்ணை விட்டு நீங்கள் விண்ணை நோக்கிச் சென்றாலும் நீங்கள் ஏற்றி வைத்த தீபங்கள் மண்ணில் பல தீபங்களை ஏற்றி வைத்தக்கொண்டிருக்கின்றன.

உங்கள் ஆத்மா சாந்திக்காக பிராத்தித்து நிற்கும்,

**துறைத் தலைவரும் கல்விசார்,**

**கல்விசாரா ஊழியர்களும்**

**கணிதத்துறை,**

**விஞ்ஞான பீடம்,**

**கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# *Vicky ........ a Dear Friend*

I had known VICKY for long since 1980s. My first memory, was that he had to fill application for Sussex link and he had gone to Jaffna and on his way back taken to Kurunagal Police. Administration was boiling there asking why he went to Jaffna now at this critical period? Well he returned a few days later and applied and went to Sussex. When he returned around 1991, they were housed University Quarters in front of us at Vantharumoolai. That is when our families grew closer, Latha and Bawani had more time with each other after we went to office. That period was of golden memories for each who were there during the period where parties were non stopping and occasions were building, completely free from what was going on, beyond the University or in the Country.

He was dedicated staff who used to be in his office cycling from wherever he was at 7.30 am and remained to 5.30 pm. This dedication was with him even when I met him in Jaffna later. It was unfortunate he had to leave with many others from Eastern University in 2004, which definitely caused a dent in that University, He was a person apart from is academics, a religious person and beyond a person who was willing to help anyone and had a great interest in religion and society. He would take the extra step to help anyone even at his own risk, very commendable.

I remember vividly when they returned from India with their two kinds to Sri Lanka, perhaps I was the one to received


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

I had known to him at all levels from Lecture to VC and officers of various trade unions including FUTA. He was a strength when I was terminated from Eastern University around year 2000. But it was unfortunate he did not have such backing when his term as VC was interrupted. He never was worried about it, when I spoke to him. But the loss was more society and values in principle.

I had visited him in Jaffna whenever I was there and had also stayed at their place in Kondavil. I served as VC of Eastern University when he was the VC at University of Jaffna and we met at various occasions, even after both of us had ended our terms. He was a person very simple but had great values and principles as I recognized and beyond was a religious person. He was also known, to be a very good teacher in Class which was seen from various notices that fill this day.

It is a great loss to our family, friends and me and the institutions associated with him and the society at large, but the greatest is to the family which was very closely knitted. I am sure all the "goods" that he had done would facilitate the family to overcome the loss and gain strength to grow into one that would reflect, as a symbol of his values.

With deep respect… to a Dear friend…
Jay.

Dr.T.Jayasingam - Professor Emeritus &
8th Vice Chancellor Eastern University

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*மதிப்புக்குரிய பேராசிரியரும் யாழ் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தருமான*

## தெய்வத்திரு. இரத்தினம் விக்னேஸ்வரன்

*அவர்களின் நினைவு மடலில் மிகவும் கனத்த இதயத்துடன் அவர் பற்றிய சில நினைவுகளை பகிர்கிறேன்.*

விக்கி சேர் அவர்களுக்கும் எனக்குமான தொடர்பு 1992 ஆம் ஆண்டு கிழக்குப்பல்கலைக் கழகத்தில் அவரின் மாணவனாக இருந்ததிலிருந்து ஆரம்பித்து பின்பு அவருடன் விரிவுரையாளராக பணியாற்றியது என 12 வருடங்கள் வரை தொடர்ந்தது. 2004 இல் நான் வெளிநாடு சென்றுவிட்டபடியால் அவருடனான நெருக்கமான தொடர்பு இல்லாமல் போனாலும் அவரின் மீதிருந்த அன்பும் மரியாதையும் என்று மாறியதில்லை. நான் 2012 ஆம் ஆண்டு கிழக்குப்பல்கலைக்கழகத்திற்கு துணைவேந்தராக நியமனம் பெற்று வந்த போது பல பேர் அன்போடு வாழ்த்துச் சொன்னார்கள். ஆனால் விக்கி சேரின் வாழ்த்தில் அன்பு, உண்மை, உரிமை அனைத்துமே நிறைந்திருந்தது. கிழக்குப்பல்கலைக்கழகத்தில் படித்து துணைவேந்தராக வந்த முதலாவது ஆள் என்று நான் அடைந்த சந்தோசத்தைவிட, தனது மாணவனொருவன் தான் படித்த பல்கலைக்கழகத்தில் துணைவேந்தராக வந்ததில் விக்கி சேர் அவர்கள் சந்தோசம் அடைந்ததை அவரின் வார்த்தை களிலிருந்து அறியக்கூடியதாயிருந்தது.

பல்கலைக்கழக ஆசிரியர்களில் சிலர் நல்லவர்களாக இருப்பார்கள் ஆனால் நன்றாக கற்பிக்கமாட்டார்கள், இன்னும் சிலரோ நன்றாக கற்ப்பிப்பார்கள் ஆனால் நல்ல மனிதர்களாக இருக்கமாட்டார்கள். ஆனால் விக்கி சேர் அவர்கள் இரண்டுமாக இருந்தவர். மாணவர்களின் நலனில் மிகுந்த அக்கறை கொண்டிருந்த அவர் தனது வகுப்பிலுள்ள ஒவ்வொரு மாணவனுக்கும் தான் கற்பிப்பது விளங்கவேண்டுமென்பதில் உறுதியாக இருப்பார். நேரம் தவறாமைக்கும் செய்யும் கடமையை தெய்வமென மதித்து நடக்கும் பண்புக்கும் விக்கி சேர் அவர்கள் ஒரு இலட்சிய உதாரணம் என்றால் அதில் மிகையிருக்க


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியாது. நான் அந்த இரு பண்புகளையும் விக்கி சேர் அவர்களிடமிருந்துதான் கற்றுக்கொண்டேன். கடமையையும் கடவுள் வழிபாட்டினையும் தனது இரு கண்களாக கருதி வாழ்ந்த ஒரு அற்புதமான மனிதர் அவர். மாணவர்களின் நன்மைக்காகவும் மற்றும் அவர் கணிதத்துறை தலைவராக இருந்த காலத்தில் தன்னுடன் வேலை செய்த சக விரிவுரையாளர்களின் உரிமைகளுக்காகவும் எப்போது உரத்துக் குரல் கொடுப்பார். தனது திணைக்களத்திற்கும் உத்தியோகத்தர்களுக்கும் கிடைக்கவேண்டிய நன்மைகளையும் உரிமைகளையும் என்றுமே விட்டுக்கொடுக்கமாட்டார். பதவி பேதம் பாராமல் எல்லோரோடும் எளிமையாகப் பேசிப் பழகும் சுபாவம் கொண்ட விக்கி சேர் மற்றவர்களின் உணர்வுகளைப்புரிந்து கொண்டு உதவும் குணம் படைத்த அவர் மாணவர்கள் பாடத்தில் திறமையாக செய்யும் போது அவர்களை வெளிப்படையாக பாராட்டத் தயங்காதவர். பதவி பேதம் பாராமல் எல்லோரோடும் எளிமையாகப் பேசிப் பழகும் சுபாவம் கொண்ட விக்கி சேர் மற்றவர்களின் உணர்வுகளைப் புரிந்து கொண்டு உதவும் குணம் படைத்த அவர் மாணவர்கள் பாடத்தில் திறமையாக செய்யும் போது அவர்களை வெளிப்படையாக பாராட்டத்தயங்காதவர்.

நல்லவர்களை இறைவன் விரைவில் அழைத்துக் கொள்வான் என்று சொல்வார்கள் அவ்வாறுதான் விக்கி சேர் அவர்களையும் இறைவன் விரைவாக தன்னோடு அழைத்துக் கொண்டானோ என்று எண்ணத்தோன்றுகிறது. விக்கி சேர் அவர்களின் புனித ஆத்மா இறைவனின் திருப்பாதத்தில் அமைதி பிரார்த்திப்பதோடு அவரின் பிரிவால் துயருற்றிக்கும் அவரின் துணைவியார், பிள்ளைகள், மற்றும் குடும்பத்தவர்கள் அனைவரும் எனது ஆழ்ந்த இரங்கல்களை தெரிவித்துக் கொள்கிறேன்

ஓம் சாந்தி

**கலாநிதி கிட்ணன் கோபிந்தராஜா**

முன்னாள் துணைவேந்தர், கிழக்கு பல்கலைக்கழகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முகநூல் பதிவு : பேராசிரியர் விக்கினேஸ்வரனின் இறுதி ஊர்வலம் நாளை

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணை வேந்தரும், கிழக்கு பல்கலைக்கழகத்தின் முன்னாள் கணிதத்துறை தலைவருமான பேராசிரியர் விக்கினேஸ்வரனின் இறுதி ஊர்வலம் நாளை அவரது பிறந்த ஊரிலே நடைபெற உள்ளது.

விக்கி என அன்போடு அழைக்கும் விக்கினேஸ்வரன் அவர்கள் 1980 களில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் மாணவராக இருந்தவர். ஆனால் அவர் எனக்கு பெரிதும் அறிமுகமானதும், நெருக்கமானதும். 1990 களுக்கு பின்னர் நான் கிழக்கு பல்கலைக் கழகத்திற்கு மாற்றலாகி வந்த பின்னர் தான் அங்கு தான் அவரை மீண்டும் காணுகின்ற சந்தர்ப்பமும் அவரோடு பழகுகின்ற சந்தர்ப்பமும் அவரோடு இணைந்து வேலை செய்கின்ற வாய்ப்பும் கிடைக்கின்றது. அப்போது இளம் விக்கி கணிதத்துறையின் விரிவுரையாளராக பணியாற்றிக் கொண்டிருந்தார்.

கிழக்குப் பல்கலைக்கழகம் நான் அங்கு கால் வைக்க முன்னரும் நான் அங்கு சென்ற 1990 காலப் பகுதியிலும் மிகப் பெரும் சவால்களை எதிர் கொண்டிருந்தது. அது தொடர்ந்தும் இயங்குமோ இல்லையோ என்ற சந்தேகம் கூடப் பிறந்த காலம் அது மிக நெருக்கடியான அக் கால கட்டத்தில் உயிர் பயமுறுத்தல்கள் இருந்த அக் காலத்தில் அர்ப்பணிப்பு மிக்க பல இளைஞர்கள் முக்கியமாக இளம் விரிவுரையாளர்கள் துணிவோடும் அச்சமின்றியும் கிழக்கு பல்கலைக்கழகத்தின் வளர்ச்சிக்கும் உயர்ச்சிக்கும் இருப்பிற்கு மாக பாடுபட்டு கொண்டிருந்தார்கள். அத்தகையோரின் செயற்பாடுகள் இல்லாவிட்டால் அப் பல்கலைக்கழகம் சில வேளைகளில் எப்போதோ இழுத்து மூடவும் பட்டிருக்கும் இக்கட்டான சவாலான


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயிர் பயம் மிகுந்த அச்சம் தரும் அந்நாட்களில் உற்சாகமாகவும் அர்ப்பணிப்போடும் வேலை செய்து பல்கலைக்கழகத்தை உயிர்ப்போடு வைத்திருந்தார்கள் முக்கியமானவர்கள் சிலர் அவர்களுள் ஒருவரே காலம் சென்ற நமது பேராசிரியர் விக்கினேஸ்வரன். நான் அப்போது அங்கு கலைப் பீடாதிபதியாகவும், நுண்கலைத்துறை தலைவராகவும் பணியாற்றிக் கொண்டிருந்தேன் ஆசிரியர்கள் பலரின் உதவியும் எனக்கு கிடைத்தது முக்கியமாக விக்கினேஸ்வரனின் ஆதரவும் அன்பும் கிடைத்தது. இக்கட்டான ஒரு சூழல் நம்மை இணைத்தது என்பேன் எம் துறையின் செயற்பாடுகளுக்கு அவர் மிகுந்த உதவியாக இருந்தார். நமது கலை நிகழ்வுகள் பலவற்றிற்கு பண உதவி கூட புரிந்திருக்கின்றார்.

அவரது வலது கை கொடுப்பதை இடது கை அறியாது தமிழ் உணர்ச்சி மிகுந்த அவர் தனக்கென ஓர் அரசியல் கோட்பாட்டையும் கொண்டிருந்தார். இடம் விட்டு இடம் செல்வது ஆபத்து என்ற சூழ்நிலையிலும் அவர் மட்டக்களப்பின் பல இடங்களுக்கும் சென்று வந்ததும் புன்சிரிப்போடு அதற்கு ஒரு காரணம் சொன்னதும் எனக்கு நன்றாக ஞாபகம் இருக்கின்றது அவர் மிகவும் எளிமையானவர் பழகுவதற்கு இனியவர் அ வ ர து தோற்றம் பார்ப்போருக்கு அவர் ஒரு முரடர் மிகக் கடுமையானவர் என்று உணர்வையே தரும். ஆனால் அவர் உள்ளமோ மிக மிக இனிமையானது மிக மிக மென்மையானது அது ஓர் கிராமத்து எளிய மனிதரின் மனிதாபிமானம் மிக்க இதயம் அதில் இரக்கம் நிறைந்து வழியும் ஏழைகள் மீதும் எளியவர் மீதும் மிகுந்த அன்னை அது பொழியும் தன்னுடைய இனிமையான குணத்தினாலும், நடத்தை களினாலும் அவர் விரிவுரையாளர் களினதும் மாணவர்களினதும் அங்கு பணிபுரிந்த கல்வி சாரா ஊழியர்களினதும் அன்பை பெற்றிருந்தார்.

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்திற்கு அவர் மாறுதலாகி வந்து சேர்ந்த வேளை நான் யாழ்ப்பாணம் சென்ற போது தனது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊரான இணுவிலுக்கு என்னை அழைத்து அவர் கௌரவித்தமை ஞாபகம் வருகின்றது அவர் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் உப வேந்தராக இருந்த காலத்தில் அங்கு ஓர் நினைவுப் பேருரை நிகழ்த்தும் சந்தர்ப்பம் வாய்த்தது ஆய்வுப் பொருள் - தமிழ் இசை அதனை நான் ஓர் ஆற்றுகை ஆய்வாகச் செய்யலாமா என ஒருங்கமைப்பாளரைக் கேட்ட போது அவர்களுக்கு அது புதிதாக இருந்தது சற்று தயங்கினார்கள். ஆய்வு வேறு ஆற்றுகை வேறு என அவர்கள் கூறினார்கள். நிகழ்கலையில் எப்போதுமே பரிசோதனைகளைச் செய்து கொண்டிருக்கும் பலர் ஆய்வு செய்பவர்களாகவே அதில் அர்ப்பணிப்போடு வேலை செய்வர். அதற்கான சில முறை இயல்களையும் அவர்கள் கண்டுபிடித்து வைத்திருக்கின்றார்கள் எனவே ஆய்வை ஆற்றுகையாக அளிக்கலாம் என்பது எனது கொள்கை கணித புத்தி உடையவரான விக்கி இதனை உடன் புரிந்து கொண்டார். அப்படி செய்வது மிக நல்லது எனக் கூறி அதற்கு அனுமதியும் வழங்கினார்.

அவர் தலைமையில் கைலாசபதி அரங்கில் ஆய்வே ஒரு ஆற்றுகையாக (Research as a performance) நடந்தேறியது. தமிழ் இசை 2500 வருட காலமாக வளர்ந்த முறையினை அது கூறியது. அந்த ஆய்வும் ஆற்றுகையும் நிகழ்த்த உப வேந்தர் அறையிலிருந்த இருவரும் வழக்கமான பல்கலைக்கழக கோல உடை அணிந்து கைலாசபதி கலையரங்குக்கு சென்ற அந்த இனிய நாள் இப்போது ஞாபகம் வருகின்றது. அவரது அரசியல் செயற்பாடுகள் காரணமாக அவர் பதவி நீக்கம் செய்யப்பட்ட போது அதனை ஏற்றுக் கொண்டு அதற்காக அவர் போராடவும் செய்தார் அடக்கமானவராக தோற்றமளித்த அவருள்ளேயே ஒரு போராட்ட வீரனும் இருந்தார். முகநூல் ஒன்றில் ஒருவர் வெள்ளவத்தை ராமகிருஸ்ணன் மிசனில் அவர் தங்கியிருந்த இடத்தையும் அதற்கு முன்னால் இருந்த சிறு கடையில் சாப்பிட்டு விட்டு சாதாரண மனிதர் போல தனது வழக்கு நடவடிக்கைகளுக்காக அவர் நடந்து சென்றமையையும் ஓர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓட்டோவில் ஏறி அவர் சென்றமையையும் உருக்கமாக வர்ணித்து இருப்பதைக் கண்டு மனம் கலங்கியது. அர்ப்பணிப்போடு வேலை செய்யும் பலர் தம் இறுதிக் காலத்தில் புறக்கணிக்கப்படுவதற்கு அவரும் ஒரு உதாரணம் ஆவார். அது வாழ்வின் ஒரு பெரும் சோகமாகும். விக்கியை நினைக்கையில் அவருடைய முகத்தில் தவழும் புன்சிரிப்பே எனக்கு ஞாபகம் வரும். அச் சிரிப்பு அவருக்கே உரியது. தன் துன்பங்கள் யாவற்றையும் ஒரு புன்சிரிப்பால் கடந்த ஒரு மனிதராக அவர் எனக்கு தெரிகிறார்.

உண்மை + நேர்மை + எளிமை + இரக்கம் + அன்பு + அர்ப்பணிப்பு + உழைப்பு = பேராசிரியர் விக்கினேஸ்வரன்

அவரது வாழ்வு நமக்கு முன்னுதாரணம்
அவரது இறுதிக்காலம் நமக்கு ஒரு பாடம்

நண்பரே உங்களோடு இணைந்து பணி புரிந்த நாட்கள் மறக்க முடியாதவை

உங்கள் புன்சிரிப்பு மறக்க முடியாதது
நண்பரே
உங்கள் எளிமை வியப்பு தருவது
சென்று வருக எமது அருமை நண்பரே!

**பேராசிரியர் சி.மௌனகுரு**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொற்காலம்

கிழக்குப் பல்கலைக்கழகத்தைப் பொறுத்த வரையில், குறிப்பாக விஞ்ஞான பீடத்தைப் பொறுத்த வரையில் விக்கி சேர் சேவையாற்றிய காலம் பொற்காலம் என்றால் மிகையாகாது. அவரது கற்பித்தல் முறையோ, நிர்வாகத் திறமையோ என்றுமே மறக்க முடியாதவை. நான் 1995 ல் ஒரு புதுமுகமாணவனாக கிழக்குப் பல்கலைக்கழகத்திற்கு அடியெடுத்து வைத்த நாள் முதல் இன்று வரை விக்கி சேருடன் ஒரு மாணவனாக, பின்னர் ஒரு சக விரிவுரையாளராக அவரது நிர்வாகத்தின் கீழ் கடமையாற்றிய நாட்களின் நினைவுகள் என் மனக்கண் முன்னே வந்து செல்கின்றன.

முதலாம் வருடத்தில் "Real Analysis" என்று ஒரு பாடம் இருப்பதாகவும் அதில் சித்தியெய்வது என்பது மிகக் கடினமானது என்றும் சிரேஸ்ட மாணவர்கள் அடிக்கடி சொல்லிக் கொள்வார்கள். அந்தப் பயத்தை எங்கள் மனதிலும் விதைத்திருந்தார்கள். நானும் முதல் நாள் "Real Analysis" விரிவுரைக்கு செல்கின்றேன். அங்கே விக்கி சேர் தான் இவ் விரிவுரையை செய்யப் போவதாக சக மாணவர்கள் கூறியதும் சற்றுப் பதட்டத்துடன் இருந்தேன். விக்கி சேர் வந்தார். தனக்கே உரிய பாணியில் பாடத்தை ஆரம்பித்தார். நான் எவ்வளவு தூரம் பயந்திருந்தேனோ அதற்கு நேர்மாறாக அன்றைய வகுப்பு அமைந்திருந்தது. மாணவர்களின் நிலை அறிந்து மிக நுட்பமாக அந்தப் பாடத்தை சொல்லித் தந்தார். அன்று முதல் பின்னராக நான்கு வருடங்களில் விக்கி சேரின் ஒரு வகுப்பைக் கூட நான் தவற விட்டதில்லை. அவரைப் போலவே நானும் ஒரு விரிவுரையாளராக வர வேண்டுமென்ற ஆதங்கம் என்னுள் எழுந்தது.

நான் நான்கு வருட விசேட கற்கையை பூர்த்தி செய்ததன் பின்னர் தற்காலிக விரிவுரையாளராக கணித துறைக்குள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்ததும், விக்கி சேர் கூறிய ஒரு வார்த்தை என்னை மெய் சிலிர்க்க வைத்தது. அந்த "Real Analysis" பாடத்தை என்னைப் போதிக்கப் பணித்தார். நான் அடைந்த அதிர்ச்சிக்கும், ஆனந்தத்திற்கும் எல்லையே இல்லை. அவர் தனக்கே உரிய பாடத்தை என்னை விரிவுரையை எடுக்கப் பணித்த அந்தக் கணம் இன்னும் என் மனதில் நிலைத்திருக்கின்றது.

மிக எளிமையானவர். ஒரு சைக்கிளில் தான் பல்கலைக் கழகத்திற்கு வருவார். அவரிடம் சிரிப்பை பார்ப்பது அரிது. அளந்து தான் பேசுவார். ஆனால் அவர் செய்த சேவைகளோ அளவிட முடியாதவை. தன் வாழ்நாளில் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு உயரிய மூன்று பண்புகளையும் குறிக்கோளாகக் கொண்டு வாழ்ந்தவர். பல்கலைக்கழகத்திற்கு காலையில் முதன் முதலில் வரும் விரிவுரையாளர் என்றால் அது விக்கி சேர் தான். அதே வேளை மாலை வரை இருந்து கடமையாற்றுவதும் அவர் தான். தனது தனிப்பட்ட குடும்பத்தின் வளர்ச்சிக்காக செலவு செய்த காலத்தை விட கணித துறையின் வளர்ச்சிக்கு அதிக காலத்தை செலவிட்டார். இதனாலோ என்னவோ எங்களுக்கு லீவு கேட்பதற்கோ, நேரத்துடன் வீடு செல்லக் கேட்பதற்கோ எப்போதுமே ஒரு தயக்கமாக இருக்கும். கண்ணாடியைப் பதித்து அதற்கு மேலாக பார்ப்பார். அவர் எதற்காக பார்க்கின்றார் என்ன கேட்கின்றார் என்பதனை அவர் சொல்லாமலேயே சக பணியாளர்கள் புரிந்து கொள்ளக்கூடியதாக இருக்கும்.

தனது துறை கணிதமானாலும் தமிழுக்கும், சைவத்திற்கும் என்றுமே தொண்டாற்றியவர். எங்களது பல்கலைக்கழக விநாயகர் கோவிலின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்தவர். இந்துமாமன்றத்தின் சிரேஸ்ட பொருளாளராக இருந்த காலத்தில் உரிய பூசைகளை தானாகவே முன்னின்று செய்பவர். யுத்தம் இடம்பெற்றுக் கொண்டிருந்த காலப்பகுதியில் மிகத்துணிவுடன், தமிழ் உணர்வுடன் தொண்டாற்றினார். மிகவும் இக்கட்டான அக்கால கட்டத்தில் எங்களது ஆசிரியர் சங்கத்தை தைரியத்துடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமை ஏற்று வழிநடத்திச் சென்றார். ஒரே சமயத்தில் பல பொறுப்புக்களை ஏற்று திறம்பட செய்து முடித்தவர். கணிதத்துறை தலைவர், தலைவர் - Computer Unit, Director - SDC, Warden, தலைவர் - TAEU என்று பல பரிமாணங்களில் அவரது சேவை பரந்துபட்டிருந்தது.

காலத்தின் கட்டளையாக 2004 ல் அவர் எங்களது பல்கலைக்கழகத்தில் இருந்து வெளியேற வேண்டியிருந்தது. ஆனால் அதன் பின்னர் கூட அவருக்கும், எங்களுக்கும் இடையிலான தொடர்புகள் தொடர்ந்து கொண்டேயிருந்தன. Consultant ஆக 2nd Examiner ஆக எவ்வெவ் வகைகளில் அவரால் சேவையாற்றக் கூடியதாக இருந்ததோ அவ்வளவு வகையிலும் அவர் இறுதி வரை சேவையாற்றிக் கொண்டேயிருந்தார்.

நான் உட்பட இன்று கணித துறையிலிருக்கும் அனைத்து கணித விரிவுரையாளர்களும் அவரது வாரிசுகளே. அவர்கள் ஒவ்வொருவரும் தாங்கள் விக்கி சேரின் மாணவர்கள் என்பதை பெருமையாக சொல்லிக் கொள்கின்றார்கள். அவர் விட்டுச் சென்ற கணிதப் பணியினை எங்கள் மூலமாக எடுத்துச் செல்வதே நாங்கள் அவருக்கு செய்யக் கூடிய செய்நன்றி ஆவதோடு அவரது ஆத்ம சாந்திக்கும் ஆதாரமாக அமையும்.

**ப. பரமதேவன்**

**சிரேஸ்ட விரிவுரையானர்**

**(கணிதத் துறை – கிழக்குப் பல்கலைக்கழகம்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "வழிகாட்டிய ஆசான் Vicky Sir"

"நல்லாரைக் காண்பதுவும் நன்றே: நல்லார் சொல் கேட்பதுவும் நன்றே" கற்பித்தால் மட்டும் தான் ஆசிரியனா? என்பதற்கு Vicky Sir ஓர் உன்னதமான எடுத்துக்காட்டு. ஏனெனில் உயிரியல் விஞ்ஞானத் துறையில் பயின்ற எனக்கு பௌதிக விஞ்ஞானத் துறையின் விரிவுரையாளரான Vicky Sir இன்றும், என்றும் எம் மனதில் சிம்மாசனம் போட்டு உட்கார்ந்து இருக்கின்றாரென்றால் அது அவர் ஒரு ஆசிரியர் என்பதற்கு அப்பால் ஒரு வழிகாட்டியாக எம்மையும் எல்லோரையும் தமது மாணவர்கள் போன்று அக்கறை காட்டி ஊக்கப்படுத்தி தேவைப்படும் போது எமக்காக குரல் எழுப்பி... இப்படி பல வடிவங்களில் ஒரு முழுமையான ஆசானாக திகழ்ந்தார்.

இலங்கை கிழக்குப் பல்கலைக்கழகத்தில் அது ஒரு "பொற்காலம்" என்றே கூற வேண்டும். நிச்சயமாகப் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய காலம் அது. காரணம் அப்படியான அன்பான, கண்டிப்பான, கரிசனையான, ஒவடவொரு மாணவ மாணவிகளையும் பீடம், திணைக்களம், பிரிவு என்கின்ற வேறுபாடுகளைக் கடந்து ஏன் தமது கல்வித் தகைமை, Grade, Position, Seniority என்கின்ற தலைக்கனமெல்லாம் இல்லாமல் கடமையாற்றிய ஆசிரிய பெருந்தகைகளைக் காணக் கூடிய பாக்கியம் எமக்கு கிடைத்த காலம் அது... என்ன தான் எமது தவறுகளைக் கண்டு கொண்டாலும் அவற்றை தான் ஓர் ஆசிரியர் என்பதைக் கடந்து, ஓர் வழிகாட்டியாக அந்தத் தவறுகளின் சரி பிழைகளை எமக்கு நாசுக்காக சுட்டிக் காட்டி மறுபடியும் அத் தவறுகளை நாம் செய்ய முடியாத அளவுக்கு எம்மை நெறிப்படுத்துவார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் எனது கல்வியை முடித்துக் கொண்டு விரிவுரையாளராக எனது வாழ்க்கையை தொடங்கிய காலம். அப்போது ஐவெநசநெவ வசதிகள் எல்லாம் நம்மை தொட்டிராத நேரம். நமது முன்னேற்றத்திற்கு இப்படியான ஆசான்களையே முற்று முழுதாக தங்கியிருந்த காலம் அது. அப்போது முதன் முறையாக எனக்கு ஒரு வெளிநாட்டு குறுகிய கால பயிற்சிக்கான ஒரு புலமைப்பரிசில் கிடைக்கும் சந்தர்ப்பம். ஆனால் அதற்கான அடுத்த கட்ட நடவடிக்கைகள் எதுவுமே மேற்கொள்வதற்குரிய சூழலற்ற வேளை. அப்போது எனக்கு முற்று முழுதாக தனது ஆலோசனைகளையும், ஒத்துழைப்புக்களையும் வழங்கி நான் அந்தப் பயிற்சியை பெறுவதற்கு அவர் எனக்கு காட்டிய வழியினால், அந்தப் பயிற்சி மூலம் எனக்கு கிடைத்த வெளிநாட்டு தொடர்புகள் மூலம் இன்று நான் பத்துக்கும் மேற்பட்ட நாடுகளில் நடைபெற்ற சர்வதேச மாநாடுகளில் எனது ஆய்வுக் கட்டுரைகளை பிரசுரிப்பதற்கு வாய்ப்புக் கிடைத்தது மட்டுமன்றி, அப்போது எனக்கு கிடைத்த வெளிநாட்டு தொடர்புகள் மூலம் பல்வேறு சர்வதேச ஆய்வரங்குகளில் நான் ஒரு பேச்சாளராக அழைக்கப்படுவதற்கு கூட Vicky Sir இன் வழிநடத்துதல் மூலம் நான் பெற்றுக் கொண்ட முதன் முதலான வெளிநாட்டு தொடர்புகளும் பயிற்சிகளுமே அடித்தளமாக அமைந்தது. ஆக ஒரு மாணவனையோ, மாணவியையோ தான் ஓர் ஆசிரியனாக, ஆலோசகராக, வழிகாட்டியாக இருந்து செயற்பட்ட ஓர் உன்னதமான மனிதர். தாம் இவற்றையெல்லாம் செய்கின்றோம், செய்தோம் என்பது கூட தற்புகழுக்காகவே, இல்லையேல் தனது தொழில் மேன்மைக்காகவோ கணக்கிட்டுப் பார்க்கும் அற்பத்தனமற்ற மாமனிதர்! இவர்களெல்லாம் இக் கிழக்குப் பல்கலைக்கழகத்தில் வாழ்ந்த காலத்தில் நாமும் வாழ்ந்தோம் என்பது நாம் செய்த புண்ணியமென்றே சொல்ல வேண்டும்.

காலத்தின் மாற்றத்தாலும், கோலத்தாலும் சுயநலம், தற்பெருமை, தட்டிப்பறித்தல், மற்றவர்களை வீழ்த்துதல் போன்ற அற்பத்தனங்கள் ஆக்கிரமித்துள்ள கல்விச் சமூகத்திலே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நல்லாரைக் காண்பதுவும் நன்று" என்பது பொய்த்து விடாது, இப்படியான உன்னத கல்விமான்களும் இருப்பதனால் தான் எம்மைப் போன்றோர்களின் எதிர்காலம் இவ்வாறு புடமிடப்பட்டது.

விஞ்ஞான பீடம் என்று இருந்தாலும் இது விஞ்ஞான திணைக்களமோ என்று சந்தேகப்படுமளவிற்கு அங்கு திணைக்களங்களிற்கு இடையே ஒற்றுமை, தொடர்பாடல், ஒன்று கூடல், பகிர்தல், நெறிப்படுத்தல், வழிகாட்டல், முன்னேற்றுதல் என புத்திஜீவிகளுக்கான சகல விழுமியங்களும் முழுமையாகக் காணப்பட்டது. இவர்கள் போன்ற உத்தமமான ஆசான்களின் பங்களிப்பினால் தான் என்பதை யாரும் மறந்து விட முடியாது. ஆடம்பரம், அதிபிரசங்கித்தனம், தற் புகழ்ச்சி, வறட்டு கௌரவம் போன்றவற்றுக்கெல்லாம் வெளியே நின்று ஒரு புத்திஜீவி எப்படியெல்லாம் இருக்க வேண்டும், எப்படியெல்லாம் இருக்கக் கூடாது என்பதை வாழ்ந்து காட்டி, மற்றவர்களையும் வாழ வைத்த ஒரு மகான் Vicky Sir.

கிழக்கு பல்கலைக்கழகத்தில் ஒரு சிரேஸ்ட விரிவுரையாளராக, திணைக்கள தலைவராக, பீடாதிபதியாக எம்முடன் இருந்து அநேக பணிகள் பல ஆற்றிய Vicky Sir காலத்தின் கோலத்தால் கிழக்கு பல்கலைக்கழகத்திலிருந்து வெளியேறினார். இது எம் பல்கலைக்கழகத்தின் துரதிஸ்டமே. ஆனால் எங்கு சென்றாலும் "நல்லவன் வாழ்வான்" என்பதற்கிணங்க, யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் என்ற உயரத்தை எட்டினார். அது அவரின் திறமைக்கும், ஆளுமைக்கும் கிடைத்த பதவி என்பதை விட அவரின் நற்குணத்திற்கும், நற்பண்பிற்கும் கிடைத்த வெகுமதியும், ஆசீர்வாதமும் என்றே சொல்ல வேண்டும். அதிலும் கூட அவர் நேர்மையானவர், திடமானவர், நேரிய பார்வை கொண்டவர் என்பதாலேயோ என்னவோ அந்தப் பதவியில் நிலைத்து நிற்க முடியாமல் போனது அப் பல்கலைக்கழகத்தினதும் துரதிஸ்டம் என்றே சொல்ல வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இறப்பைத் தவிர எதுவுமே நிரந்தரமற்றவை" என்பதே உண்மை. ஆனாலும் நாம் வாழும் போது செய்த நன்மைகளும், புண்ணியங்களுமே எம்முடன் கூட வரும் என்பதற்கு இத்தனை வருடங்கள் கடந்தும் Vicky Sir இதற்காக நான் வரையும் இந்த சிறிய இரங்கல் ஓர் சான்று.. ஏனெனில் இவைகள் எம் உள்ளத்தின் ஆழத்திலிருந்து வரும் அழியாத, வாழ்நாளில் மறந்துவிட முடியாத நன்றியுணர்வுகள்.. எம்மை வாழ வைத்த தெய்வங்களுக்கு நாம் செலுத்தும் நன்றிக் காணிக்கைகள்..

எவ்வித ஐயமுமின்றி நாம் உணரக் கூடிய ஒன்று. Vicky Sir மோட்சத்தில் இறைவன் காலடியில் இளைப்பாறுகிறார் என்பதே. அன்னாரின் இழப்பினால் துயருறும் துணைவியார், பிள்ளைகள், உற்றார், உறவினர்கள் அனைவருக்கும் ஆழ்ந்த இரங்கல்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

Dr.(Mrs) C.Mahendranathan,
Senior Lecturer,
Department of Botany,
Eastern University, Sri Lanka,
Vantharumoolai


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடை பெற்றுவிட்டார் சிரேஸ்ட பேராசிரியர் இ.விக்கினேஸ்வரன் சேர் அவர்கள்..

17.02.2023 அன்று மாலையில் ஒரு தொலைபேசிச் செய்தி எம்மை உறைய வைத்தது. பேராசிரியர் விக்கினேஸ்வரன் சேர் அவர்கள் மறைந்து விட்டார் என்ற துயரச் செய்தியது.

கிழக்குப் பல்கலைக்கழகத்தில் கணித, கணினி பிரிவுகளின் தலைவராக இருந்து வழிநடத்திய பேரறிஞர் அவர். எவ்வித பாகுபாடுமற்ற ஒரு மனிதர். அன்பு, கருணை, இரக்கம் உடையவர். செயலில் இளகிய மனமுடையவர். நேர்மைக்கு பெயர் பெற்றவர். சிறந்த நிர்வாகி. ஊழலற்ற ஒருவர்.

பல வருடங்கள் அவரின் தலைமைத்துவத்தின் கீழ் கணினி பிரிவில் கடமையாற்றும் பேறு எனக்கு கிடைத்தது. கணினி பயிற்சி பெற என்னை பல பல்கலைக்கழகங்களுக்கு அனுப்பியவர். முழு நேரக் கடமையாளர். உறவுகளை நேசித்தவர். கண்ணியம் மிக்கவர். இறையச்சம் உடையவர். இறை பக்தியாளர். நேர்மையாளர். நேர முகாமைத்துவம் பேணியவர். கடமையில் நேரம் தவறாதவர். இனப்பற்றாளன். பல பிரச்சனைகளுக்கு சமாதானமாக தீர்வு காண உதவியவர். எளிமையானவர். பதவிப் பாகுபாடு இல்லாதவர். நடுநிலையாளர். கிழக்குப் பல்கலைக்கழகத்தில் பல கணித மேதைகளை உருவாக்கியவர். உதவி செய்வதற்கு தயங்காதவர். கிழக்கு பல்கலைக்கழக இந்து மாமன்ற பெரும் பொருளாளராக இருந்து மாமன்றத்தைக் கட்டிக் காத்தவர். சக பணியாளர்களின் முன்னேற்றத்தில் அக்கறை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு செயற்பட்ட ஒரு திணைக்களத் தலைவர். சக பணியாளர்களின் சுக நலன்களில் அக்கறை காட்டிய மனித நேயம் மிக்க பெரியார். என்றும் ஒப்பில்லா குல விளக்கு. சவால்களை துன்பங்களை எதிர் கொண்டாலும் கொண்ட கொள்கைகளை கைவிடாத கொள்கைப் பற்றாளர். நியாயத்திற்காக குரல் கொடுத்தவர். பல நல்ல பரிணாமங்களை உடையவர். கடும் உழைப்பு மற்றும் குடும்ப வறுமையை தாண்டி முன்னேற முடியும் என மெய்ப்பித்த பெரு மனிதர். இறுதி மூச்சு வரை கற்பித்தலில் ஈடுபட்ட மாபெரும் கல்வியாளர். இன்று எம்மிடமிருந்து விடை பெற்று விட்டார்.

பேராசிரியர் விக்கி சேர் அவர்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதுடன், இழக்க முடியாத அன்பான குடும்பத் தலைவனை இழந்து தவிக்கும், அவரின் குடும்பத்தினருக்கும் ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

**ஆ.நிர்மோகன்**
**ஓய்வு நிலை சிரேஸ்ட தொழில்நுட்ப உத்தியோகத்தர்**
**தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப நிலையம்**
**கிழக்குப் பல்கலைக்கழகம்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## From President of Teachers of Union of Eastern University (TAEU)

It is with great sadness that we learned of the passing of Prof Vickneswaran's ( We called him as “Vicky Sir”). Prof Vickneswarean Sir was the Head of the department of Mathematics of the Faculty of Sciences Eastern University, Sri Lanka (EUSL) when I entered to Eastern University as a student.

He was really able to shine in sharp interchanges with the student, never condescending. He was a great teacher, a good man, a loving, caring and kind person. After graduation when I joined as an academic, I was requested by him to join with University Teachers Association (UTA). Vicky sir served as President for UTA and also, he served as the Vice President for Federation for University Teachers' Association (FUTA) Sri Lanka.

Vicky Sir was a true trade union activist, always advocating for rights and dignity of university teachers in Eastern University and in University of Jaffna. We can still remember how he fearlessly fought with militants who have weapons to save the lives of students and staff during the period of civil unrest. He was widely respected by his union's members and was credited with securing significant pay and improvements for teachers and students.

His contributions to the trade union movement will not be forgotten, and his legacy will continue to inspire us to fight for rights and dignity of university teachers.

Those of us privileged to have known Vicky Sir and worked with him will miss him badly. His warmth and generosity, his reliability and kindness. He was a solid rock of support for the teachers unions. He will be sorely missed and remembered with great affection.

Dr. T. Sathaananthan<br>
President, TAEU<br>
2023.03.08



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "நீள நினைந்து நின் புகழ் பாடுவோம்"

என் பேராசிரிய நண்பர் அமரர் இரத்தினம் விக்கினேஸ்வரன் பற்றிய மனப் பதிவுகள் இற்றைக்கு அறுபது ஆண்டுகளுக்கு மேலாக நீட்சி கொள்ளும். அவர் இரத்தினம் விக்கினேஸ்வரனாக இருந்த போதே நாங்கள் நண்பர்கள் ஆனோம். அவரது வீட்டிற்கு முன்பிருந்த புளியந்தோப்பு, இணுவைக் கந்தனின் வடக்கு வீதி எங்களின் ஆடுகளங்கள். தோட்டச் செய்கையும், சுருட்டு கைத்தொழிலும் எங்கள் குடும்ப தொழில்கள். இவற்றிலெல்லாம் களிமகிழ்வெய்தி திளைத்தோம். ஆயின், கல்வியொன்றே எங்களையும், எங்கள் குடும்பங்களையும் உய்விக்கக் கூடிய ஒரே வழித்தடம் என்பதை உணர்வு பூர்வமாக அறிந்தோம். இதனால் கல்வியை கருந்தனமாகக் கொண்டு உழைத்தோம். கல்வி கை கொடுத்தது."செத்தையினுள்ளே செந்தீ அகல் விளக்குகளாக "பிரகாசித்தோம்".

நண்பன் விக்கி பல்கலைக்கழகத்தில் புத்திஜீவிப் புலத்திலுள்ள சகல துறைகளிலும் தடம் பதித்தவர். அதன் உட்சாணிக் கொம்பு வரை சென்றமர்ந்தவர். அதனால் தான், தன் குடும்பம், தன் ஊர் என்பவற்றை விளக்கம் செய்தவர். தான் வகித்த பதவிகளில் இழுக்கற்ற செயல் செய்தவர். மேலாக, இணுவைக் கந்தன் தேவாலய மதிப்புறு அறங்காவலன். கந்தனின் திருவனந்தல் பூசை காணாது தன் பணிகளை என்றும் தொடங்கியதில்லை. அமைதியான ஆடம்பரமற்ற அணுக்கத் தொண்டன். சங்கப் புலவன் கணியன் பூங்குன்றனாரின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“பெரியோரை வியத்தலும் இலமே சிறியோரை இகழ்தல் அதனிலும் இலமே” என்ற கருத்துப்பட வாழ்ந்த தன்முனைப்பற்ற ஒரு நடு நிலையாளன். தனக்கு எந்தவிதமான பேரிடர்வரினும் அதனை ஏற்றுக் கொள்ளும் அல்லது எதிர்கொள்ளும் மனப்பக்குவம் வாய்க்கப் பெற்றவர்.

அதனால் எதையும் தன் மனத்துள் ஆழப் புதைத்து அமைதி கண்டவர். ஒரு வேளை அந்த ஆழப் புதைப்பும், அமைதியும் தான் அவரது உடற்கூற்றியலுக்கு எதிர்வினை ஆற்றியதோ என்று அவரது அகால பிரிவின் ஊடாக எண்ணத் தோன்றுகின்றது. என்றாலும் நண்பா நீ கடக்க வேண்டிய, ஆற்ற வேண்டிய பணிகள் உன் முன் நீண்டு கிடக்க, நீ அகாலமானது தான் பெருந்துயரம். ஒரு வேளை நீ விட்ட இடத்தை உன் மனையாளும், பிள்ளைகளும் நிரப்புவர் என்ற திருப்தி உன்னிடம் இருந்ததோ யாமறியோம். யாரது அறிவார்?

என் பால்ய நண்பன், என் ஊரான், என் மனைவியின் தோழியின் கணவன், எம் ஊர் விளங்க வந்த பேராசான், நீ சென்ற வழி பொன் பூச்சொரிகின்றோம். நின்னை நீள நினைந்து நின் ஊர்ச் சிறார்க்கு உன் புகழ் பாடுவோம். இணுவைக் கந்தனின் கமல பொற் பாதங்களில் நின்னையும் சேர்த்து வணங்குவோம்.

**பேராசிரியர் வ.மகேஸ்வரன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தன்னடக்கம் கொண்ட பேராசிரியர்

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக முன்னாள் துணை வேந்தர் பேராசிரியர் இரட்ணம் விக்னேஸ்வரன் அவர்களின் மறைவுச் செய்தியை அவுஸ்திரேலியாவில் இருந்தவாறு அறிந்து பேரதிர்ச்சியடைந்தேன். பல்கலைக்கழக வாழ்வில் பேராசிரியராக, பீடாதிபதியாக, துணைவேந்தராக எனப் பலநிலைகளிலும் பணியாற்றி எம்மையெல்லாம் விட்டுப்பிரிந்த துயரைத் தாங்கிக்க கொள்ள முடியவில்லை. விஞ்ஞான பீடத்தில் தனக்கென ஒரு பெயரை நிலை நிறுத்திய பேராசிரியர் விக்னேஸ்வரன் மனிதநேயம் மிக்கவராக மட்டுமன்றி தமிழ்த்தே சியத்தை நேசிப்பவராகவும் இருந்தமை சமூகத்திலும் பல்கலைக்கழக வட்டத்திலும் அவருக்கு தனியிடத்தை பெற்றுக்க கொடுத்தது எனக்கூறினால் அது மிகையாகாது. இதன் காரணமாகவே அவர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் துணை வேந்தராக நியமிக்கப்பட்டமையை பாராட்டி எடுக்கப்பட்ட விழாவில் பெரும் எண்ணிக்கையான மக்கள் ஒன்று திரண்டமையை எண்ணிப்பார்க்கின்றேன். அமரர் பேராசிரியர் விக்னேஸ்வரன் அவர்கள் இணுவில் கிராமத்தில் தோன்றியவர் என்பதால் நல்ல ஒழுக்கசீலராக இருந்தமை மட்டுமன்றி இறை பக்தி மிக்கவராகவும், சேவை நாட்டம் கொண்டவராகவும் விளங்கினார். இதன் காரணமாக இணுவில் கந்தசாமி ஆலயத்தின் தர்மகர்த்தாசபை உறுப்பின ராகவும், இணுவில் லயன்ஸ் கழகத்தின் அங்கத்தவராகவும் இருந்து பல சமூக, சமயப்பணிகளில் ஈடுபட்டுவந்தார். எவரொருவர் உதவி கேட்டாலும் அதனை மறுக்காமல் நிறை வேற்றிக் கொடுக்கும் பண்பு கொண்டவராக அவர் இருந்தமை மக்கள் மனதில் இடம்பெற கரணமாயிற்று.

இணுவில் கந்தனின் மீளா அடியவராக அவர் நாள் தோறும் காலையில் நடைபெறும் இணுவில் கந்தன் ஆலய உதய காலப்பூசையில் கலந்து கொள்வார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அர்ப்பணிப்புடன் கூடிய அவரது பணிகளால் ஊர் மக்கள் அவரின் மீது விசுவாசத்துடன் கூடிய அன்பைக் கொண்டிருந்தனர் எனக்கூறினால் அதில் மிகையில்லை.

கணிதத்தைக் கற்பிப்பதில் மிகப்பெரிய ஜாம்பவானாக இருந்த பேராசிரியர் விக்னேஸ்வரன் அவர்கள் மாணவர்களின் விருப்பத்திற்குரிய விரிவுரையாளராக விளங்கினார் எனக்கூறினால் அதில் ஐயமில்லை. இதன் காரணமாகவே பெரும் புகழும் மிக்க கோண்டாவில் கிராமத்தில் வாழ்ந்த அமரர் நடராசா அவர்களின் மகளைத் திருமணம் செய்யும் வாய்ப்பும் கிடைத்தது. நல்லதொரு குடும்பம் பல்கலைக்கழகம் என்ற மூதுரைக்கு அமைய அவரின் குடும்பவாழ்வு மகிழ்ச்சியாக காணப்பட்டமையைக் காணமுடிந்தது. நல்லவர்களை நீண்டகாலம் வாழ இறைவன் வாய்ப்பளிப்பதில்லை என்பதனால என்னவவோ பல்கலைக்கழக சேவையில் இளைப்பாறு வதற்கு முன்னதாகவே அவரை காலன் கவர்ந்துவிட்டான்.

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்வபன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்"

என்ற திருவள்ளுவர் வாக்குக்கிணங்க இறைவன் அவரை விண்ணுலகுக்கு அழைத்துவிட்டார். மரணச் சடங்கில் கலந்துகொள்ள முடியாமல் போனாலும், அவரது பிரிவால் துயருற்றிருக்கும் மனைவி, பிள்ளைகள், சகோரர்கள், உறவினர்களுக்கு எனது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா இணுவை கந்தனின் திருவடியில் இருந்து எம்மை ஆசீர்வதிக்க வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றேன்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**பேராசிரியர் க.தேவராசா**
முன்னாள் பீடாதிபதி
முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடம்,
யாழ் பல்கலைக்கழகம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமீபத்தில் மறைந்த எங்கள் அன்பான பேராசிரியர்

இ.விக்கினேஸ்வரன் நினைவாக இந்தக் குறிப்பை எழுதுகிறேன். இலங்கையின் கிழக்குப் பல்கலைக்கழகத்தில் அவரது மேற்பார்வையின் கீழ் பணியாற்றும் பாக்கியத்தைப் பெற்ற முன்னாள் விரிவுரையாளர் என்ற வகையில், அவருடன் நெருங்கி கடமையாற்றியதையும் அவரிடமிருந்து பல நல்விடயங்களைக் கற்றுக்கொள்ளும் வாய்ப்பைப் பெற்றுக்கொண்டதையும் நான் பெருமையாக உணர்கிறேன்.

பேராசிரியர் இ.விக்கினேஸ்வரன் ஒரு மிகப் பிரமாதமான கணிதவியலாளர் மற்றும் ஒரு சிறந்த கல்வியாளர் ஆவார். கணிதத்தின் மீதான அவரது புலமை காரணமாக, கடினமான கணித பாடங்களையும் எளிதில் புரிந்துகொள்ளக்கூடிய வகையில் கற்பிக்கும் தனித்துவமான திறனை அவர் கொண்டிருந்தார். தனது மாணவர்கள் வெற்றிபெற வேண்டுமென்பதற்காக அவர் தனது கடமை நேரத்திற்கு மேலதிகமாகவும் நேரத்தை செலவழித்தார். அத்தோடு தேவைப்படும் போதெல்லாம் வழிகாட்டுதலையும் ஆதரவையும் வழங்கினார். இது அவரது கடமை மீதான அர்ப்பணிப்பை வெளிக்காட்டுகிறது.

மேலும் அவரது உன்னதமான தலைமைத்துவத் திறன்களையும், சக ஊழியர்களிடையே சிறந்த கலாச்சாரத்தை ஊக்குவிப்பதில் அவரது அசைக்க முடியாத அர்ப்பணிப்பையும் காணும் பாக்கியம் எனக்கு கிடைத்தது ஒரு வரப்பிரசாதமாகும். அவர் எங்களுடைய தொழில்முறை அபிலாஷைகளைத் தொடர எங்களை ஊக்குவித்தார், மேலும் எங்கள் இலக்குகளை அடைய எங்களுக்குத் தேவையான வழிகாட்டுதலையும் ஆதரவையும் வழங்க எப்போதும் தயாராக இருந்தார்.

பேராசிரியர் இ.விக்கினேஸ்வரன் ஒரு ஆசிரியராகவும், தலைவராகவும் தனது உன்னதமான திறமைகளுக்கு அப்பால் ஒரு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனிவான மற்றும் மிகவும் இரக்கமுள்ள நபராக இருந்தார். அவர் தனது ஊழியர்களின் வாழ்க்கையில் உண்மையான அக்கறை கொண்டிருந்தார், மேலும் எங்களுக்கு மிகவும் தேவைப்படும்போது ஆலோசனை மற்றும் ஆதரவை வழங்க எப்போதும் தயாராக இருந்தார். மேலும் என்னுடைய தனிப்பட்ட பிரச்சனைகளை கேட்டு, ஊக்கமளிக்கும் வார்த்தைகளைக் கூறி அவர் என்னிடம் செலவழித்த நேரத்தை என்னால் என்றுமே மறக்க முடியாது.

மேலும், பேராசிரியர் இ.விக்கினேஸ்வரன் தனது சமூகத்திற்கு சேவை செய்வதில் ஆழ்ந்த அர்ப்பணிப்புடன் இருந்தார், தனது நேரத்தையும் வளங்களையும் தாராளமாக கொடுத்து, தேவைப்படுபவர்களுக்கு எப்போதும் உதவிக்கரம் நீட்டினார். அத்துடன் அவர் சைவ சமயத்தில் தீவிர நம்பிக்கை கொண்டவர். மற்றும் பிற மதங்களின் நம்பிக்கைகளையும் மரபுகளையும் ஆழமாக மதித்தார்.

பேராசிரியர் இ.விக்கினேஸ்வரனின் மறைவு எங்கள் இதயங்களில் ஒரு ஆழமான வெற்றிடத்தை ஏற்படுத்தியுள்ளது. இருப்பினும், அவர் உருவாக்கிய மாணவர்களின் மனங்களிலும் அவருடன் பணியாற்றிய கல்விசார், கல்விசார ஊழியர்களின் மனங்களிலும் அவர் என்றென்றும் நிறைந்திருப்பார் என்பதை அறிந்து ஆறுதல் அடைகிறோம். இத்தருணத்தில் அவர் வாழ்ந்த வாழ்க்கை முறையையும் அவர் ஆற்றிய பணியையும் நாங்கள் மிகவும் நன்றியுடன் மதிக்கிறோம்.

இந்த கடினமான நேரத்தில் அவரது குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவிப்பதுடன், அவரது ஆத்மா இணுவைக் கந்தன் திருவடியில் சாந்தியடைய நாம் எல்லோரும் சேர்ந்து பிரார்த்திப்போம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

**திரு.க.கணேசமூர்த்தி**

முன்னாள் கணினி விரிவுரையாளர் கணிதத்துறை,

விஞ்ஞானபீடம், கிழக்குப் பல்கலைக்கழகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதம் கொள் இணையிலி :
# இணுவைப் பேராளர் பேராசிரியர்
# இரத்தினம் விக்கினேஸ்வரன்

இன்சொலன், இன் முகத்தான், இணையிலான் எமது யாழ்ப்பாண பல்கலைக்கழக மேனாள் துணைவேந்தர் பேராசிரியர் இரத்தினம் விக்கினேஸ்வரன் அவர்கள்.

இணுவில் சைவ சமய சூழலில், செம்பாட்டு தோட்டப் பண்பாட்டிலும், புகையிலை சுருட்டுத் உற்பத்தி தொழில் பின்னணியிலும் வாழ்ந்து இணுவில் சைவப்பிரகாசம் வித்தியசாலை மற்றும் யாழ் இந்துக் கல்லூரி போன்ற பாடசாலைகளில் கல்வி கற்று புதிய வீச்சுடன் எழில் பெற்றார் அண்ணல். கணித விஞ்ஞானத் துறையில் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் முதல் பட்டம் பெற்று தொடர்ந்து இங்கிலாந்தின் சசெக்ஸ் பல்கலைக்கழகத்தில் உயர் கலாநிதிப் பட்டம் பெற்று வாழ்வாங்கு வாழ்ந்து நல்ல மனிதர் கூடிய சபையில் நற்பேறு பெற்று கணிதத்தில் பேராசிரியர் ஆகி மேன்மை பெற்றீர் ஐயனே!
இணுவைக் கந்தன் ஆலயம் உங்கள் மேலான அக்கறையுடன் கூடிய தொண்டுடன் பக்திப் பரவசத்தில் பக்தர்களை ஆற்றுப்படுத்தியது.

தங்கள் கல்விப் புலத்தில் மேலும் ஓர் ஒளி வீச்சாக ஒளிர்கிறது தங்கள் துணைவேந்தர் பதவி. அமைதியாக, ஆரவாரம் இன்றி அனைத்துப் பணிகளையும் மேற்கொண்டு பண்புகள் போற்றி சிறப்புப் பெற்றவர் நீங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலாநிதிப் பட்டப் பின் படிப்பை மேற்கொண்டு அமெரிக்கா, கனடா மற்றும் இங்கிலாந்து ஆய்வரங்குகளில் தமது ஆற்றலை மெய்ப்பிக்கும் அமர்வுகளில் அரங்கேறியவர் சர்வதேச தரத்திலானதாக ஆய்வுக் கட்டுரைகளை வழங்கியவர் எனும் பெருமையும் எம் மண்ணுக்கு உரிமையானது.கிழக்கு மற்றும் யாழ் பல்கலைக்கழக கணித விஞ்ஞான மற்றும் கணனித்துறைகளின் தலைவர், ஆசிரியர் அபிவிருத்தி மையங்களின் பணிப்பாளர், ஆசிரியர் சங்கங்களின் தலைவர், விஞ்ஞான பீடத்தின் அதிபதி, யாழ்ப்பாண பல்கலைக்கழக துணைவேந்தர் என எம் மண்ணுக்கு புகழ் தேடித் தந்த பெருந்தலைவர். மண்ணையும் மக்களையும் நேசித்த பெருந்தகை. பாராளுமன்றத்தில் கடமை ஆற்றிய அன்பர் நடராஜர் அருமை மருகர், அம்மையார் பவானியின் அன்பு மணாளன், இரத்தினம் மற்றும் பஞ்சவர்ணம் பெற்ற அருமை மூத்த மைந்தர் விக்கினேஸ்வரன். அவர்கள் ஆத்மா இணுவைக் கந்தன் மலரடி களில் சாந்தி பெறட்டும்.

**கலாநிதி கந்தையா சிறிகணேசன்**
**சிரேஸ்ட விரிவுரையாளர்,**
**ஆங்கில மொழிக் கற்பித்தல் துறை,**
**யாழ்ப்பாண பல்கலைக்கழகம்.**
**தலைவர்,**
**இணுவில் கலை இலக்கிய வட்டம்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் பேராசிரியர் இரத்தினம் விக்கினேஸ்வரன் அவர்களுடனான எனது நினைவுகள்

பேராசிரியர் இ.விக்கினேஸ்வரன் அவர்களை நான் கிழக்குப் பல்கலைக்கழகத்தில் மாணவனாக இருந்த காலம் முதல் நன்கு அறிவேன். அவரது துறையும் எனது துறையும் வேறுபட்டவையாக இருப்பினும் எங்களுக்கான உறவு மிகவும் நெருக்கமானது. விரிவுரையாளர்காக பலர் இருக்கலாம் அவர்களில் மாணவர்களின் உள்ளங்களை வெல்பவர்கள் ஒருசிலரே. அந்தவகையில் மாணவர்களால் நன்கு மதிக்கப்பட்டவரும் மிகவும் விரும்பப்பட்டவருமாக பேராசிரியர் இ.விக்கினேஸ்வரன் அவர்கள் விளங்கினார்.

கிழக்குப் பல்கலைக்கழகத்தில் நான் உதவிப் பதிவாளராக இருந்த காலத்தில் நிர்வாகப் பணிகளை சிறந்த முறையில் மேற்கொள்வதற்கு எனக்குப் பல்வேறு வகையிலும் ஆலோசனைகளை வழங்கி என்னை நெறிப்படுத்தியதடன் எனக்கு வழிகாட்டியாகவும் விளங்கினார். நான் பரீட்சைகள் பகுதியில் சிரேஸ்ட உதவிப் பதிவாளராக (பதில்) பணியாற்றும் போது பரீட்சைகள் தொடர்பான விதிமுறைகளை மிகவும் தெளிவாகவும் துல்லியமாகவும் எடுத்துக்காட்டினார். இவரிடமிருந்து சிறந்த அனுபவங்களைப் பெற முடிந்தது.

பேராசிரியர் கிழக்குப்பல்கலைக் கழகத்தில் சேவை யாற்றிய காலப்பகுதியில் பேராசிரியரும் நானும் ஒரே ஊரில் (செங்கலடி) வசித்து வந்ததால் அவர் சமூகம் தொடர்பாக கொண்டிருந்த அக்கறையையும் அவரது சமூகப்பணிகளையும் நான் நன்கு அறிவேன். யுத்தகாலங்களில் மாணவர்களுக்கு பல்வேறு தனியார் நிறுவனங்களிடமிருந்து பல்வேறுவகையான உதவிகளையும் பெற்றுக் கொடுத்ததுடன் தனிப்பட்ட முறையிலும் பல்வேறு உதவிகளைப் புரிந்தவர்.

பேராசிரியர் அவர்கள் யுத்த காலங்களில் பல்கலைக்கழக செயற்பாடுகள் சுமுகமாக நடைபெறுவதற்கு பல்வேறு தரப்பினருடனும் தொடர்பு கொண்டு முரண்பாடுகள், சிக்கல்களைத்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீர்க்க உதவினார். பல்கலைக்கழக சமூகத்துடன் மிகவும் நெருக்கமான மற்றும் சுமுகமான உறவைப் பேணியதுடன் பல்கலைக்கழக உறவுகளின் சுக துக்கங்களில் குடும்பத்துடன் பங்குகொள்பவராகவும் விளங்கினார்.

பேராசிரியர் இ.விக்கினேஸ்வரன் அவர்கள் கிழக்குப் பல்கலைக்கழகத்திற்கு தமது மகத்தான பங்களிப்பினை நல்கியுள்ளார். கணிதத்துறைத் தலைவராகவும் கணிணி அலகின் தலைவராகவும் செயற்பட்டு அத் துறைகளுக்கான தமது சேவையினை சிறந்த முறையில் வழங்கினார்.

1992ல் கணிதப்பிரிவில் விசேட கற்கைநெறியினை ஆரம்பிப்பதற்கு தனது பங்களிப்பை நல்கியதுடன் 1997ல் பௌதீக விஞ்ஞானக் கற்கை நெறிகளுக்கான கணிணி விஞ்ஞன கற்கை நெறியினை ஆரம்பிக்க அயராது உழைத்தார். இக்கற்கை நெறிகளுக்கான கலைத்திட்ட மற்றும் பாடத்திட்ட வடிவமைப்பிலும் தனது பங்களிப்பை வழங்கினார்.

19941997 வரையான காலப்பகுதியில் புறநிலைக் கற்கைகள் தொடர்பில் கணிணி கற்கைநெறியினை ஆரம்பிப் பதற்கும் தன்னாலியன்ற ஒத்துழைப்பினை பல்கலைக்கழகத்திற்கு வழங்கினார்.

பேராசிரியர் அவர்கள் 19962000 வரையான காலப் பகுதிகளில் எமது பல்கலைக்கழகத்தின் இந்துமாமன்றத்தின் பெரும் பொருளாளராகக் கடமையாற்றியதுடன் இக்காலப் பகுதியில் பல்கலைக்கழக விநாயகர் ஆலயத்தின் கட்டட வளர்ச்சியில் அக்கறையுடன் செயற்பட்டு அதன் வளர்ச்சிக்கும் ஊன்றுகோலாக இருந்தார்.

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் விளையாட்டுக் குழுவின் ஆலோசகராக ஒன்பது ஆண்டுகள் சேவையாற்றியதடன் மாணவர் களை இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும் ஊக்குவித்தார். எமது பல்கலைக்கழகத்தின் மூதவை உறுப்பினராகவும் பேரவை உறுப்பினராகவும் செயலாற்றி பல்கலைக்கழக விருத்திக்கு தனது பங்களிப்பினை வழங்கியுள்ளமை சிறப்பிற்குரியது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் ஆசிரியர் சங்கத்தின் தலைவராக 1999 - 2003 வரை செயற்பட்டு அதனை சிறந்த முறையில் வழிநடத்தியதோடு ஊழியர் முன்னேற்ற அமையத்தின் (SDC) பணிப்பாளராகவும் பணியாற்றி ஊழியர்களின் முன்னேற்றத்தில் அக்கறையோடு செயற்பட்டு அவர்களுக்கான பயிற்சிப்பட்டறைகளையும் கருத்தரங்குகளையும் நடாத்தியமை குறிப்பிடத்தக்கது.

பேராசிரியர் அவர்கள் சர்வதேச நாடுகள் பலவற்றிலும் நடைபெற்ற ஆய்வு மாநாடுகள் பலவற்றிலும் கலந்து கொண்டு தனது ஆய்வுகளை முன்வைத்து பல விருதுகளையும் பெற்று எமது பல்கலைக்கழகத்திற்கு பெருமைசேர்த்துள்ளமை போற்றத்தக்கதாகும். இவ்வாறு கிழக்குப் பல்கலைக்கழகத்திற்கு அளப்பரும் சேவையாற்றிய பேராசிரியர் அவர்கள் 2004ல் கிழக்கு மாகாணத்தில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழத்தில் சிரேஸ்ட விரிவுரையாளராக இணைந்து கொண்டதோடு அங்கும் பல்வேறு பதவிகளைப் பெற்று உபவேந்தர்நிலைக்கு உயர்ந்த ஒரு பேராளுமை என்றால் மிகையாகாது. தன்னம்பிக்கை, மனிதநேயம் மிக்கவரும் நடுநிலையாளனும் சமூகப்பற்றாளனுமாகிய பேராசிரியர் இ.விக்கினேஸ்வரன் அவர்களின் இழப்பு எமது கல்விச் சமூகத்திற்கு பேரிழப்பாகும். அன்னாரின் பிரிவால் துயருறும் அவரின் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றேன்.

**திரு. அ. பகீரதன்**
**பதிவாளர்**
**கிழக்குப் பல்கலைக்கழகம்,**
**இலங்கை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறைந்தும் மறையாத மாமனிதர் எங்கள் விக்கினேஸ்வரன்

“வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் - வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்”

என்னும் வள்ளுவர் வாக்கிற்கிணங்க வாழ்ந்து இணுவை மண்ணிற்கும், கல்வியறிவிற்கும் பெருமை சேர்த்தவர் பேராசிரியர் இ.விக்கினேஸ்வரன் அவர்கள். இறைநம்பிக்கை மிகுந்த குடும்பத்தில் தோன்றி ஒழுக்க விழுமியப் பண்புகளை சிறு வயதிலே கடைப்பிடித்த இவர் இணுவைக் கந்தன் மீது ஆராத பக்தி கொண்டு தொண்டாற்றினார்.

இணுவை மாநகரின் அடையாளமே இணுவைக் கந்தசாமி கோவில் ஆகும். சமயப் பணியே தனது திருப்பணியாக ஏறத்தாழ பத்து வருடங்களுக்கு மேலாக ஆலயத்தின் பல நிர்வாகப் பொறுப்புக்களை ஏற்று சிறப்பாக நடாத்தியுள்ளார். கோவில் தெற்கு வாசல் கோபுரம் அவரது அயராத முயற்சியினால் கட்டி முடிக்கப்பட்டு அவரது தலைமையின் கீழ் கும்பாபிசேகம் நடாத்தப்பட்டது. அவர் தலைவராக இருந்த காலப்பகுதியிலேயே கோவில் சிற்ப வேலைப்பாடுகளுடன் புனருத்தாரணம் செய்யப்பட்டு 33 ஓம குண்டம் அமைத்து மாபெரும் கும்பாபிசேகம் 2014 ஆம் ஆண்டு நடைபெற்றது.

சைவப் பணிமனையின் இளந்தொண்டர் சபையும் அவரது காலத்திலேயே நிறுவப்பட்டு, சமயப் பணிகள் பல மேற்கொள்ளப்பட்டன. திருவிழாக் காலங்களில் ஆலயத்திலே தன்னாலான பணிகளைச் செய்வதில் ஆர்வம் காட்டினார். தனது கல்வி சார் வேலைப்பளுவின் மத்தியிலும் இணுவைக் கந்தனை தினமும் வந்து தரிசித்தே செல்வார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டப்படிப்புக்களை நிறைவு செய்து கிழக்குப் பல்கலைக்கழகம், யாழ் பல்கலைக்கழகங்களின் விரிவுரையாளராக, பேராசிரியராக அரும்பணியாற்றினார். யாழ் பல்கலைக்கழக துணை வேந்தராக, அமைதியான, நேர்மையான வழியில் பதவியேற்று சிறப்பான சேவையினை எம் மண்ணுக்கு அளித்தார். அற ஒழுக்கமும், இறை நம்பிக்கையும், கல்விச் சிறப்பும், எளிமையும், தன்னடக்கமும் கொண்ட சான்றோனான விக்கினேஸ்வரன் அவர்கள் அதர்மத்திற்கு தலை சாயாத நீதி நெஞ்சனாக வாழ்ந்து காட்டியவர்.

ஆழ்ந்த கல்வியறிவும், ஆன்மீக நெறியும், இறை தொண்டும் மிக்க விக்கினேஸ்வரன் அவர்களை இழந்து நிற்பது, அவரது குடும்பத்திற்கு மட்டுமல்ல எமது இணுவை மண்ணுக்கும் ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும். அன்னாரின் ஆத்மா இணுவைக் கந்தனின் இணையடியில் இளைப்பாறட்டும் என வேண்டி மன அமைதி பெறுகின்றோம்.

ஓம் சாந்தி ! சாந்தி ! சாந்தி!

**இ. பாலச்சந்திரன்**
**அறங்காவல் சபை தலைமை**
**இணுவில் கந்தசாமி கோவில்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரங்கற் செய்தி

உயர்திரு. விக்கினேஸ்வரன் ஐயா அவர்களின் பிரிவுச் செய்தி கேட்டு மனம் வருந்தியவர்களில் கோண்டாவில் நெட்டிலிப்பாய் சமூகமும் ஒன்றாகும். அமரர் அவர்கள் நெட்டிலிப்பாய் பிள்ளையார் ஆலயத்தின் முன்னாள் நிர்வாகசபைத் தலைவராக இருந்த காலஞ்சென்ற செல்லப்பா நடராசா அவர்களின் அன்பு மருமகனாவார்.

அமரர் அவர்கள் கோண்டாவில், இணுவில் கிராமங்களில் உள்ள ஆலய வளர்ச்சிக்கும், மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கும் தன்னாலான தொண்டுகளை அவரது குடும்பத்தினருடன் சேர்ந்து செயற்படுத்தி வந்தவர்.

இறைபக்தி நிரம்பப் பெற்ற அமரர் அவர்கள் தனது இறுதி நாள் வரை பல்கலைக்கழக கல்வி செயற்பாடுகளில் பங்களிப்பை வழங்கி இவ்வுலகை விட்டு சென்றுள்ளார்.

அன்னாரின் திடீர் இழப்பு அவரது குடும்ப்தினருக்கும் கோண்டாவில் சமூகத்திற்கும் பேரிழப்பாயினும் அவரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

**நெட்டிலிப்பாய் பிள்ளையார் ஆலய**
**நிர்வாகம், கோண்டாவில்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## -இதய அஞ்சலி-

துணைவேந்தர் திரு.இ.விக்கினேஸ்வரன் அவர்கள் பழகுவதற்கு இனியவர், பண்பாளர், நல்லதை நினைப்பவர், நால்லொழுக்கம் பேணுபவர், நல்லுறவு காப்பவர், நற் செயல்புரிபவர், இல்லார்க்கு உதவும் நற் பண்பாளர் இன்று எம்முடன் இங்கில்லை

உண்மையில் எம் அனைவர்க்குமே தாங்க முடியாத துயர். குறிப்பாக அவர் துணைவியர், பிள்ளைகளுக்கு சொல்வதற்கு எந்த ஆறுதல்வார்த்தைகளுமே எம்மிடமில்லை. கனடா இணுவில் திருவூர் ஒன்றியத்தின் சார்பில் எங்களின் ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்து கொள்கிறோம் .

விக்கினேஸ்வரன் அவர்கள் சிறந்த சமயப்பற்றாளர். சிறந்த முருக பக்தர். தினமும் அதிகாலை 4 மணிக்கு இணுவைக் கந்தனின் ஆரத்தி, அபிஷேகம், அலங்காரம் காண அவர் கண்கள் என்றுமே மறுத்ததில்லை-மறந்ததில்லை இறுதி அவர் மறைவுவரை.

தன் வெற்றியின் பின்னணியில் முன்னின்று உழைப்பவர் முருகப்பெருமானே என்றுவாயார மனமார தினமும் புகழ்ந்துரைப்பர். இணுவை கந்தனும் அதற்கு அமைவாகவேஇவரை தம் ஆலய நிர்வாக சபையில் அங்கத்தவராக, பொருளாளராக, தலைவராக நீண்டநாள் சேவை செய்ய பணித்திருக்கின்றார். அவரின் இளமைக்காலம் முதல் அவரைநன்கறிவேன் மிகவும் கடினமான சூழ்நிலையை கடந்துதான் பலவித சிரமங்கள்மத்தியிலும் தமது ஆரம்பக் கல்வியிலிருந்து உயர் கல்வியினை நிறைவு செய்தவர்.

நான் நினைக்கிறேன் அவரின் சாதகத்தில் புதன் கிரகம் உச்சம் பெற்றிருக்க வேண்டும். அவர்களால் தான் சோதனையையும் சாதனையாக்கி கொள்ள முடியும். 1977ல் பௌதீக விஞ்ஞானத்துறை மாணவராக பல்கலைக்கழக பட்டப் படிப்பிற்க்கு தேர்வாகி அதனைநிறைவுசெய்து பின்னர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரிவுரையாளராக, பேராசிரியராக பணிபுரிந்து லண்டன் sussex பல்கலைக்கழகத்தின் கலாநிதி கௌரவ விருதினையும் பெற்று நிறைவாக 2017ல் யாழ் - பல்கலைக்கழக துணைவேந்தராக நியமனம் பெற்று அந்த புகழ்பூத்த அரியாசனத்தை அலங்கரித்து எங்கள் இணுவைமண்ணையும், இணுவை மக்களையும் முன்நிலைப்படுத்திய பெருமகனார் என்றால் அதுமிகையாகாது . இணுவை கந்தன் நிர்வாகிகளும் துணை வேந்தரை கௌரவிக்கும் வகையில் ஆலய முன்றலில் பெருவிழா எடுத்துமகிழ்ந்தனர்.

2019ல் இவர் கனடாவிற்கு வருகை தந்த சமயம் எங்களின் அழைப்பையேற்றுகனடா இணுவில் திருவூர் ஒன்றியத்தின் ஆதரவில் இடம் பெற்ற பாராட்டு விழாவில்கௌரவ விருந்தினராக கலந்து சிறப்புரை வழங்கி எங்கள் அனைவரையும் மகிழ்வித்தார். நீண்ட நாட் களின் பின் பழகிய நண்பர்கள், உறவுகளை மீண்டும் கண்டு குலாவி மகிழ்ந்து பிரிய மனமின்றி எம்மிடமிருந்து விடைபெற்றார். சென்ற மாதம் அவர் பிரிவித்துயர் அறிந்து அனை வரும் கலங்கிப்போய்விட்டோம் துணைவேந்தர் விக்னேஸ்வரனின் ஆன்ம சாந்திக்காய்எல்லாம் வல்ல இணுவை கந்தனின் பாதார விந்தங்களை வேண்டி அவர் பிரிவால்துயருற்றிருக்கும் குடும்பத்தினர்க்கு எங்கள் இதய பூர்வமான அஞ்சலிகளையும் அனுதாபங்களையும் தெரிவித்து பணிகின்றோம் .

ஓம் சாந்தி!

**கனடா இணுவில் திருவூர் ஒன்றியத்தின் சார்பில்**
**இணுவையூர்**
**அருள்சோதி - கந்தையா**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரம் பெற்றவர் தடம் பதித்தவர்

அமரர் பேராசிரியர் இரத்தினம் விக்கினேஸ்வரன் அவர்கள் யா/ இந்துக் கல்லூரியில் கல்வி கற்க 1971 ஆம் ஆண்டின் தரம் 8 ல் காலடி வைத்த போது நானும் கல்வி கற்கச் சென்றேன். வேறு வேறு பிரிவுகளில் நுழைந்தோம். அன்று தொட்டு இன்று வரை எமது நட்பு தொடர்கின்றது. இணுவில் கந்தசாமி கோவில் தர்மகத்தா சபையில் தற்போது அமரர் செயலாளராகவும், நான் பொருளாளராகவும் சேவை செய்கின்றோம்.

அதிகம் பேச மாட்டார். செயற்பாட்டில் உறுதியானவர். சில சந்தர்ப்பங்களில் சீறி வரும் கோபம் சில வினாடிகளில் சாந்தமாகி விடுவார். அமரர் ஓய்வுநிலை அதிபர் செ.சோதிப்பெருமாள் தலைவராக இருந்த காலத்தில் அமரர் விக்கினேஸ்வரன் பொருளாளராக செயற்பட்டார்.

நேர்த்தியாக தனது கடமைகளைச் செய்வார். ஆலய திருப்பணிக்காகவோ, பூசைக்காகவோ சிலர் வழியில் வைத்து பணத்தைக் கொடுக்க முனைவர். அதனைப் பெற்றுக் கொள்ள மாட்டார். அலுவலகத்தில் கட்டுங்கள் அல்லது நான் அங்கு நிற்கும் போது கொண்டு வாருங்கள் என்பார். ஆலயப் பணம் ஆலயத்திலேயே வைக்கப்படும்.

அக்காலத்தில் அமரர் தனது நண்பர்கள் குழாமுடன் சேர்ந்து செய்த திருப்பணிகள் அசுர வேகத்தில் நடைபெற்றன. 33 குண்ட கும்பாபிசேகம் வரலாற்றில் பெருமை கொள்ள வைத்தது. இன்றும் மனக்கண் முன் பதிவாக உள்ளது. முருகன் அடியவர்கள் அனைவரது முழு ஆதரவும் இருந்தது.

தலைவராக இருந்த செ.சோதிப்பெருமாளின் மறைவின் பின் அமரர் பேராசிரியர் இரத்தினம் விக்கினேஸ்வரன் தலைமைப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொறுப்பை ஏக மனதான தெரிவின் மூலம் ஏற்று வழிநடத்தினார். அதிகாலையிலும், மாலையிலும் இணுவைக் கந்தன் எழில் காண வருவார். தனது கடமைகளைச் செய்வார். வழிபாடுகளில் ஈடுபடுவார். பூசைகள் முடிந்த பின் ஆறுமுக சுவாமி வாசலில் அமர்ந்திருந்து மௌனமாக முருகன் பாமாலைகளை ஓதி வழிபடும் காட்சி பக்திப் பரவசத்தை மீட்டும். ஆலயப் பணியாளர்கள் அனைவரும் நிறைவான மனத்துடன் தமது கடமைகளை செய்து வந்தமை குறிப்பிடத்தக்கது.

அமரர் மணவாழ்க்கை பெற்ற இடம் கோண்டாவில். புகழ் பூத்த பாழிமென்ற் நடராசா என அழைக்கப்படும் ஓய்வு நிலை பாராளுமன்ற கென்சாட் அறிக்கையாளரும், கோண்டாவில் நெட்டிலுப்பாய் விநாயகர் ஆலய பரிபாலன சபை முன்னாள் தலைவருமாகிய செல்லப்பா நடராசாவின் மகள் ஆவார். நான் கல்வி கற்பித்த யா/ கோண்டாவில் இந்துக் கல்லூரியில் செல்லப்பா நடராசா ஞாபகார்த்த திறந்த வெளி மேடையொன்று அவர் தம் குடும்ப உறுப்பினர்களால் அமைக்கப்பட்ட போது அமரர் இ.விக்கினேஸ்வரனின் முழு ஒத்துழைப்பும் இருந்தது. கோண்டாவில், இணுவில் பிரதேசங்களில் நடைபெறும் எந்தப் பொது நிகழ்வுகளிலும் அழைக்கப்படும் போது சென்று பங்குபற்றுவது இவரது சிறப்பியல்பு ஆகும். உறவினர், நண்பர்களின் சுக துக்கங்களிலும் தவறாது பங்கு பற்றுவார்.

இணுவில் கந்தசாமி கோவில் ஆறுமுக சுவாமி வாசல் கோபுரம் அன்னாரது சுய முயற்சியால் அமைக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது. சிறு வயதில் அக் காலத்திற்கே உரித்தான குடும்பக் கட்டுப்பாட்டுடன், தந்தையாருக்கு உதவியாக தோட்ட வேலைகள், சுருட்டுக் கைத்தொழில், இறை வழிபாட்டுடன் பரபரப்பில்லாத கல்வியை இணுவில் சைவப்பிரகாச வித்தியாசாலை அல்லது அம்பியர் பாடசாலை என முன்பு அழைக்கப்பட்ட இணுவில் இந்துக் கல்லூரியில் ஆரம்பித்தவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயர்தர சித்தியில் விஞ்ஞானமாணி கற்பதற்கு பல்கலைக்கழகத்தில் பதிவு செய்த பின் முகங்கொடுத்த க.பொ.த உயர்தர பரீட்சையில் சித்தி பெற்று பொறியியல் படிப்பதற்கு வாய்ப்புக் கிடைத்தாலும் முன்பதிவு செய்தமையால் அது கைகூடாமல் போனது. இன்று நோக்கும் போது கைகூடாதமை இறைவனின் வரம் எனலாம்.

அது மட்டுமன்றி யாழ் பல்கலைக்கழகத்தில் முதல் மாணவ துணைவேந்தர் பதவி கிடைத்தமை, அவர் அங்கு பதித்த தடம், கைலாசபதி அரங்கில் உணர்வு பூர்வமாக அஞ்சலி செய்து இறுதி ஊர்வலம் ஆரம்பித்தமை, இணுவில் மக்கள் இணுவில் சந்தியில் அஞ்சலி பெருவளைவு கட்டி அங்கிருந்து நடை பவனியாக இறுதி ஊர்வலம் நடைபெற்றமை, இவை கூட வரமாகும்.

இவற்றுடன் செல்லப்பா நடராசா அரங்கு, இணுவில் கந்தசாமி கோவில், ஆறுமுக சுவாமி வாசல் கோபுரம் என்பனவும் அன்னாரது வாழ்க்கைத் தடத்தை பறைசாற்றி நிற்கின்றன.

**இ.அருணகிரிவாசன்**
**பொருளாளர், தர்மகத்தா சபை**
**இணுவில் கந்தசாமி கோவில்**
**ஓய்வுநிலை உப அதிபர்**
**யா / கோண்டாவில் இந்துக் கல்லூரி**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளந்தொண்டன்

எம் ஊரின் இரத்தினமான திரு.இரத்தினம் விக்கினேஸ்வரன் இணுவில் இளந்தொண்டர் சபையில் இள வயதிலேயே இணைந்து கவிஞர் ச.வே.பஞ்சாட்சரம் அவர்களின் வழிகாட்டலில் பல சமய சமூக பணிகளில் ஈடுபட்டவர்.

இளந்தொண்டர் சபையின் தலைவராக செயலாளராக, பொதுச் சபைத் தலைவராக இடையறாது கடமையாற்றி எமது சபைப் பணிகளையும், விழாக்களையும் அலங்கரித்தவர். இளஞ் சிறார்களின் கல்வியில் கொண்ட ஈடுபாடு காரணமாக அவர்களுக்கு வித்தியாரம்பம் செய்து எமது முன்பள்ளியின் பல விழாக்களையும் சிறப்பித்தவர்.

சமய சமூகத் தொண்டின் மீதான அவரின் ஈடுபாடு அவரை இணுவைக் கந்தனுக்கு சேவை செய்யும் வாய்ப்பினை நல்கியது. ஆலய அறங்காவலரான இவர் அச் சபையின் தலைவர், செயலாளர், பொருளாளர் பதவிகளை அலங்கரித்தவர். அரிய பாரிய திருப்பணிகளைச் செய்து இணுவைக் கந்தன் புகழ் ஓங்கப் பாடுபட்டவர். இடையறாது இணுவைக் கந்தனை தரிசித்து வாழ்ந்தவர்.

இணுவில் இந்துக் கல்லூரி, யாழ் இந்துக் கல்லூரி மாணவரான இவர் எவ்விடர் வந்த போதும் கல்வியைத் தாயாரின் உதவியுடன் கற்று பல்கலைக்கழகம் சென்று பட்டம் பெற்றவர். அங்கு பேராசிரியராகி பிற நாடுகள் சென்று கல்வி கற்று பல்கலைக்கழகங்களின் உச்சப் பதவியாம் உப வேந்தர் பதவியும் பெற்றார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர் யாழ் பல்கலைக்கழகம், மட்டக்களப்பு பல்கலைக்கழகம் ஆகியவற்றில் அளப்பரிய சேவை ஆற்றினார். அவர் சேவையில் இருந்த வேளையிலேயே அவர் இதயம் அவருடன் செயற்பட மறுத்தது. அவரது சேவையையும் தடுத்தது.

அன்னார் அமைதியாக எம்மை விட்டு அகன்று விட்டார். அவரது பாராட்டு விழாவும், இறுதி வைபவமும் அவரது சேவைக்கு ஓர் எடுத்துக் காட்டாகும்.

எம் சபை உள்ளவரை அவரது நாமம் என்றும் வாழும். அவரது பணிகள் தொடரும். என்றும் அவர் நினைவுகள் எம்முடனே.

அவர் ஆத்மா சாந்தி பெற அவரது குடும்ப உறவுகளுடன் நாமும் பிரார்த்திக்கின்றோம்.

ஆடும் பரிவேல் அணி சேவலென
பாடும் பணியே பணியாய் அருள்வாய்

**இளந் தொண்டர் சபை**
**சைவப் பணிமனை**
**இணுவில் கந்தசாமி கோவில்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அர்ப்பணிப்பு மிக்க தலைவர்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தரும், இணுவில் லயன்ஸ் கழகத்தின் முன்னாள் தலைவருமான பேராசிரியர் விக்கினேஸ்வரன் அவர்களின் மறைவு எமது சமூகத்துக்கு பேரிழப்பாகும். இணுவில் கிராமத்தை பிறப்பிடமாகவும் கோண்டாவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த அமரர் பேராசிரியர் விக்கினேஸ்வரன் அவர்கள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் விஞ்ஞான பீடத்தின் பீடாதிபதியாகவும், யாழ். பல்கலைக்கழக துணைவேந்தராகவும் பணியாற்றி பல்கலைக் கழகத்தின் வளர்ச்சிக்கும் மாணவர்களின் மேம்பாட்டிற்கும் பெரும் பணியாற்றியது மட்டுமன்றி ஏழை மக்களின் வளர்ச்சிக்கு உதவும் இணுவில் லயன்ஸ் கழகத்தின் தலைவராகவும், உறுப்பினராகவும் 2013ஆம் ஆண்டிலிருந்து பணியாற்றினார். அவரின் அர்ப்பணிப்புமிக்க சேவையினால் இணுவில் கிராம மக்கள் மட்டுமன்றி யாழ். குடாநாட்டு மக்களும் இலங்கை மக்களுமே பயன்பெற்றனர் எனக் கூறினால் அது மிகையாகாது.

“சேவை செய்வதே ஆனந்தம்” என்ற தாரக மந்திரத்தை உயிர்மூச்சாகக் கொண்ட லயன்ஸ் கழகம் இவரது பதவிக் காலத்தில் பெரும் பெயரையும் புகழையும் சம்பாதித்துக் கொண்டது. இவர் தலைவராக இருந்த காலத்தில் இணுவில் மக்களுக்கான மருத்துவ முகாம், பாடசாலை மாணவர்களுக்கான இலவச எழுது கருவிகள் வழங்குதல், ஏழை மக்களுக்கான உலர் உணவு வழங்கல் ஆகிய சேவைகளில் ஈடுபட்டு அவர்களின் வளமான வாழ்விற்கு நடவடிக்கை எடுத்தமையை எவரும் மறக்கமுடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணுவில் லயன்ஸ் கழகம் உறுதியுடன் இயங்குவதற்கு ஆலோசனையை வழங்குவது மட்டுமன்றி தேவையான நிதியுதவியையும் வழங்கிவந்தார். அவரின் தன்னலமற்ற சேவையானது இணுவில் லயன்ஸ் கழகம் சிறப்பாக இயங்குவதற்கு வாய்ப்பளித்தது. சிறு வயதிலிருந்து ஏழை மக்களின் செழிப்பான வாழ்விற்கு உதவவேண்டும் என்ற அவரின் விரும்பம் இணுவில் லயன்ஸ் கழகத்தினூடே நிறைவேறியமை பாராட்டுக்குரியதாகும். சமூகத்தில் போற்றுதற்குரிய கல்விமானாகவும் சமூக சேவையில் கலங்கரை விளக்கமாகவும் விளங்கிய பேராசிரியர் விக்கினேஸ்வரன் அவர்களின் மறைவு இணுவில் லயன்ஸ் கழகத்துக்கு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும். அவரை இழந்து தவிக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**இணுவில் லயன்ஸ் கழகம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இணுவைப் பெரிய கோவிலும் பேராசிரியரும்

சைவமும், தமிழும், கவின்கலைகளும் தழைத்து வளரும் இணுவை மண்ணில் சிறப்புற விளங்கும் ஆலயங்களுள் தனித்தன்மை வாய்ந்தது பெரிய கோவில் என அழைக்கப்படும் இணுவைக் கந்தன் ஆலயம். இவ் ஆலயச் சூழலிலே எளிமையான முறையில் தனது வாழ்க்கையைத் தொடங்கி கந்தப் பெருமானையே தனது குலதெய்வமாகக் கொண்டு உலகம் போற்ற உலகமறிய வாழ்ந்தவர் பேராசிரியர் இரா.விக்கினேஸ்வரன் அவர்கள்.

இணுவைக் கந்தன் ஆலயம் காலத்தால் முற்பட்ட வரலாற்று தன்மையை தன்னகத்தே கொண்டது. அது மாத்திரமன்றி ஆலய அமைப்பின் அளவுப் பிரமாணத்தால் "ஒரு தெண்டு பிரமாணம்" கூடுதலாக அமைந்து காணப்படுவதால் பெரிய கோவில் எனவும் பெயர் பெற்று விளங்குகின்றது.

ஆலயத்தின் ஆரம்ப கால சரித்திரத்தினை நோக்கின் தென் இந்தியாவின் தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள திருக்கோவலூர் என்னும் ஊரில் நின்றும் யாழ்ப்பாண இராட்சியம் வந்த திருக்கோவலூர் பேராயிரமுடையோன் முதலி என்னும் வேதான் தலைவன் இணுவிலின் ஆள்பதியாக இருந்த காலத்தில் அவனால் அமைக்கப்பட்ட ஆலயமாகக் கருதப்படுகின்றது. இவரது காலம் கி.பி 1345 ஆம் ஆண்டென யாழ்ப்பாணச் சரித்திரம் என்னும் நூல் முதலியார் இராசனாயம் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

பேராயிரமுடையோன் முதலி கண்ட சொற்பனத்துக் கேதுவாக காஞ்சிபுரத்து கந்தக் கோட்டத்து முருகனும் அவனுடன் உறையும் கால பைரவரும் இரு சிறுவர்களாக வந்து தம்மை ஆதரிக்கும் படி கூறியதற்கு ஏதுவாக முருகனை வேல் வடிவிலும், கால பைரவரை சூல வடிவிலும் வைத்து வழிபட்டான் எனவும், அவன் தம்பி கனகராச முதலி திருக்கோவலூர் கந்தக் கோட்ட


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலயத்தின் நின்றும் பைரவ தீர்த்தத்தை காவடிகளில் சுமந்து வந்து ஆலயத்திற்கான தீர்த்தத்தையும் கந்தக் கோட்டத்தை ஒத்த ஆலயத்தையும் அமைத்தான் எனவும் இணுவைப் பதிகம் என்னும் நூலில் வறுத்தலைவிளான் மயில்வாகனப் புலவர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

அந்நியர் ஆட்சிக் காலத்தில் இவ்வாலயம் சிதைவுற்றுப் போக குழந்தையர் வேலாயுதர் என்பவரது கனவில் முருகப் பெருமான காட்சி கொடுத்து உனது மூதாதையர் என்னை வழிபட்டது போல் நீயும் என்னை வழிபடு. எனது இருப்பிடம் இதுவே என அன்னாரது கொஞந்து தோட்டத்தில் எம் பெருமான நொச்சித்தடியினையும் ஊன்றி காலால் மிதித்து அடையாளம் காட்டிய இடத்தில் அமைந்ததுவே இன்று நாம் காணும் இணுவில் கந்தசாமி கோவில் ஆகும்.

இவ்வாலயம் ஆகம விதிக்கமைய கட்டப்பட்ட காலம் கி.பி 1735 என ஆலயத்தில் காணப்படும் கல்வெட்டொன்று கூறுகின்றது. ஆலயம் அமைவுற்ற காணியின் பெயர் "நொச்சி ஒல்லை மிதியன்" எனவும் ஆலயத்தின் தல விருட்சம் நொச்சிமரமாகவும் உள்ளதை இன்னும் நாம் அவதானிக்கலாம். இவைகள் மேற்கூறிய நிகழ்வுக்கான சான்றுப் பொருளாகக் கொள்ளலாம்.

இவ்வாலயம் 1964 ஆம் ஆண்டளவில் உயர் நீதிமன்றத்தினால் பொதுக் கோவிலாகப் பிரகடனப்படுத்தப்பட்டது. அதற்கமைவாகவே காலத்திற்கு காலம் நிர்வாக சபைகள் அமைக்கப்பட்டு ஆலய பரிபாலனம் மேற்கொள்ளப்படுகின்றது.

இத்தகைய நிர்வாக சபையில் 2010 ஆம் ஆண்டளவில் தன்னை இணைத்துக் கொண்டவர் பேராசிரியர் விக்கினேஸ்வரன் அவர்கள். இவர் மாணவப் பருவத்தவராய் இருந்த வேளையில் 1976 ஆம் ஆண்டளவில் ஆலயச் சூழலில உருவாக்கப்பட்ட இணுவில் கந்தசாமி கோவில் இளந்தொண்டர் சபையில் ஸ்தாபக


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறுப்பினராக தன்னை இணைத்துக் கொண்டார். சபையின் வளர்ச்சியிலும், ஆலயத்தின் வளர்ச்சியிலும் பெரிதும் அக்கறை காட்டி ஆத்மீக சேவை புரிந்தார். 1984 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இளந் தொண்டர் சபையின் தலைவர் பொறுப்பினை ஏற்று திருமுறை விழாக்களையும், நவராத்திரி விழாக்களையும் நடத்தியதோடு மட்டுமல்லாது பேச்சுப் போட்டி, பண்ணிசைப் போட்டி, சமய அறிவுக்கான பரீட்சைகளையும் பாடசாலை மட்டத்தில் நடாத்தி சபையின் வளர்ச்சிக்கு உரமூட்டினார். 1987-1988 காலப்பகுதிகளில் நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையால் மக்கள் நிலைகுலைந்த வேளையில் ஆலயத்தின் நிர்வாகத்தையும், இளந்தொண்டர் சபையின் சமூக சேவையையும் நிலைநிறுத்துவதில் அரும் பணியாற்றி அதில் வெற்றியும் கண்டார்.

மூர்த்தி, தலம், தீர்த்தம் இவை மூன்றும் முறையாக அமைந்த இணுவைக் கந்தன் ஆலயத்தின் கீர்த்தி மிகு மூர்த்தியாகத் திகழும் ஆறுமுகப் பெருமானின் வனப்பில் தன்னை இணைத்துக் கொண்ட விக்கினேஸ்வரன் அவர்கள் அதிகாலைப் பூசையான திருவனந்தல் பூசையில் கலந்து கொண்டு எம்பெருமானது திருப்பள்ளி எழுச்சி பாடல் கேட்டு விஸ்பரூப தரிசனம் காணும் பாக்கியவானாக எம் பெருமானது சந்நிதியில் தினமும் கலந்து எம்பெருமானது தரிசனங்களை அனுபவித்து வந்தார்.

ஆறுமுகப் பெருமானின் முன்பாக அமர்ந்து தினமும் கந்தசஷ்டி கவசம் பாராயணம் பண்ணி தியானத்தில் ஆழ்ந்திருப்பார். எம்பெருமான் மீது கொண்ட பக்தியின் காரணமாக சண்முகப் பெருமான் வாயிலில் ஓர் கோபுரம் அமைக்கப்பட வேண்டும் என்னும் நோக்கில் செயற்பட்டு பெருமுயற்சி எடுத்து ஆலயத்தின் தெற்கு வாசலில் சண்முகப் பெருமானுக்கான கோபுரம் ஒன்றினை அமைத்து மன நிறைவு பெற்றார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலய நிர்வாக சபையில் 2010 ஆம் ஆண்டளவில் இணைந்து ஆலயத்தின் தலைவராகவும், செயலாளராகவும், பொருளாளராகவும் பல வழிகளிலும் தனது சேவையை இறுதி மூச்சு நிற்கும் வரை இறை அர்ப்பணிப்புடன் பணிபுரிந்த உத்தமர் இவர்.

தினமும் அதிகாலையில் 5 மணியளவில் ஆலயம் வந்து பூசையில் கலந்து தியானம் மேற்கொண்டு காலை 6 மணியளவில் பரராசசேகரப் பிள்ளையாரின் மணி ஓசை கேட்கும் பொழுது பைரவப் பெருமானின் சந்நிதியை தரிசித்து ஆலயத்தில் நின்று வீடு சென்று அன்றாட கடமைகளில் ஈடுபடுவதே இவரது வழக்கமான செயல்.

தேகவியோகமடைந்த அன்றைய தினம் கூட இந்த நிகழ்வே நிகழ்ந்தது. அன்றைய தினம் மதியம் 2 மணியளவில் எனது அயலில் நடைபெற்ற மதிய விருந்தொன்றில் விக்கினேஸ்வரனைச் சந்தித்தேன். அதுவே எமது இறுதிச் சந்திப்பபாக அமைந்தது.

"வினைப் போகமே ஒரு தேகங்கண்டாய்
வினைப் போகம் முடிந்த பின் தினைப்போதும் தங்காதே"

என்னும் கூற்றிற்கிணங்க தான் எடுத்த தேகத்தின் தன்மைக்கேற்ப வினைப்போகத்தினை நுகர்ந்து முடிந்து அன்னாரின் ஆன்மா கூட்டை விட்டு சென்று விட்டது. அன்னாரது இறுதி நிகழ்வுரையில் துணைவேந்தர் ஸ்ரீசற்குணராஜா அவர்கள் கூறியது போன்று இணுவில் சூழலில் இவரது குல தெய்வமான கந்தப் பெருமானது அருட்பார்வை இவர் மீது இருந்தபடியால் அங்கே காலனால் இவரது உயிரைக் கவர முடியவில்லை. அதே போன்று வீட்டிலும் இவரது இல்லத்தரசி சாவித்திரிக்கு ஒப்பானவளாய் திகழ்ந்தபடியால் காலனால் வீட்டிலும் இவரது உயிரைக் கவர முடியவில்லை. அதன் காரணமாக நடுவழியில் வைத்து உயிரைக் காவு கொண்டான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணுவைப் பெரிய கோவிலெனும் கந்தப் பெருமான் ஆலயத்தில் தன்னை இணைத்து கந்தன் அருள் பெற்ற விக்கினேஸ்வரன் கல்விச் சேவையில் பல்கலைக்கழக பேராசிரியராகவும், துணைவேந்தராகவும் திகழ்ந்து எமது ஊருக்கும், உலகத்திற்கும் பெருமனிதனாக வாழ்ந்து காட்டிய ஆத்மா ஆவார்.

அன்னாரின் ஆத்மா சாந்திக்காக என்றென்றும் கந்தப் பெருமான் திருவடிகளில் நிலைத்திருக்க கந்தவேள் பெருமான பாதம் பணிவோம்.

**ஞான ஏந்தல் மா.ந.பரமேஸ்வரன்** M.A
(இயக்குனர் : திருவாடுதுறை ஆதின சைவசித்தாந்த / திருமுறை நேர்முகப் பயிற்சி நிலையம் - இணுவில் கிளை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விக்ன தீபம்

அமரர் இரத்தினம் விக்கினேஸ்வரன்

(முன்னாள் துணைவேந்தர் யாழ். பல்கலைக்கழகம்)

துணைவேந்தரென்ற பேறு கொண்ட தலைவர்
இணையிலா கணித பேராசான் - இணையிலி
இரத்தினம் பஞ்சவர்ணம் தவமிருந்த தேவராம்
கரத்திலே யாழ் வரமே

இவரது பதவியினால் யாழ்ப்பாணம் வரமாகியது
தங்கமான மனிதன் தகைமையான பேரறிஞர்
எங்களுக்கு ஓர் அரசனாம் - பொங்கிடும்
தமிழ் வாழ தலைமை பூண்டு தரணிக்கு வரமீந்த
அமிழ்தான விக்னேஸ்வரா

பிரபல்யம் மிக்கதோர் பிரமுகர் இவரென
பரவிய பூமியிது நிஜமாய் - அரசரென
ஆண்டார் யாழ் பல்கலைக்கழகமதை
பூண்டவர் விரதமோடு

தவமோடு இவரது பக்திக்கு நிகரில்லை
சிவமயமே இவருக்கு வாலாயம் - உவமாக
ஒப்பாரும் மிக்காரும் இவரை வெல்வாரிலர்
அப்பா அவசரம் ஏனோ?

கோபுரமாய் வாழ்ந்து கோமகனாய் திகழ்ந்து
காவலனாய் சமயங் காத்தார் - பூவரசர்
மேவிய இணுவையில் காவியமானார்
ஓவிய வானரசனார்

ஓம் சாந்தி ஓம் சாந்தி ஓம் சாந்தி

**கே.எஸ்.சிவஞானராஜா**
**கொக்குவில்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## An Eminent Personality R.Vigneswaran Prof and VC of the Jaffna University is no more

The sudden demise of the Son of the Soil Inuvil Prof R.Vigneswaran and the former VC caused us a terrible shock and grief. We could not believe our ears. The whole of Inuvil Village and Kondavil were plunged into a sea of sorrow.

Both young and old, big and small, rich and poor mourned the death of this great personality. He was a brilliant star in the Education field. He belonged to a galaxy of Eminent Educationists. He was much loved, respected and admired by all for his affable ways and sterling qualities. He was such a simple and kind person anyone could easily approach him. He was a soft spoken and an out spoken gentleman, He always spoke kind and polite words. He never hurt anyone. He had not given us any occasion to see his angry face. He did teaching as a noble job and as service not as a job. His hard work, dedication and commitments toward the development of University Education are commendable. He had produced many useful worthy and distinguished citizens. All his old students are doing well in all walks of life at home and abroad. His Students were his pride and made him proud. His old students today the beacon lights in society.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

He was a loving father, loving husband and a loving son-in-law. He never facled in his duties as the Head of the Family.

He was an active Social and a religious worker. He was a Murugan devotee. He was the part and parcel of the Inuvil Kandasamy Kovil his family temple. He took keen interest in the fast development of Inuvil Kandasamy kovil.

His Selfless and dedicated service will be remembered with love and gratitude by the community.

"Man is mortal but his good and kind deeds are immortal"

May his soul rest in peace

***By K.Rasanayagam***
Retired English Teacher
Kondavil West, Kondavil



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேராசிரியர் இரத்தினம் விக்கினேஸ்வரன் குறித்த இணுவில் இந்து அன்னையின் நினைவுகள்

பேராசிரியர் இ.விக்கினேஸ்வரன் அவர்கள் 2022.02.17 அன்று தமது பூவுலக வாழ்வை நிறைவாக்கி சொர்க்கத்துக்கு ஏகினார். பேராசிரியர் அவர்கள் தமது ஆரம்பக்கல்வியை இணுவில் இந்துக் கல்லூரியில் கற்றுள்ளார் என்ற அடையாளம் பாடசாலைக்கும் அவருக்கும் இருந்த தொடர்பின் அடிநாதம். இணுவையூர் பெற்றெடுத்த சீராளர். ஒரு மனிதன் வாழும் போதும் மரிக்கும் போதும் இப்படி ஒரு மனிதனை எமக்குத் தந்தானே என்று பெருமிதம் கொள்ள வேண்டும். அத்தனை சிறப்புக்களும் பேராசிரியருக்குக் கிடைத்திருக்கிறது. இணுவில் இந்துவுடன் அவர் கொண்டிருந்த தொடர்புகள் ஆதர்சமானது.

கல்லூரிக்காக எதைக் கேட்டாலும் மறுக்காது உவந்தளித்த பெருமகன் அவர். பழைய மாணவர் சங்கப் போஷகராக இருந்து வழிநடத்திய பெருந்தகை. இறப்புக்கு யாரும் விதிவிலக்கில்லை. இறப்புக்குப் பின்னரும் அவரது சிறப்புக்களே எம் எல்லோரது மனதிலும் அழியா நினைவுகளை உருவாக்கும். விழாக்களுக்குக் குறைவில்லாத இந்துக்கல்லூரி தங்கள் துணைவேந்தர் பதவிக்குரிய விழாவினை சிறப்பாகக் கொண்டாடியது. இருப்பினும் அதற்கடுத்த விழாக்களைக் கொண்டாட முடியாமல் போனமை துரதிஷ்டமே. எவ்வாறாயினும் காலம்தான். காலன் யாருக்கும் புரிவதுமில்லை. புலப்படுவதுமில்லை. அதுகிட்ட வரும் போது யாரும் தப்ப முடிவதுமில்லை. நிறைவாக "வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்" என்ற குறள் வழிக்கேற்ப அமரர் பேராசிரியரின் நினைவுகள் இணுவையூரில் என்றும் ஒலித்துக் கொண்டிருக்கும்.

**திரு.வே.உதயமோகன் (அதிபர்)**
**யா/இணுவில் இந்துக் கல்லூரி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீங்காத நினைவில்...

நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்துஇவ் வுலகு.

நேற்று இருந்தவர் இன்று இல்லை என்ற பெருமையுடைய இந்த உலகில்தான் நாமும் வாழ்ந்தாலும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் புகழ் பூத்த பழைய மாணவரும் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் முன்னாள் துணைவேந்தருமான எங்களது பேராசிரியர் இரத்தினம் விக்னேஸ்வரன் அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு மிகவும் துயருற்றேன்.

பேராசிரியர் இரத்தினம் விக்னேஸ்வரன் அவர்கள் எமது கல்லூரிக்கு 1971 இல் காலடி எடுத்து வைத்தார். தொடர்ந்து 1977 ம் ஆண்டு க.பொ.த உயர்தரத்தில் சித்தியடைந்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கு தெரிவானார். 1978ம் ஆண்டு உயர்தரத்தில் 3A, B சித்தி பெற்று பொறியில் பீடத்திற்குத் தெரிவான போதும் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் விஞ்ஞான பீடத்தில் தனது உயர் கல்வியைத் தொடரத் தீர்மானித்தார். தொடர்ந்து 1991 இல் இங்கிலாந்தின் சசெக்ஸ் (University of Sussex) பல்கலைக்கழகத்தில் கணிதத் துறையில் தனது கலாநிதிப் பட்டத்தைப் பூர்த்தி செய்தார். அவரது சேவைக்காக உலகளாவிய பல விருதுகளும், பல பதவிகளும் அவரைத் தேடிவந்தன.

யாழ் இந்துக் கல்லூரியில் மாணவனாகக் கல்வி கற்ற காலத்தில் சிறந்த ஒரு மாணவனாக, பண்பாளராக, பல துறைகளிலும் தனது ஆற்றல்களை வெளிக்காட்டியவராக, நல்லொழுக்க சீலராக விளங்கியிருந்தார். கல்லூரி நாட்களிலும் பின்னரும் தான் கல்வி கற்ற பாடசாலைக்கு பெருமைகளைத்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேடித்தந்ததோடு மட்டுமல்லாமல் கல்லூரியின் வளர்ச்சியில் மிகுந்த அக்கறை கொண்டவராகச் செயற்பட்டிருந்தார். மேலும் பேராசிரியர் அவர்களை 2018ம் ஆண்டு பரிசித்தினத்துக்கு முதன்மை விருந்தினராக அழைத்து யாழ் இந்து அன்னை பெருமைப்படுத்தியமை மிகவும் சிறப்பு வாய்ந்த விடயமாகும். அந்த வகையில் பெருந்தகையின் இழப்பால் யாழ் இந்துக் கல்லூரியும் பெரும் துயரமடைகிறது.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்திற்கு மட்டுமன்றி யாழ்ப்பாணக் கல்விச் சமூகத்திற்கு குறிப்பாக இளம் சந்ததியினருக்கு புதிய கல்விப் பாதையை உருவாக்கித்தந்தார். மாணவர்களின் புதிய உயர்கல்வி வாய்ப்புக்கள், ஆய்வுகள் போன்றவற்றில் மிகுந்த கவனம் எடுத்துச் செயற்பட்டார்.

கல்விப்புலத்திற்கு அப்பால் மிகுந்த சமூக நோக்குடன் சமகாலத் தேவைக்கேற்றவாறு ஒரு ஒடுக்கப்பட்ட இனம் சார் பிரச்சினைகளை எதிகொள்வதற்கான தனது தெளிவான பார்வையில் செயற்பட்டிருந்தார். பதவிகளுக்காகவும் தனது தனிப்பட்ட நன்மைகளுக்காகவும் ஒரு போதும் அவர் தனது கண்ணியத்தை விட்டுக் கொடுக்கவில்லை. தனது தனிப்பட்ட நலனை விட தேசநலன் சார்ந்து செயல் வீரனாக கடமையாற்றியமை அவரது வாழ்வின் வெற்றியாகும். இத்தகைய இவரது உயர் ஆளுமை, கொள்கைசார் செயற்றிறன், மனித மாண்பு, விலை போகாத தன்மை, துணிவு, நேர்மை போன்றன அவரது வாழ்வின் பின்னும் எமக்கும் எமது அடுத்த சந்ததியினருக்கும் விரிவுரைகளை வழங்கிக் கொண்டிருக்கும் தொடர் நிகழ்வாக அமையும் என நான் கருதுகின்றேன். இத்தகைய மேன்மகனின் வாழ்வு சங்ககாலத் தமிழர் வாழ்வை ஒத்தது. அனைவரும் இன்புற்று வாழ வேண்டும் என்ற நோக்கமே அவ்வாழ்வின் வழி. அவ்வாறனவர்களுக்கு வெறுப்பேது? அச்சம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏது? நாமார்க்கும் குடியல்லோம் என்ற இறுமாப்பு அவர்கட்கு சாதாரணமானதே. உண்மை நிலையை நிலைநாட்டுவதற்காக எதையும் தியாகம் செய்யும் உயர் மனஎண்ணம், உயிரைக் கொடுத்தேனும் பொய்மையைக் கடிந்து கொள்ளும் பாங்கு இவ்வாறு தன்னினத்தவர்க்காக உழைத்தலில் சிறிதேனும் அயர்வில்லாது வாழ்ந்தவர் எங்கள் பேராசிரியர். இத்தகைய சீரிய உள்ளம் படைத்த இலட்சிய வாழ்க்கை வாழும் சிலரால் தான் உலகம் இன்றும் நிலைபெற்றிருக்கிறது.

உண்டா லம்ம, இவ்வுலகம்! இந்திரர்
அமிழ்தம் இயைவ தாயினும், இனிதெனத்
தமியர் உண்டலு மிலரே; முனிவிலர்;
துஞ்சலு மிலர்பிறர் அஞ்சுவ தஞ்சி
புகழெனின் உயிருக் கொடுக்குவர் பழி எனின்
உலகுடன் பெறினும் கொள்ளலர், அயர்விலர்
அன்ன மாட்சி அனைய ராகித்
தமக்கென முயலா நோன்றாள்
பிறர்க்கென முயலுநர் உண்மையானே!

என்ற புறநானூற்று வரிகளிற்கு அர்த்தம் தந்து வாழ்ந்த உத்தமருக்கு யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி சார்பாக அஞ்சலியைச் செலுத்தி அவர் தம் வழியில் தமிழர் தம் மாண்பு சிறக்க அனைவரும் பாடுபட வேண்டுவது அவருக்கான அர்ப்பணமாக அமையும் என கருதுகிறேன்.

**இரத்தினம் செந்தில்மாறன்,**
**அதிபர்,**
**யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பண்புக்கு இலக்கணமான கல்விமான்

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்"

புகழ் பூத்த இணுவில் மண்ணின் மைந்தனாக அவதரித்து விரிவுரையாளராக, கணிதப் பேராசிரியராக, துணைவேந்தராக பல்வேறு தளங்களில் தனது செயலாற்றத்தினை வெளிப்படுத்தி இறைவடி சேர்ந்த அமரர் அவர்களுடன் நெருஞ்கிப் பழகும் வாய்ப்பு மிக அண்மைக் காலத்திலேயே எனக்குக் கிடைக்கப் பெற்றது.

பழகுவதற்கு இனிய பண்பாளராக விடயங்களை நுணுகி ஆராயும் திறனுடையவராக, அமைதியான சுபாவமுடையவராக எம்முடன் பழகிய அமரர் அவர்கள் எமது பாடசாலையின் வளர்ச்சியில் கருத்துடையவராகவும் விளங்கியதோடு அவர்தம் குடும்பத்தினரால் நிர்மாணிக்கப்பட்ட செல்லப்பா நடராசா திறந்தவெளி அரங்கினை பாடசாலைக்காகப் புனரமைத்து வழங்குவதில் பெரும் பங்காற்றினார்.

"பிறக்கின்ற ஒவ்வோர் மனிதனும் என்றோ ஒருநாள் இறப்பது உறுதி என்கின்ற நியதியின் பிரகாரம் இறைவனடி சேர்ந்த அமரர் அவர்கள் இருப்பு வாதச் சிந்தனையாளர்களது கருத்துக்கு இணங்க தனது இறப்பின் பின்பும் எல்லோர் மனத்திலும் நிலைத்து நிற்கும் ஒருவராக விளங்குகின்றமையே அவரின் பெருமையினை உணர்த்துவதற்குப் போதுமானதாகும்.

இத்தகைய பெருமை மிகு மனிதரின் ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

ஓம் சாந்தி

**நடேசு தயாளன்**
அதிபர்
யா/கோண்டாவில் இந்துக் கல்லூரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிதாய் பூத்த துணைவேந்தர்
# இணுவை திரு. இரத்தினம் விக்கினேஸ்வரன்


கல்வியில் மீந்தும், கைத்தொழில் தோய்ந்தும்
வில்வமாய் விரைந்துயர் விக்கினேஸ்வரன்
வில்வமாய் விரைந்துயர் விக்கினேஸ்வரன்
இணுவில் இந்துவில் இடப்பட்ட தளத்தில்,
மணியாய் யாழிந்து வனைந்திடப் பெற்றான்!
கணித, விஞ்ஞான கவின் பட்டம் படித்து,
கணித விஞ்ஞான பேராசிரியனாய்
பணி செய்தே இன்று துணை வேந்தரானான்!
சரியென்று கண்டதை தயங்காதுரைப்போன்!
ஒருசொல் வீண்சொல் உரைக்கா உரவோன்!
செய்நன்றி மறவா மெய் நெஞ்சாளன்!
பின் சென்றெவர்க்கும் பிசங்கா மானம்,
தன்குடி மானம், தன்னினமானம்,
தன்னம்பிக்கை, மன்னிக்கும் தாய்மை
போன்ற குணங்களார் சான்றோன் விக்கி!
திருவிழா நாட்கள் நாற்பதாண்டாய்
இரவில் இணுவில் குகன்தளி கழுவி, நம்
இளம் தொண்டர் சபை தொண்டிறங்கிட வைத்தோன்!
தனம் அந்தச் சிவப்பணி தந்த சீர் பதவிகள்
இறைபணி சார்கந்தன் அறங்காவற் பொருளர்,
யாழ்ப்பாண பல்லைக்கழகத் துணை வேந்தர்!

செம்மண் இணுவைச் செல்வ மைந்தன்
நம்முயர் விக்னேஸ் நண்ணிய விருது
நம்மெல்லோர்க்கும் விம்மிதம் தருவது

**பண்டிதர் ச.வே.பஞ்சாட்சரம்**
இணுவில் கந்தன் இளம் தொண்டர் சபை ,
இணுவில் கலை இலக்கிய கழகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இணுவில் திருவூர் ஒன்றியம் - கனடா
## INUVIL THIRUVOOR ONTRIAM - CANADA
CULTURAL SOCIAL NON-PROFIT ORGANIZATION. REG.NO: 1506621


**President**
S.Shanthy
647-200-2177
shanthy77@hotmail.com

**Secretary**
M.Kirupaharan
416 430 0422
m.kirupaharan@hotmail.com

**Treasurer**
P. Kajajeyan
416-732-5898
pkajan@yahoo.com

**Committee Members**

**Vice President**
S. Chandrakumar

**Vice Secrctary**
C. Jayashajini

**Vice Treasurer**
P. Kaneshamoorthy

S. Ravimohan
K. Kandasamy
M. Sivasoorian
S. Jeevananthan
N. Sivathasan
S. Jegatheeswaran
S. Subenthiran
R. Kugarajan
A. Kathirkamanathan


## இணுவை தந்த இணையிலாப் பேராசிரியன் இ.விக்கினேஸ்வரன்

அன்னை மண் காலத்திற்குக் காலம் தவறாது பெரியார்கள், கல்விமான்கள், கலைஞர்கள் மற்றும் ஆன்மீகவாதிகள் என இணுவிலுக்குப் பெருமையும் புகழும் தேடித்தரவல்ல சான்றோர்களைப் பெற்றெடுத்திருக்கிறது. அவர்களுள் பேராசிரியர் இ.விக்கினேஸ்வரன், தான் கற்ற கல்வியால் மேன்மை பெற்று, உயர் நிலையடைந்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பதவி வகித்ததோடு ஏனைய கல்விமான்களுக்கும் பெருமை சேர்த்தார் என்றால் அது மிகையாகாது. தன்னடக்கத்தோடு கர்வம் ஏதுமின்றி எடுத்த காரியத்தைக் கண்ணும் கருத்துமாக அமைதியுடன் செய்து சாதிக்கும் பெரும் ஆளுமை இவரது தனியழகு. தனது மனச்சாட்சிக்குச் சரி எனப் பட்டால் துணிவுடன் அலுவல்களை முன்னெடுக்கும் இவரது நேர்மை அனைவரும் அறிந்ததே. இணுவில் கந்தனை அனுதினமும் வழிபட்டதோடு கோயில் தொண்டுப் பணிகளிலும் அயராது உழைத்த பெருமகன் இவர். இணுவில் மண் தான் பெற்ற தவப்புதல்வனையும், அன்னாரது குடும்பம் தமது குடும்பத்தலைவரையும், கல்விச் சமூகம் தமது நேர்மையான பேராசானையும் இழந்து தவிக்கிறது. மொத்தத்தில் தனது மண்ணையும் மக்களையும் நேசித்த இவரது இழப்பானது ஈடுசெய்யமுடியாதவொன்று.

| | | |
|---|---|---|
| சாந்தி சிவானந்தா | மு.கிருபாகரன் | ப.கஜேஜயன் |
| (தலைவர்) | (செயலாளர்) | (பொருளாளர்) |

3642 Lawrence Ave. East, Scarborough, ON M1G – 1P6



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் சாந்தி

# உண்மையாக உழைத்த உத்தமனை இழந்து விட்டாள் தமிழ் அன்னை

முன்னைநாள் உபவேந்தரும் கணித பேராசிரியர் இரத்தினம் விக்னேஸ்வரனின் மறைவு அன்னாரின் மனைவி, மக்கள், சகோதரர்கள், உற்றார், உறவினர்கள், குடும்பத்துக்கு மட்டுமல்ல, அவரைப் பெற்ற இணுவில் மண்ணுக்கும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சக அறிவு சமூகத்துக்கும், மாணவ சமுதாயத் துக்கும் இலங்கை கல்வித்துறைக்கும் குறிப்பாகத் தமிழ்ச் சமுதாயத்துக்கும் மிகப்பெரிய ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும். பேராசிரியர் விக்னேஸ்வரன் இணுவில் ஆறுமுகநாவலரினால் தாபிக்கப்பட்ட இணுவில் சைவப்பிரகாச வைத்தியசாலையில் ஆரம்பக் கல்வியை எனக்கு கீழ் வகுப்பில் எனது சகோதரனின் வகுப்பில் கல்விகற்றார், மேலும் இவர் எனது அம்மாவின் மைத்துனி முறையானவர். எங்களின் குடும்பமும் அன்னாரின் குடும்பமும் 1963ம் ஆண்டு இணுவில் இராசரத்தினம் அண்ணையின் காரில் கதிர்காம யாத்திரைக்கு போய் வந்தது எங்கள் மனதில் இன்றும் பசுமையாக இருக்கிறது. இதனைத் தொடர்ந்து யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியிலும் எனக்கு கீழ் வகுப்பிலும் கல்வி கற்று யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் கணிதத் துறையில் இளமானிப் பட்டம் பெற்று, விரிவுரையாளராகப் பண்ணியாற்றினார்.

இதன் பின்பு கிழக்குப் பல்கலைக்கழகத்தில் கணித்துறையின் தலைவராகப் பணியாற்றினார். இதன்பின்பு தனது கணிதத்துறையில் பட்டப் பின்படிப்பு முதுகலைமாணி, கலாநிதி பட்டங்களையும் ஐக்கிய இராச்சியத்திலும் பெற்றார். அன்னார்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐக்கிய இராச்சியத்தில் படித்துக்கொண்டிருந்த வேளையில் இலண்டனில் எனக்கு சந்திக்கும் வாய்ப்பு கிடைத்தது. இதன்பின்பு மறைந்த பேராசிரியர் விக்னேஸ்வரன் மீண்டும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்கு கணித பேராசிரியராக பதவி பெற்று, பின்பு எத்தனையோ சோதனைகளையும், எதிர் நீச்சல்களையும் வென்று யாழ்ப்பாண பல்கலைக்கழக உப வேந்தராகப் உயர்த்த நிலையை பெற்றார். இதனை எம் இணுவில் மட்டுமல்ல மேற்குறிப்பிட்ட எல்லோரும் கொண்டாடினோம். அவர் உண்மையாகவும், நேர்மையாகவும், தன் சார்ந்த சமூகத்துக்காகவும், மாணவர் களினதும், மக்களினதும் உணர்வுகளுக்கு மதிப்பளித்து செயற்பட்ட காரணத்தினால், துரதிட்டவசமாக கல்விச் சமூகத்தைச் சாராத அறிவிலிகளாலின் முட்டாள் தனமான அரசியல் பயங்கரவாத பழிவாங்களினால் அவரின் பதவிக்கு வேட்டு வைக்கப்பட்டு அவரின் பதவி பறிக்கப்பட்டது. இது ஒன்று போதும் தமிழ்க் கல்விச் சமூகம் எத்தனை பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டுமென்பதை புடம்போட்டு காட்டியுள்ளது. அன்னார் மறைந்தாலும் தமிழ்க் கல்விச் சமூகத்திலும் சமுதாயத்திலும், சரித்திரத்திலும் அவர் என்றென்றும் நிலைபெற்று வாழ்வார்.

**பேராசிரியர் விக்னேஸ்வரன் பண்புகள்:** மிகவும் எளிதானவர், பொறுப்புள்ளவர், பொறுமையுள்ளவர், சகிப்புத்தன்மை கொண்டவர், மிகவும் தெளிவானதும் தீர்க்கமான முடிவுகளை, வெட்டொன்று துண்டு இரண்டாக எடுக்கக்கூடியவர், மேலும் இவர் ஓர் அதிகப் பிரசங்கி அல்ல, வீணாக அலட்டிக்கொள்ளமாட்டார், இவரின் புன்முறுவலலில் பல அர்த்தங்கள் பொதிந்திருக்கும். அன்னாரின் இனிய நினைவுகள் இனிவரும் சமுதாயத்துக்கும் ஓர் கலங்கரை விளக்காக காட்டிநிற்கும் என்பதில் ஐயமில்லை.

ஓம் சாந்தி

**செல்லத்துரை ஆனந்தவரதன்**

Phd, FRIPH, MEd. (PHC)(UK)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேராசிரியர் இரத்தினம் விக்கினேஸ்வரனின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை

கல்வித்துறையின் பாதையிலே
துணைவேந்தர் என்ற உயர் பதவி கண்டீர்!
கணிதத் துறையில் கிழக்கிலும் வடக்கிலும்
தன்னிகரற்ற பேராசிரியராக கால் பதித்தீர்!
தான்கற்ற கணிதத்தை எமக்கெல்லாம் போதித்து
எம்மையும் கல்வியின் சுவையறிய வைத்தீர்!
காண்கையில் அன்போடு அருகில் வந்து
பண்போடு பணிவு கொள்வீர்!
வாழ்க்கைப் பாதையில் எதுவும்
நிலை இல்லை என்றீர்!
இம் மண்ணில் உம் நினைவுகளை
நன்னீராய் விட்டுச் சென்றீர்!
இனிவரும் சந்ததியும் என்றும்
உம்மை மறவாமல் வாழ்ந்திருப்பர்!
உங்கள் ஆத்ம சாந்திக்காய் பிரார்த்திக்கின்றோம்!
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**ஆஸ்திரேலியாவிலிருந்து**
**பொன்னுத்துரை ஜங்கரன்**
**(கணிதத்துறை பொறுப்பாளர்)**
**சின்னராஜா செந்தில்ராஜன் (சட்டத்தரணி)**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்கா நினைவுகள்

பேராசிரியர் இரட்ணம் விக்னேஸ்வரன் அவர்கள் மறைந்து ஒரு திங்கள் ஆகிறது என்பதை நம்பவே முடியவில்லை. எனக்கு ஒரு வயது இளையவரான விக்னேஸ் எனது ஒன்று விட்ட சகோதரர். இருவரின் தாய் வழிப் பேரர்களும் சகோதரர்கள்.. அவர் வீட்டுக்கு சிறுவயதில் அடிக்கடி சென்று வந்திருக்கிறேன். இந்தத் தொடர்பு 1995 இடப்பெயர்வு வரை நீடித்தது. அவரின் அம்மாவை பஞ்சவர்ணக்கா என்று தான் நான் அழைப்பேன். எனக்குச் சிற்றன்னை உறவு எனினும் அப்படி அழைத்துப் பழகிவிட்டது. சிறுவயதில் நாம் ஒரே பள்ளியில் படித்திருந்தோம். கோவில் வீதிகளில் விளையாடுவதும், விளையாடும்போது சண்டை பிடிப்பதும் வழக்கமாகியிருந்தது. விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்த குழந்தைகள் சிறு வயதில் பெற்றோருடன் தோட்டங்களுக்குச் செல்வதும் அங்கு தம்மால் ஆன காரியங்களில் கைகொடுப்பது, வேலையாட்களுக்கு உணவு, தேநீர் எடுத்துச்செல்வதும் வாடிக்கையாக அப்போதிருந்தது. விக்கினேஸ் தனது பங்கை சரிவர இதய சுத்தியோடு செய்வார். எனினும், படிப்பில் அவர் முதலிடத்திலேயே இருந்து வந்தார்.

1967ஆம் ஆண்டு நான் யாழ். இந்துக் கல்லூரியில் ஆறாம் வகுப்பு அனுமதி பெற்றுச் சென்றுவிட்டேன். நான் பத்தாம் வகுப்பு ஆரம்பிக்கையில் 1971 இல் யாழ். இந்துவில் எட்டாம் வகுப்பு அனுமதி பெற்று விக்கினேஸ் அங்கு சேர்ந்தார். அதற்கென யாழ். இந்துவில் விண்ணப்பப்படிவம் பெற்று அவர் வீட்டுக்குச் சென்றமை இன்னமும் பசுமையாக நினைவில் உண்டு. அவர் பள்ளியில் சேர்ந்த அன்று, அவரின் தாய்மாமனும் நானும் அவரை அழைத்துக்கொண்டு இந்துக் கல்லூரிக்குச் சென்றதும், அங்கு அதிபராக அப்போதிருந்த அமரர் எம். கார்த்திகேசனைச் சந்தித்து அனுமதியை இறுதி செய்ததும் மறக்கவொண்ணா தருணங்கள். எனது நினைவு சரியெனின் அவர் 1979இல் நடைபெற்ற கல்விப் பொதுத் தராதரப்பத்திர உயர்தரப் சித்திபெற்றுப் பல்கைக்கழகம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்றுவிட்டார். அவர் பல்கலைக்கழகத்தில் படிக்கும் காலையில் புகழ்பெற்ற கணித ஆசிரியராக தனியார் கல்வி நிலையங்களில் கற்பித்துக் கொண்டிருந்தார். 1980இல் யாழ்ப்பாணம் நல்லூரில் ஒரு கம்பன் கழகத்தை ஆரம்பித்து நடாத்தும் நண்பர்கள் குழாமில் நானிருந்தேன். 1982இல் தமிழ் நாட்டின் திருச்சியில் இருந்து பேராசிரியர் இரா. இராதாகிருஸ்ணன் நல்லூரில் நடைபெற்ற கம்பன் விழாவுக்கென வந்திருந்தார். அவர் பருத்தித்துறை, திருகோணமலை, கொழும்பு ஆகிய இடங்களில் நடைபெற்ற கம்பன் விழாக்களில் பங்குபற்றியிருந்தார். அந்த வேளையில் இணுவிலிலும் ஒரு கம்பன் விழாவை ஒழுங்கு செய்யவும் அதற்கென இணுவில் கம்பன் கழகம் என்ற அமைப்பை ஏற்படுத்தவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

எமது உறவினரும் நண்பருமான அமரர் கணபதிப்பிள்ளை பவன் அவர்களின் துணையுடன் விக்கினேஸ்வரன் மற்றும் சில நண்பர்களை இணைத்து இணுவில் கம்பன் கழகத்தை அங்குரார்ப்பணம் செய்தோம். விக்னேஸ்வரன் அவர்களே அதன் தலைவராகப் பொறுபேற்றார். அங்குரார்ப்பண நிகழ்வுடன் பேராசிரியர் இராதாகிருஸ்ணன் கலந்துகொண்ட இரு நாள் கம்பன் விழா நடைபெற்றது. நிதி சேகரிப்பிலும், நிகழ்ச்சி அமைப்பிலும் விக்கினேஸ்வரன் ஆர்வத்துடன் கலந்துகொண்டார். அதற்கு முன்னராகவே இணுவில் கந்தசுவாமி கோவில் சூழலில் வாழும் இளைஞர்களை ஒன்று திரட்டி இணுவில் கந்தசுவாமி கோவில் இளந்தொண்டர் சபையினை உருவாக்குவதில் ஆசிரியர் கவிஞர் ச.வே. பஞ்சாட்சரம் ஈடுபட்டிருந்தார். இளந்தொண்டர் சபையில் விக்கினேஸ்வரன் முக்கிய உறுப்பினராகவும், சுறுசுறுப்புடன் பணியாற்றுபவராகவும் விளங்கினார். எண்பதுகளின் நடுப்பகுதியில் யாழ்ப்பாணத்தில் இயல்பு நிலை குலைந்திருந்த காலப்பகுதியில் இணுவில் கந்தசுவாமி கோவில் தர்மகர்த்தா சபையின் தலைவராக எனது தாய்மாமன் அம்பலவாணர் கணபதிப்பிள்ளை நியமிக்கப்பட்டிருந்தார். அவ்வப்போது கோவில் நிர்வாகத்திற்கும் இளந்தொண்டர் சபைக்கும் இடையே உறவு சீரற்று இருந்தது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்படி ஒரு சந்தர்ப்பத்தில் இளந்தொண்டர் சபையினர் கோவில் பிரதான வாயில் கதவின் திறப்பு உட்பட ஏனைய திறப்புகளைக் கைப்பற்றியதோடு நிர்வாகத்தையும் தமதாக்கினர். அப்போது எனது பெரியமாமா கணபதிப்பிள்ளையவர்கள் அதிர்ச்சியடைந்து போனார். ஏனெனின் விக்னேஸ்வரனும் இளந்தொண்டர் சபையில் முக்கியமானவராக இருந்தமைதான். இந்த சம்பவத்தால் விக்கினேஸ்வரனுக்கு சில சங்கடங்கள் ஏற்பட்டதுமுண்டு. எனினும் தனது தெரிவில் அவர் உறுதியாகவும் தெளிவாகவும் இருந்தமையை பின்னர் நான் அறிந்துகொண்டேன்.

அவர் கிழக்கிலங்கைப் பல்கலைக்கழகத்தில் கணித விரிவுரையாளர் பதவி பெற்று மட்டக்களப்பு சென்றதோடு எமது தொடர்புகள் அற்றுப் போயின. அவரின் திருமணமும் எனது திருமணமும் அடுத்தடுத்து ஒரே காலப்பகுதியில் நடைபெற்றது. அவரின் மனைவி பாவானியின் தந்தையார் நடராஜா (பார்லிமெண்ட் நடராஜா) அவர்களை இலக்கிய விழாக்கள் மூலமாக நான் முன்னரே அறிந்திருதேன். அதன்பின்னர் விக்கினேஸ்வரன் இங்கிலாந்தில் தனது கலாநிதிப் பட்ட ஆய்வை முடித்துவிட்டு ஊர் திரும்பிய வேளையில் அவரை அவரின் இல்லத்தில் சந்தித்துப் பேசிய நினைவுண்டு. அவரின் மூத்த சகோதரி மேனகா அக்காவின் மறைவு என்னை உலுக்கியது என்றே சொல்லவேண்டும். நான் புலம்பெயர்ந்த பின்னால் அவரின் தயாரின் மறைவுச் செய்தி கிடைத்தபோதும் நான் தளர்ந்துவிட்டேன். ஏனெனில் இருவருடனும் எனக்கு நெருக்கமான தொடர்பிருந்தது. அதுபோலவே அவரின் சகோதரன் சண்முகேஸ்வரனும், சகோதரிகள், ரேணுகா, மல்லிகா ஆகியோரும் எனக்கு நெருக்கமானவர்களாக இருந்தனர். 2018இல் ஊருக்குச் சென்றபோது விக்கினேஸ்வரனை அவரின் இல்லத்தில் பார்க்கச் சென்றிருந்தேன். அப்போது அவர் யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீடாதிபதியாக கடமையாற்றிக்கொண்டிருந்தார். நான் சென்றபோது அவர் பணி நிமித்தம் கொழும்பு சென்றமையால் அவரின் மாமியாருடன் மட்டும் பேசிவிட்டு வந்தேன். 2019இல் இணுவில் கந்தசுவாமி கோவில் தீர்த்தத் திருவிழாவுக்குச் சென்ற




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


போதும் அவருடன் தொடர்பிலிருந்தேன். கோவில் திருவிழா தொடர்பாக இடையிடையே விக்னேஸ்வரன் அவர்களுடன் நான் முரண்பட்டுக்கொண்டிருந்தேன்.

உபவேந்தராக அவர் நியமிக்கப்பட்டார் என்ற செய்தி இன்ப அதிர்ச்சியாக இருந்தது. இலங்கையில் மொத்தம் உள்ள பதினைந்து துணைவேந்தர்களில் ஒருவர் என்பதும், யாழ். பல்கலைக்கழகத்தில் படித்துப் பட்டம்பெற்று, அங்கேயே துணைவேந்தராகப் பணிபுரியும் வாய்ப்புப் பெற்ற முதலாமவர் என்ற பெருமையும் விக்னேஸ்வரனைச் சாரும். அவரின் மறைவு பெருந்துயர் தந்தது. தனது இறுதிக்காலத்திலும் உறவினர் நண்பர்களில் வீட்டு விசேட வைபவங்களில் தவறாது கலந்துகொள்ளும் இயல்புடைய விக்னேஸ்வரனின் நினைவு சமூகத்தில் என்றும் வாழும். பல்கலைக்கழகத்தில் அவரிடம் பயின்ற மாணவர்களும் அவரிடம் பழகிய மாண்புடையோரும் அமரர் விக்னேஸ்வரன் அவர்களின் நினைவைப் போற்றுவர். விக்னேஸ்வரனின் பெருமையை அவரின் பிள்ளைகள் மீள இவ்வுலகுக்கு நிலைநிறுத்துவர் என்பது திண்ணம்.

**தி. திருநந்தகுமார்**
**சிட்னி, அவுஸ்திரேலியா**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

காற்றோடு கலந்தனையோ
கண்விழிக்கும் நேரத்திலே தென்றலாய்
தவழ்ந்த காற்று புயலாய் வந்து சொன்ன செய்தி

இணுவை மண்ணின் இணையில்லா பெருந்தகை பேராசிரியர்
விக்கினேஸ்வரன் மண்ணுலக வாழ்வை விட்டு விண்ணுலகம்
சென்ற செவ்வி கலங்கி நின்றோம்

சரித்திரம் படைத்த சாதனையாளன் முன்னாள்
யாழ் பல்கலைக்கழக துணை வேந்தர்

விஞ்ஞான பீடாதிபதியாய்,
பெயர் சொல்லும் கல்விக் களஞ்சியமாய்
இணுவைக் கந்தன் பெரும் தொண்டன்
தாயக விடுதலை நோக்கிய
பயணத்தில் பெரும் தொண்டாற்றிய பெரும் பண்பாளன்

நீளதுயில் கொண்டது தான் துயரம், வரலாறு படைத்து
வரலாற்றில் வாழும் பெருமகன்

ஆத்ம சாந்திக்காய் இறையருள் வேண்டி நிற்கும்

**ஜேர்மனி இணுவையூர் ஒன்றியத்தார்.**

**நண்பன் கனகசபை பத்மநாதன் ஜேர்மனி**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# *Tribute to a Great Mathematician and Former Colleague, Late Prof Ratnam Vigneswaran*

It is with deep sorrow and heavy hearts that we remember the passing of a truly remarkable individual who made a significant impact in the field of mathematics and in the lives of those he touched. Prof Ratnam Vigneswaran was a distinguished academic who completed his degree at the University of Jaffna in 1982. He joined the Eastern University of Sri Lanka (EUSL) in 1984 as an assistant lecturer and served as Head of Department and President of the Teachers Union for 20 years, particularly during the troubled times of the Eastern province. His devotion to excellence in mathematics and to the betterment of his nation was immeasurable.

In 1991, he earned his PhD in Mathematics at the University of Sussex, a testament to his dedication and commitment to his field. He continued to serve at the EUSL until 2004, and then moved to the University of Jaffna (UOJ) where he served as Head of Department, Dean, and finally as Vice Chancellor of UOJ. Unfortunately, his service was terminated before the completion of his full term due to his love for the Tamil nation. It is regrettable that the community he loved did not fight for the injustice caused to him.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Prof Ratnam Vigneswaran was an outstanding teacher and mentor who was always ready to offer his guidance and support to his students and colleagues. His exceptional work in the field of mathematics and his unwavering commitment to the betterment of his community will be remembered for generations to come. We have lost a true academic and leader, but his legacy will live on. His unwavering commitment to excellence, his love for his community, and his dedication to the betterment of the nation will continue to inspire and guide us.

As we reflect on the life and accomplishments of Prof Ratnam Vigneswaran, we extend our heartfelt condolences to his loving wife Bawani, two kids, friends, colleagues, and all those whose lives he touched. He will be dearly missed but never forgotten.

Rest in peace, dear friend, and former colleague.

Dr Kumaravelu Ganesan
Faculty of Engineering and School of Physics
University of Melbourne
18/02/2023



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "அறிவாலயம்" திறப்பு விழா மலரில் அமரர் செல்லப்பா நடராஜா அவர்களின் ஆக்கம் - சீர் இணுவைத் திருவூர்க்கோர் அருங்காட்சியகம்

சைவத் தமிழ் மக்களது இல்லங்களில் வெற்றிலைத் தட்டங்களின் பாவனை தினசரி இருந்த காலம் ஒன்றிருந்தது. எமது பாட்டிமார் காலத்தில் வீட்டிற்கு வரும் எந்தவொரு விருந்தினரையும் முதலில் அவர்கள் வெற்றிலை கொடுத்து உபசரித்தனர். இதற்காக வீடுகள் தோறும் அழகிய வெற்றிலைத் தட்டங்கள் அன்று பாவனையில் இருந்தன. இவை அனைத்தும் பித்தளையிலானவை. அழகிய வேலைப்பாடுகள் கொண்டவை. இவற்றுள் கால் தட்டங்கள் மிகவும் பிரசித்தமானவை. வட்ட வடிவிலான சற்று உயரமான ஆசனத்தில் பொருத்தப்பட்டுள்ள தட்டுகளே கால் தட்டங்கள் என்று அழைக்கப்பட்டன. கல்யாணம், பூப்புனித நீராட்டு விழா, போன்ற வைபவங்களில் இக் கால் தட்டங்களின் தேவைகள் பெரிதும் உணரப்படுபவை.

மணமகனுக்கோ, மணமகளுக்கோ வளர்ந்து விட்ட மங்கை ஒருத்திக்கோ பால் அறுகு வைத்து நீராட்டு வைபவங்களின் போது பாலையும், அறுகையும் வைப்பதற்கு கால் தட்டங்களே வீடுகள் தோறும் பாவனையில் இருந்தன. புளிக்காப்பு சார்த்திய பின் அவற்றின் அழகே தனியானது. இவ்வாறான அழகு மிகு கால்தட்டங்களின் பாவனை இந்நாட்களில் மிக அரிதாகி விட்டது. அரும்பொருட் காட்சியகங்களில் பார்க்க வேண்டிய நிலையில் இன்று கால் தட்டங்கள் இருக்கின்றன. சைவத்தமிழ் மக்களது வாழ்வுடன் இரண்டறக் கலந்திருந்த பல பொருட்களை இன்று பார்க்க வேண்டுமாயின் அரும்பொருட் காட்சியகங்களையே நாட வேண்டியுள்ளது.

### பறைகள், கொத்துக்கள்

யாழ்ப்பாணக் குடாநாட்டு மக்கள் அனைவரும் கமக்காரர்களாக இருந்த ஒரு காலத்தில் நெல், குரக்கன், தினை,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரகு போன்ற தானிய வகைகள் பெருமளவு உற்பத்தி செய்யப்பட்ட வேளையில் இவற்றைப் பறைக் கணக்காகவே விற்பனை செய்தனர். ஒரு பறை அரிசி அல்லது நெல், குரக்கன், தினை என்பன இருபத்து நான்கு கொத்து அளவுடையனவாகும். சரியாக ஆறு கொத்துக் கொள்ளக்கூடிய, கைபிடிகளுடன் கூடிய பறைகள் அந் நாட்களில் வீடுகள் தோறும் இருந்தன. தினை விளைவித்தவர்களிடம் ஒரு காற்பறை அல்லது அரைப்பறை தினை தர முடியுமோ என்று தான் உசாவுவது நுகர்வோரது வழக்கமாகும். இன்று எந்தக் கமக்காரன் வீட்டிலாவது பறைகள் உண்டா?

அங்காடிகளில் சில்லறையாக அரிசி, தினை, குரக்கன் முதலியவற்றை கொத்துக் கணக்கில் விற்பனை செய்த காலமும் ஒன்றிருந்தது. ஒரு கொத்து, கால் கொத்து எனக் கொத்துக்கள் பாவனையிலிருந்த காலமும் இன்று மறைந்து விட்டது. பறைகளையும், கொத்துக்களையும் கூட இன்று மாணவர்கள் அரும்பொருட் காட்சியகங்களிலேயே பார்க்க வேண்டிய நிலையில் உள்ளனர்.

## கலப்பை

கலப்பைகளினால் உழவு செய்யப்பட்ட கமநிலங்கள் இன்று உழவு இயந்திரங்களினால் உழவு செய்யப்படுவதனால் கலப்பைகளை பார்க்க வேண்டுமாயின் அரும்பொருட் காட்சியகங்களுக்கே செல்ல வேண்டிய நிலையும் சிறிது சிறிதாக மேலோங்கி விட்டதென்றே கூற வேண்டும்.

## மூக்குப் பேணிகள்

கடந்த நூற்றாண்டின் நடுப்பகுதி வரை யாழ்ப்பாணத்து வீடுகள் தோறும் மோர் போன்ற நீராகாரங்களைப் பருகுவதற்கு மூக்குப் பேணிகளே பாவனையில் இருந்தன. அக் காலத்தில் வாய் வைத்து குவளைகளில் எவரும் நீராகாரத்தைப் கொள்வதில்லை. நீராகாரங்களை எச்சில் படாதவாறு பருகுவதற்கு மூக்குப் பேணிகளே பெரிதும் பயன்பாட்டில் இருந்தன. சுகாதாரத்தைப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரிதும் பேணிய இம் மூக்குப் பேணிகளை இன்றைய சந்ததியினர் எவரும் அறிய மாட்டார்கள். இன்று மூக்குப் பேணிகளும் இல்லை, சுகாதாரமும் இல்லை என்ற நிலையையே குடாநாட்டில் அவதானிக்க முடிகின்றது.

## வில்லு வண்டிகள்

அன்றைய குடாநாட்டு மக்கள் ஒரு கிராமத்திலிருந்து இன்னொரு கிராமத்திற்கு பயணம் செய்வதற்கு ஆடம்பரமான வில்லு வண்டிகளையே பயன்படுத்தினர். இவை குதிரைகள், எருதுகள் கொண்டு பயன்படுத்தப்பட்டன. பயணிப்பவர்கள் சிறப்பான மெத்தை ஆசனத்தில் கதிரைகளில் இருப்பதைப் போன்று காலைச் சௌகரியமாக வைத்துக் கொள்வதற்கு வசதியான வடிவமைப்பைக் கொண்டவை இவை.

இணுவில் கிராமத்தில் சேர் பொன் இராமநாதன் அவர்கள் மகளிர் கல்லூரி ஒன்றை ஆரம்பித்த ஆரம்ப காலத்தில் மிக மிக வசதி படைத்தவர்களின் பிள்ளைகள் வில்லு வண்டிகளிலேயே பாடசாலைக்கு சென்று திரும்பினர். இத்தகைய வில்லு வண்டிகளை இன்று அரும்பொருட் காட்சியகங்களிலும் எவரும் பார்க்க முடியாத நிலை வந்து விட்டது.

## பட்டைகள்

கமங்களில் துலாவின் துணை கொண்டு நீர்ப்பாசனம் நடைபெற்ற ஒரு காலத்தில் பனை ஓலைகளால் இழைக்கப்பட்ட பெரிய பட்டைகள் பாவனையிலிருந்தன. இப் பட்டைகள் மூலமே நீர் வெளியேற்றப்பட்டது. இன்றைய இளைஞர் சமுதாயத்தில் பெரும்பாலானவர்கள் துலா, துலாக்கொடி, பட்டை, பட்டைக்கல், பட்டைக்கயிறு, அச்சுலக்கை, நெம்பு என்பவற்றை அறியார்கள்.

ஒரு சமயம் பட்டணத்துப் பாடசாலை மாணவன் ஒருவனைப் பார்த்து "தம்பி உமக்கு அச்சுலக்கையைத் தெரியுமோ" எனக் கேட்ட பொழுது "ஆம்" எனப் பதிலளித்தான். எப்படித் தெரியும், எங்கே அச்சுலக்கையைப் பார்த்தீர்? என



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீண்டும் வினாவிடுத்தேன். என்ன ஐயா அடிக்கடி அச்சுலக்கையைப் பற்றித்தானே பத்திரிகைகளில் செய்திகள் வெளிவருகின்றனவே என்றான் மாணவன். அச்சமயம் அத்துலத்முதலி என்பவர் பிரதிப் பாதுகாப்பு அமைச்சராக இருந்தவர். தமிழ் பேசும் மக்களுடைய இனப்பிரச்சனைகள் விடயத்தில் எந்தவிதமான நெகிழ்ச்சிப் போக்கோ, வளைந்து கொடுக்கும் தன்மையோ இல்லாதிருந்த அத்துலத்முதலியை கிராமத்து முதியவர்கள் அச்சுலக்கை என்றழைத்தனர். வளைந்து கொடுக்கும் தன்மை இல்லாத ஒருவனை அவன் ஒரு அச்சுலக்கை என கிராம மக்கள் விமர்சனம் செய்வதுண்டு. எனது மாணவனுக்கு தெரிந்த அச்சுலக்கை அத்துலத்முதலியே.

## கொண்டோடி (கொண்டடி)

அந்தக் காலத்தில் கிணற்றில் தண்ணீர் அள்ளச் செல்லும் பேர்த்தியைப் பார்த்து பேரனார் "பிள்ளை கொண்டடி சரியில்லை கவனம்" என்று எச்சரிப்பார். கொண்டடி என்றால் என்ன என்பதை இன்றுள்ள இளைய தலைமுறையினர் எவரும் அறியார். கிணறுகளில் துலாக்களின் துணை கொண்டு இந்நாட்களில் நீர் எடுக்கப்படுவது அரிதாகிவிட்டது.

குடாநாட்டில் சூரைக் கொடிகளின் பயன்பாடு இப்போது அறவே இல்லை எனலாம். ஒரு காலத்தில் கிணறுகளிலிருந்து துலா மூலம் நீரை எடுப்பதற்கு சூரைக் கொடிகளே பயன்படுத்தப்பட்டன. வளவுகள் தோறும் சூரைக் கொடிகள் இருந்த அக்காலத்தில் முற்றிய கொடிகளை வெட்டி எடுத்துச் சுட்டு தோல் நீக்கி மரங்களில் கட்டித் தொங்க விட்டு நெளிவெடுத்து பின்னர் துலாக்களில் பிணைப்பதுண்டு. துலா நுனியுடன் கொண்டி இணைத்துக் கட்டப்படும் பகுதி கொண்டடி எனப்படும். துலாவைக் கீழ் நோக்கியும் கிணற்றுப் பட்டையில் உள்ள நீரை மேல்நோக்கி வெளியேயும் கொண்டோட உதவுவதால் இவ்விணைப்பு கொண்டோடி எனப்பட்டது. இது காலப்போக்கில் கொண்டடி என மருவியது. இப் பிணைப்பு உக்கிப் பலமிழந்தால் விபத்து ஏற்பட


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாய்ப்புக்கள் அதிகம். இளவயதிலான பேர்த்தியை "தொங்கித் தொங்கி நீரை அள்ள வேண்டாம்" என்பதே பேரனாரின் அந்த எச்சரிக்கையின் பொருளாகும்.

## பேண்

அதிகாலை எழுந்தவுடன் இன்று முதல் வேலையாகப் பேணைச் சரிபார்க்க வேண்டும் என்பார் வீட்டிலுள்ள முதியவர். ஆடுகால்களும் சரியில்லை எனவும் முணுமுணுப்பார். இன்னும் துலா பயன்பாட்டிலுள்ள ஓரிரு இடங்களில் மட்டும் பேண், ஆடுகால், நெம்பு என்னும் பதங்களுக்கு பொருள் புரியுமே தவிர ஏனையோர் இவற்றைப் பற்றி எதையுமே அறியார். துலா முன்னும் பின்னுமாக ஆடுவதற்கு துணையாக பேண் தடிகள் பிணைக்கப்படுவதற்கு வசதியாக நடப்படும். உறுதிமிக்க பூவரசங்கதிகால்களே ஆடுகால்கள் எனக் காரணப் பெயர் கொண்டு விளங்குவன.

## உழவாரம்

உழவாரம் என்பதும் இன்று பலராலும் அறியாத ஒன்றாக வந்து கொண்டிருக்கின்றது. இதன் உபயோகத்தைப் பற்றி கிராமப்புற இளைஞர் சமுதாயம் சிறிது அறிந்திருந்தாலும், பட்டணத்து இளைஞர்களுக்கு இதன் பயன்பாடு பற்றி விவசாயப் போதனாசிரியர் விளக்க வேண்டிய நிலையே உள்ளது.

## பத்தாயங்கள்

குடாநாட்டு மக்கள் பண்டைக் காலத்தில் தாம் விளைவித்த தானிய வகைகளை பத்தாயங்களில் சேமித்து வைத்தனர். ஒடியல், புழுக்கொடியல் போன்றவையும் பத்தாயங்களிலேயே சேமிக்கப்பட்டன. இன்று பத்தாயங்களில் சிலவற்றை கோயில்களே பாதுகாத்து வருகின்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கதிர்ப்பாய்கள்

யான் சிறுவயதில் இணுவில் கிராமத்தில் "அரிச்சந்திரன்" நாடகம் பார்த்தது இன்றும் எனது ஞாபகத்தில் இருக்கின்றது. நாடகம் நடத்தப்பட்ட தோட்டம் முழுவதும் பெரிய கதிர்ப்பாய்களை ஆசனமாக விரித்திருந்தார்கள். கதிர்ப்பாயில் சௌகரியமாக எனது தந்தையாருடன் இருந்து நாடகம் பார்த்தேன். சூடடிக்கவும், தானிய வகைகளை காயப்போடவுமென அன்றைய கமக்காரர்கள் அனைவரும் மூன்று, நான்கு, ஐந்து என்ற கணக்கில் கதிர்ப்பாய்களை வைத்திருந்த காலமும் இன்று சரித்திரமாகி விட்டது. நெல், குரக்கன், சாமைக் கதிர்களை காயப்போட பயன்படுத்தப்பட்ட பெரிய பாயானது கதிர்ப்பாய் என காரணப் பெயரால் அழைக்கப்பட்டது.

## காவடிகள், வாகனங்கள்

குடாநாட்டில் கடந்த நூற்றாண்டின் முற்பகுதியில் பாவனையிலிருந்த காவடிகள், வாகனங்கள் பலவும் கலையம்சங்கள் நிறையப் பெற்றனவாகும். இணுவில் கிராமத்தில் காவடி ஆட்டத்தில் புகழ் பெற்றவராக விளங்கிய அனுமான் கதிர்காமர் என்ற பெரியவர் பயன்படுத்திய காவடி கலையம்சங்கள் மிகுந்தது என இன்றைய ஆய்வாளர்கள் வியந்து கூறுகின்றனர். வரலாற்றில் பெரிய கோவிலென அழைக்கப்பட்ட இணுவில் கந்தசாமி கோவிலில் உள்ள பழைய வாகனங்களில் சில மிகுந்த கலைநுணுக்கம் கொண்டவையாகும். இவ்வித வாகனங்களை இன்று காண்பது அரிதாகி விட்டதென்றும் ஆய்வாளர்களது கவலையாக உள்ளது.

## பழைய பதிப்புக்கள்

நான்கு பாகங்களைக் கொண்ட பெரிய எழுத்து மகாபாரதம் நூற்தொகுதி இன்றும் இணுவில் கிராமத்தில் பெரியவர்களால் பாதுகாக்கப்பட்டு வருவதை செய்திகள் கூறுகின்றன. மகாபாரதம், இராமாயணம், விக்கிரமாதித்தன் கதை போன்றவற்றின் பழைய பதிப்புக்கள் மிகவும் நயமுடையவை. இவையும் இன்று அரிய காட்சிப் பொருட்களாகிவிட்டன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்டைய கால குடாநாட்டு மக்களால் பயன்படுத்தப்பட்ட அரிய கலைப் பொருட்களை இன்று காணமுடியவில்லை. ஏட்டுச்சுவடிகள் பல கறையானுக்கு இரையாகிவிட்டன. இன்று எஞ்சியிருப்பவற்றையாவது நாம் பாதுகாக்க வேண்டும் என்ற நமது ஆவலை இன்று இணுவைக் கந்தனின் முன்றலில் நிர்மாணிக்கப்பட்டுள்ள அறிவாலயத்தினர் பூர்த்தி செய்வார்களாக. உலகப் புகழ் பெற்ற திருமஞ்சத்தை தன்னகத்தே கொண்டு விளங்குவது இணுவையம்பதியாகும். அழிவின் விளிம்பிலிருந்து இப் பெருமஞ்சத்தைக் காப்பாற்றி உலகப் புகழ் மஞ்சமாக மாற்றியமைத்த பெருமையும் இணுவையம்பதிக்குரியதாகும். அத்தகைய பதியில் தமிழ் மக்களது பாரம்பரியமான கலைப் பொருட்களும், அரிய நூல்களும், ஏட்டுச் சுவடிகளும் பாதுகாக்கப்படும் என்பதில் ஐயத்திற்கும் இடமுண்டோ?

## சுமைதாங்கிகள்

ஒரு காலத்தில் பிரதான வீதிகள் தோறும் பயன்பாட்டிலிருந்து சுமைதாங்கிகள் என்பவை இன்றைய யாழ்ப்பாண குடாநாட்டில் அழிந்தொழிந்து போய் விட்டன. தலைச்சுமையாகவே வியாபாரிகளும், விவசாயிகளும் காய்கறி, கீரை, கிழங்கு, பழவகைகளை எடுத்துச் சென்று சந்தைப்படுத்திய காலத்தில் சுமைதாங்கிகளின் தேவை பெரிதும் உணரப்பட்டது. பிறரின் தயவின்றி தமது தலைச்சுமைகளை தாமே நின்ற நிலையில் சுமைதாங்கிகளில் வைத்து விட்டு களைப்பாறிய பின் மீண்டும் அவற்றை மக்கள் எடுத்துச் செல்வதுண்டு. நெடுஞ்சாலைகள் தோறும் சுமைதாங்கிகளை அமைத்தலை புண்ணிய கருமங்களுள் ஒன்றாகக் கருதி அன்றைய தமிழ் மக்கள் வாழ்ந்துள்ளனர். யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதியில் கோண்டாவிலில் உப்பு மடத்தடியில் அழிந்தொழிந்த நிலையில் சுமைதாங்கி ஒன்று நேற்றுவரை இருந்துள்ளது. சுமைதாங்கிகளையும் இன்றைய இளைய தலைமுறையினர் அறியார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோர்க்காலிகள்

குடாநாட்டில் வழக்கொழிந்துபோனவற்றுள் இன்னொன்று கோர்க்காலிகள் ஆகும். பண்டைய கமக்காரர்கள் அனைவரும் தமது பனையோலை வீடுகளில் கோர்க்காலிகளை அமைத்து அவற்றின் மேல் தினை, வரகு, குரக்கன், நெல், ஒடியல் கூடைகளை வைத்துப் பாதுகாத்தனர். கோர்க்காலிகளின் கீழே இராசவள்ளி, கொம்புவள்ளி, சிறு கிழங்கு வகைகளை சேமிப்பில் வைத்தனர். இன்று கோர்க்காலிகளும் இல்லை. அவற்றுக்கான தேவைகளும் இல்லாமல் போய் விட்டது.

## மத்துக்கள்

யாழ்ப்பாணத்து வீடுகள் தோறும் தயிர் கடைவதற்கான மத்துக்களின் உபயோகம் தினசரி இருந்தது அந்தக் காலம். இக்காலச் சிறார்களுக்கு மத்துக்களைப் பற்றி எதுவுமே தெரியாது. பூனைகளிடமிருந்த தயிர், வெண்ணெய் பாதுகாக்கவென அடுப்படிகள் தோறும் பாவனையிலிருந்த உறிகளும் பெருமளவில் வழக்கொழிந்து விட்டன.

## வல்லுவங்கள்

வல்லுவம் எனப்படும் துணியிலான காசுப் பைகள் அந்தக் கால வியாபாரிகளிடம் பாவனையிலிருந்தன. நாணயக் குற்றிகளை நடுப்பையில் போட்டு தாள் காசுகளை வேறாக வைக்கக் கூடிய இவற்றை பாய் போல் சுருட்டி அதிலுள்ள நாடாவால் சுற்றிக் கட்டி வேட்டி இடுப்பில் செருகிக் கொள்வது வியாபாரிகளது வழமை. வல்லுவங்களும் இன்று முற்றாக மறைந்து விட்டன. வல்லுவம் என்ற சொல்லே பாவனையில் இல்லாமல் போய் விட்டது.

## செப்புச்சல்லி

எமது பாட்டி காலத்தில் கொட்டைப் பெட்டிகள் அற்புதமானவை. பலவர்ண குருத்தோலைகளால் இழைக்கப் படுபவை. ஒன்றுக்குள் ஒன்றாகச் செருகி மூன்று நான்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைப்புக்களை கொண்டவை. அதன் நடுவில் வெற்றிலை பாக்கை வைத்திருப்பார். பக்கவாட்டுக்கள் காசுகளை வைக்க உதவுபவை. அந்தக் காலத்தில் 5, 10, 25, 50 சத நாணயங்கள் வெள்ளிக் குற்றிகளாக இருந்தன. 1, ½, ¼ சதங்கள் செப்புச் சல்லிகள் என்று அழைக்கப் பெற்றன. யாராவது காசு கடன் கேட்டால் ஒரு செப்புச் சல்லி கூட கொட்டைப் பெட்டியில் இல்லையென்று பாட்டிமார் அலுத்துக் கொள்வதுண்டு. இன்று செப்புச் சல்லிகளோ தன் பதப் பிரயோகங்களோ அற்றுப் போய்விட்டன.

## பவுண் கணக்கு

குடாநாட்டு மக்கள் பத்து ரூபாவை ஒரு பவுண் என்று வழங்கிய காலம் ஒன்றிருந்தது. அரச ஊழியர்கள் சம்பளங்களை அந்தக் காலத்தில் கிராம மக்கள் பவுண் கணக்கில் தான் மதிப்பிட்டனர். கடன் கேட்பவர் ஒருவர் ஒரு பத்து பவுண் கைமாற்றாக எடுக்க முடியுமோ என்று கேட்கும் பழைய வழக்கையும் இன்று பார்க்க முடியவில்லை.

## அட்டாளைகள்

இன்றைய கமங்களில் அட்டாளைகள் பாவனையில் இல்லாதொழிந்து விட்டமையால், அவற்றைப்பற்றி இளம் சிறுவர், சிறுமியர் அறியாதவர்களாக இருக்கின்றார்கள். அட்டாளைகள் கமங்களில் இடத்துக்கிடம் நகர்த்தக் கூடியவை. பகலில் ஓய்வெடுக்கவும், உணவருந்தவும் பெரிதும் உதவுபவை. பனையோலைகளால் வேயப்படுவதால் குளிர்ச்சி மிக்கவை. அவற்றில் பாவல், வெண்டி, சூரை, பூசணி, பீர்க்கு போன்ற காய்கறி விதைகள் கட்டித் தொங்கும். உழவாரம், புல்லுச் சத்தகம், கத்தி, மண்வெட்டி, தேனீர் பாத்திரங்களின் இருப்பிடமாகவும் அட்டாளைகள் பேணப்படுவதுண்டு. இத்தகைய அட்டாளைகள் இன்று எங்கே போய் ஒழிந்து கொண்டுள்ளன என்று தெரியவில்லை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**குத்துக்கண்ணி**

யாழ்ப்பாணப் பசுக்களின் கழுத்துக்களை பனம் நாரினால் முறுக்கித் தயாரிக்கப்படும் குத்துக்கண்ணிகள் அலங்கரித்த காலமும் மலையேறிவிட்டது. குத்துக்கண்ணி என்ற பதப்பிரயோகத்தையும் இன்றை குடாநாடு இழந்து விட்டது. ஆங்கிலேயர்கள் இன்றும் எத்தனையோ இத்தகைய பழைமைகளைப் பேணுகையில் நம்மவர்கள் தான் அவர்களது நைலோன் கயிறுகளாக மாறிவிட்டார்கள்.

**அறிவாலயம் திறப்பு விழா சிறப்புமலர்**
**இணுவில் திருவூர் ஒன்றியம்**
**(மீள்பதிப்பு)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாவலரின் மொழிநடை : ஒரு மீள வாசிப்பு

**அறிமுகம்**

பத்தொன்பதாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் சுதேசிகளிடம் ஏற்பட்ட விழிப்புணர்ச்சி ஈழநாட்டின் வரலாற்றில் பெரும் மடை மாற்றத்தை ஏற்படுத்தியது. இவ் விழிப்புணர்ச்சி சைவம், தமிழ் எனும் இரு கூறுகளையும் புதிய தளத்திற்கு - நவீன மயமாதலுக்கு உட்படுத்தியது. இவ் விழிப்புணர்ச்சி பெரிதும் தனி மனிதர்களிலேயே தங்கியிருந்தமை கட்டியுரைக்கத்தக்கது. வண்ணார் பண்ணையைத் தளமாகக் கொண்டு சுதேசியம் சார்ந்த முயற்சிகள் சில நடந்திருப்பினும் ஆறுமுகநாவலரின் வருகையே இம் முயற்சிகளை ஸ்திரத்தன்மையோடு பரவலாக்கமுறச் செய்தது. ஆறுமுகநாவலர் கிறிஸ்தவத்திற்கு மாற்றாக, அவர்களின் வழியையே பின்பற்றி தன் சமயத்தை மீளுருவாக்கம் செய்து நிலைநிறுத்தினார். பிரசங்கம், வினாவிடை, வசனரூபம், பாடசாலைகளை உருவாக்கி நடாத்துதல் போன்றன அச் செயற்பாடுகளுள் சில.

நாவலரின் பணிகள் பலரூபங்களில் எடுத்துரைக்கப்பட்டு ஆராயப்பட்டுள்ளன. அவரின் பணிகளுக்கு அடிநாதமாய் அமைந்தவை பேச்சும், எழுத்துமே. மொழி என்பது ஒருவர் தன் கருத்தை அல்லது எண்ணத்தை பிறரிடம் பகிரப் பயன்படும் ஓர் ஊடகமே. ஆனால் உலகின் நெடிய வரலாற்றில் மொழி என்பது இனத்தின் குறியீடாக (தமிழ் - தமிழர், சிங்களம் - சிங்களவர்) உருப்பெற்று தனக்கான தொல் வரலாறு, கலை, கலாசாரம், பண்பாடு, சமய, தத்துவ, அறிவியல் சிந்தனைகளை கொண்டதாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளங்குகின்றது. இதனால் ஒரு கட்டத்தில் சுதேசிகள், விதேசிகளிடமிருந்து தம்மை விடுவித்துக் கொள்ள, தம் தனித்துவ அடையாளங்களை தக்க வைத்துக் கொள்ள போராடத் தொடங்குகின்றனர். அப் போராட்டம் வெறும் வன்முறை சார்ந்ததாக மட்டுமன்றி கலை, கலாசாரம், அரசியல், சமூக, பொருளாதார, சமய, தத்துவ, அறிவியல் சிந்தனைகள் சார்ந்ததாக அமைந்து விடுகின்றன. விதேசிகளிடமிருந்து கற்றுக் கொண்ட பாடங்களை “தீட்டிய மரத்திற் கூர் பார்த்தல் போல” அவர்களிடமே சுதேசிகள் பயன்படுத்தல் வரலாற்றின் மூலோபாயமாகின்றது. இதற்கு அடிப்படையாக மொழி அமைகின்றது. இங்கு நாவலரின் மொழிநடை என்பதும் அவ்வாறானதே. மொழி பற்றிய நாவலரின் புரிதல், நோக்கு நிலை என்பன பற்றியும் நாவலரின் மொழி அல்லது எழுத்து அவரது காலத்தின் பின்பும் நிலை பெற்று நிற்றல் மற்றும் சுதேசக்கூறுகளுக்கான அதன் வகிபாகம் பற்றியதுமான ஒரு பார்வையாகவே அமைகின்றது.

தமிழின் உரைநடை வரலாறு நெடிது என்று கூறப்பட்டாலும் அதன் பயன்பாடு மிகக் குறைவாகவே காணப்பட்டுள்ளது. தொல்காப்பியம் நால்வகை உரைநடைகளைக் கூறுகின்றது (தொல் செய்யுள்.171) ஆனால் இவற்றிற்கான திருடாந்தங்கள் எம்மிடம் இல்லை. பழந்தமிழ் நூல்களுக்கும் பழைய இலக்கண நூல்களுக்கும் இயற்றப்பட்ட உரைகளே ஆரம்பகால உரைநடைகளாக உள்ளன. அவை கடின நடையும், அதீத திரிசொற் பயன்பாடும், ஓசையும், நிகண்டு முதலியவற்றின் பயன்பாடின்றிக் கற்க முடியாததுமாக அமைந்திருந்தன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்நியர் ஆட்சிக் காலத்தில் குறிப்பாக பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஏற்பட்ட பாடசாலைக் கல்வி, அச்சியந்திர வருகை, சுதேசிகளும் பாடசாலைகள் அமைக்கும் வாய்ப்பு, எழுதா எழுத்தின் அல்லது அச்சின் பெருக்கம், ஆங்கிலக்கல்வி, அரச வேலைவாய்ப்பு என அமைந்த அரச தாராண்மைவாதமும் சுதேசிய எழுச்சியும் கிறிஸ்தவ எதிர்புணர்வும் உரைநடையின் நவீனமயமாக்கல் தேவையை உணர்த்தின. அதன் வழி சுதேசிகளும் நவீன உரை நடை மொழியை உருவாக்க முனைந்தனர். இம் முயற்சியில் பெரு வெற்றியீட்டியவராக, "உரைநடை கைவந்த வல்லாளராக, வழக்கு நடை, வசன நடை எனப் பயிற்றி வந்த ஆசானாக, தற்கால உரைநடையின் தந்தையாக நாவலர் சித்தரிக்கப்படுகின்றார்.

## நாவலரின் மொழிநடை

நாவலரின் எழுத்து அல்லது மொழி என்பது தன் சுதேச சமயமான சைவசமயத்தை நிலைநிறுத்தும் - மீட்டுருவாக்கம் செய்யும் நோக்குடையது ஆதலால் அது கிறிஸ்தவத்திற்கு எதிரானதாக அமைந்தது. வசனநூல், பாடநூல், உரைநூல, துண்டுப்பிரசுரம், கண்டன் எனப் பல தளக்கோலங்களில் அவை அமையினும் அனைத்தினதும் நோக்கம் சைவசமயப் பிரசாரமேயாகும். ஆக, தன் சமய பிரசாரத்திற்கான உபகரணமாகவே நாவலர் தன் மொழியைப் பயன்படுத்தினார் என்பது தெளிவாகின்றது. மொழிநடை பற்றிய தனது கருத்தை நாவலர் பின்வருமாறு பதிவு செய்கின்றார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நிறைந்த கல்வியுடைய வித்துவான்களும் குறைந்த கல்வியுடைய பிறரும் ஆகிய யாவரும் எக்காலத்தும் எளிதில் வாசித்து உணரும் பொருட்டும் கல்வியில்லாத ஆடவர்களும் பெண்களும் பிறரைக் கொண்டு வாசிப்பித்து உணரும் பொருட்டும் … அதனைப் பெரும்பான்மையும் இயற்சொற்களும் சிறுபான்மை ஆவசிகமாகிய திரிசொற்கள் வடசொற்களும் பிரயோகிக்கப்படும் கத்தியரூபமாகச் செய்து வாசிப்பவர்களுக்கே எளிதில் விளங்கும் படி பெரும்பான்மையும் சந்திவிகாரங்களின்றி, அச்சிற் பதிப்பித்தேன்"

(ஆறுமுகநாவலர், 1950:3) என்கின்ற மேற்கோளிலே செய்யுள் நூல்களை விட வசனநூல்களின் முக்கியத்துவமும் அவசியமும் வலியுறுத்திக் கூறப்படுகின்றது. அத்துடன் புதிய உரைநடையின் மூன்று முக்கிய பண்புகளும் சுட்டிக் காட்டப்படுகின்றன.

1. கல்வியறிவுடைய வித்துவான்கள், கல்வியறிவு குறைந்தவர்கள், கல்வியறிவு இல்லாதவர்கள் ஆகிய யாவருக்கும் எளிதில் பொருள் விளங்குவது.
2. பெரும்பாலும் இயற்சொற்களைக் கொண்டிருப்பது: அவசியமான இடத்து மட்டும் திரிசொற்களும் வடசொற்களும் கலப்பது.
3. பெரும்பாலும் சந்திவிகாரங்கள் இன்றி இருப்பது.

(ஆ.யு.நு.ஃ.மான். 1988) இது சமகாலச் சூழலியலில் இயங்கிய ஏனைய அறிஞர்களுக்கும் அவர் தம் சிந்தனைக்கும் நெருங்கியதான கொள்கையே ஆகும். ஆயினும் திரிசொற்களும், வலிதான வடசொற்களும் சந்திபிரிப்புமின்றிய மொழிநடையையே பெரும்பாலான சுதேசிகள் கையாண்டனர். உ.வே.சா.ஐயரின் ஆரம்பகால எழுத்துக்களும் சங்கரபண்டிதரின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சற்பிரசங்கமும் இதற்குத் தக்க சான்றுகளாகின்றன. அவை கற்றறிந்தவர்களுக்கான வித்துவ நடைகள் என்றே கூற வேண்டும். நாவலர், யாவரும் எக்காலத்தும் எளிதில் வாசித்து உணரும் பொருட்டும், பாமரரும் கேட்டுப் புரியும் பொருட்டும் எளிய (இயற்சொல்) சொற்களால், தன்மொழியைக் கட்டமைக்க விரும்பினார் என்பதை மேற்படி கூற்றினூடு அறிய முடிகின்றது. இது பாரதியின் "சொல் புதிது, சுவை புதிது, எளிய நடை" என அமையும் கருத்துருவாக்கத்திற்கு முந்தைய எண்ணக்கரு என்பதும் "எக்காலத்தும்" என்பதனால் எதிர்காலம் பற்றிய தீர்க்கமான எண்ணத்தோடு பயன்படுத்தப்பட்ட மொழிநடைக் கொள்கை என்பதும் தெளிவாகின்றது. துண்டுப்பிரசுரங்களிலும், கட்டுரைகளிலும் அவர் பயன்படுத்திய விளிப்புக்கள் அதனை இன்னும் தெளிவுறுத்துகின்றன. "யாழ்ப்பாணத்து சைவசமயிகளே", "யாழ்ப்பாணத்துச் சனங்களே", "வெகுசனங்களே", "வெகுசனத்துரோகம்" போன்றன அவற்றுட் கட்டத்தக்கன. இதன் வழி யாவர்க்கும் விளங்கும் வகையில் தன் மொழியைக் கட்டமைக்க வேண்டிய தேவை நாவலருக்கு இருந்தமை - அதை அவர் உணர்ந்திருந்தமை தெளிவாகப் புலப்படுகின்றது. உதாரணமாக,

"முனிவர்களே, கேளுங்கள், விசுவாவசு என்னும் பெயருடைய ஒரு வித்தியாதரன் வித்தியாவதி என்னும் ஒரு பெண்ணைப் பெற்றான். அவள் உமாதேவியிடத்து மிக்க அன்புடையவளாகி, தன் பிதாவை வணங்கி ஐயா, அடியேன் உமாதேவியை வழிபட்டு உய்ய வேண்டும் என்றாள். விசுவாவசு உமாதேவியினுடைய மந்திரத்தை அவளுக்கு உபதேசித்தான்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனும் ஆறுமுகநாவலரின் திருவிளையாடற்புராண வசனத்தில் வருகின்ற வரிகளைச் சுட்டலாம். ஆயினும் நாவலரின் மொழிநடை "இலக்கணத் தூய்மை வாதத்தின் வெளிப்பாடு" எனக் கூறி அதனைக் குற்றமாகச் சுட்டுவாரும் உண்டு. ஆ.யு. நு்.மான் அவர்கள் தம் "பத்தொன்பதாம் நூற்றாண்டு நவீன உரைநடை இயக்கமும் ஆறுமுகநாவலரும்" எனும் கட்டுரையில்

"இலக்கணத் தூய்மை என்பது மரபுவழி வந்த இலக்கியக் கொள்கையை வழுவாது கடைப்பிடித்தலையும், மொழி அமைப்பில் ஏற்படும் புதிய மாற்றங்களையும், புதிய வழக்காறுகளையும் நிராகரிப்பதையும் குறிக்கும். குறிப்பாகச் சொல்வதானால், எழுத்து வழக்கில் பேச்சு வழக்கின் செல்வாக்கை முற்றிலும் ஒதுக்குவதோடு பேச்சு வழக்கையும் எழுத்து வழக்கையொட்டி அமைத்துக் கொள்ள வலியுறுத்துவதைக் குறிக்கும். இலக்கிய வழக்கும் பேச்சு வழக்கும் இலக்கண ரீதியாகப் பல அம்சங்களில் வேறுபடுகின்றன. தொல்காப்பியர் முதல் நன்னூலார் வரை இலக்கிய வழக்கையே முதன்மையாகக் கொண்டு அதன் இலக்கண விதிகளையே வகுத்துக் கூறினர். உரையாசிரியர்களும் அவற்றையே பேணி வந்தனர். இலக்கிய வழக்கு செந்தமிழ் என்றும் பேச்சு வழக்கு கொடுந்தமிழ் என்றும் கருதப்பட்டது. பேச்சு வழக்குச் சொற்கள் பல திசைச் சொற்கள் என்ற பெயரில் உயர் இலக்கிய வழக்கில் இடம்பெற்ற போதிலும் அதன் இலக்கண கூறுகள் அங்கீகரிக்கப்படவில்லை. இவ்வகையில் பேச்சு வழக்கின் இலக்கண அமைதியை ஒதுக்குவதையே நாம் இலக்கணத்தூய்மை எனலாம். வேறுவகையில் சொல்வதானால்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கணத்தூய்மை என்பது செந்தமிழ் மரபினை அல்லது உயர் இலக்கிய மரபினைப் பேணுவதே எனலாம்''.

எனக்கூறி நாவலரின் மொழி இலக்கணத் தூய்மை நிறைந்தது என்கிறார். நாவலர் தாம் இலக்கணத் தூய்மையைப் பேணியதோடு பிறரும் பேண வேண்டும் என்பதை வலியுறுத்தியுள்ளார் என பல எடுகோள்களை காட்டிக் குறைப்படுகின்றார். ஐரோப்பிய தமிழறிஞர்களான தத்துவபோத சுவாமிகள், சீகன் பாலகுஜஐயர், வீரமாமுனிவர் போன்றோர் இலக்கணத்தூய்மை பேணாது பெரிதும் பேச்சு வழக்கு சார்ந்ததாகவே அமைக்க முயன்றார்கள் எனக் கூறி உதாரணமும் தந்து நிற்கின்றார். மேலும் நாவலர் போன்ற சமூக உயர் குழாத்தினர், புதிய தமிழ் உரைநடையின் முதல் முயற்சியாளர்களான ஐரோப்பியரின் மரபைப் பின்பற்றி, பேச்சு மொழி சார்ந்த தமிழ் உரைநடையொன்றை அமைக்க முயன்றிருந்தால் இன்று தமிழ் உரைநடையின் சரித்திரமே வேறாக இருந்திருக்கலாம். பேச்சுக்கும் எழுத்துக்கும் இடையே இன்று நிலை பெற்றிருக்கின்ற நீண்ட இடைவெளி சுருங்கியிருக்கலாம். ஆனால் இவ்விடைவெளியைச் சுருக்க மிகப் பரந்துபட்ட வெகுசன இயக்கங்களில் ஈடுபட்ட பிற்காலத்தவர்களே குரல் கொடுத்தனர் என்றுரைக்கின்றார். அ.சண்முகதாஸ் அவர்களும் நவீன மொழியியலின். வழி பேசுவது போல் எழுதுவதையே முதன்மைப்படுத்திக் கூறியுள்ளார். (அ.சண்முகதாஸ் நாவலர் நூற்றாண்டு மலர், 1979) இவற்றைச் சிறிது ஆராய்வோம்.

ஒடுக்கப்பட்டிருந்த சுதேசிகளுக்கு 19 ஆம் நூற்றாண்டில் அரசு வழங்கிய தாராண்மையின் வழி சில சலுகைகள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிடைக்கின்றன என்பதை முன்னர் பார்த்தோம். அதன் வழி அச்சியந்திர வருகை, எழுதா எழுத்து வழியான பதிப்பு, புதுநூலுருவாக்கம், ஆங்கிலேயரின் கல்வித்திட்டம், மதப்பிரசாரம் போன்றவற்றிற்கு சமாந்தரமான சுதேச கல்வித் திட்டம், சைவ சமய பிரசாரம் என்பன நாவலரால் முன்னெடுக்கப்படுகின்றன. அவர் சுதேசிகளின் முன்னோடி மரபுவழிக் கற்கையும், ஆங்கில அறிவும் உடையவர். எக்காலத்தும் ஒடுக்கப்பட்ட சமூகம் தன்னை அவ்வொடுக்கப்பட்ட நிலையிலிருந்து மீள - சுதந்திரம் பெ கல்வி, கலை, கலாசார, அரசியல், பொருளாதார வழிகளில் முயலும் தன் வரலாற்றை - தொன்மத்தை மீட்டுருவாக்கம் செய்யும் தன்னைச் செவ்விதாம் தன்மையுடைய - நீண்ட நாகரிக வரலாறு உடையதாக நிறுவ முயலும்.

தமிழ்ச் சைவப் பாரம்பரியத்தை மீட்டுருவாக்கம் செய்ய முனைந்த நாவலர் தூய்மை வாதத்தை பேணுவது தவிர்க்க இயலாதது. ஆகமத்தின் வழி சைவத்தையும் இலக்கணத்தின் வழி தமிழையும் செவ்விதாம் தன்மை பெறச் செய்ய நாவலர் முனைந்தார். தூய இலக்கண மொழியின் வழி நூல்களாக்கினார். இவ்விதமான தேவை மேலைத்தேச தமிழறிஞர்களுக்கு இல்லை. ஏனெனில் அவர்கள் சுதேசிகள் இல்லை. ஆதலால் அவர்கள் பேச்சு மொழியைக் கையாண்டனர். இங்கு நு.்.மான் இலக்கணத் தூய்மை என்பதை இருதளங்களில் எடுத்துரைக்கின்றார். ஆனால் மையம் ஒன்று மரபு வழுவாது கடைப்பிடித்தல், புதிய மாற்றங்களையும் வழக்காறுகளையும் நிராகரித்தல் என்பனவே அவை. நவீன உரைநடை உருவாக்கத்தின் தந்தை என வர்ணிக்கப்படுகின்ற, நிறுத்தற்குறிகளை அறிமுகம் செய்து சரிவர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரயோகம் செய்த, ஆங்கிலச் சொற்களையும் தன் மொழி வழக்கில் பயன்படுத்திக் கொண்ட ஆறுமுகநாவலரை புதிய மாற்றங்களையும் வழக்காறுகளையும் நிராகரித்தவராக நு.்.மான் சித்தரிப்பது பெரும் வியப்பை தருகின்றது. நவீன உரையாடலை சிறப்புற உருவாக்கிய நாவலர் பாமரரும், சிறுவரும் புரியக்கூடிய வகையிலேயே அதனை உருவாக்கினார் என்பது "பாலபாடத்தை" கற்றவர் யாவரும் உணர்வர். அவரது மொழிநடை வெகுசனங்கள் அறிந்திராத திரிசொற்களிலோ நுண்மான் நுழைபுலம் புகுந்து அறிய வேண்டிய கடின வட சொற்களிலோ அமையாமல் யாவரும் அறிந்த தூய எளிய இயற்சொற்களாலும், வடசொற்களாலுமே அமைந்திருக்கின்றது. அக்காலத்தின் வழக்கத்திலிருந்த ஆங்கிலச் சொற்களையும் நாவலர் அப்படியே சொற்பெயர்த்துப் பயன்படுத்தியுள்ளார் என்பதும் சுட்டியுரைக்கத்தக்கது. எந்த ஓர் எழுத்தையும் அது தோன்றிய காலச் சூழலின், தேவையின் வழி புரிதலே ஆய்வாளனின் முதற்கடமையாகும். அறிஞர் சித்திலெப்பை, பாரதி உள்ளிட்ட பேரறிஞர்கள் "பேச்சு மொழியில் எழுதுதலே உத்தமம்" எனக்கூறி ஏறத்தாழ நூற்றாண்டு கழிந்து விட்டது. ஆயினும் "இலக்கணத் தூய்மை வாதத்தின் செல்வாக்கு இன்னமும் அழுத்தமாகவே உள்ளது" என்று நு.்.மானின் கூற்று நுணுகிச் சிந்திக்கத் தக்கது. ஆக, "பேச்சு மொழி வழி எழுத்து தமிழ் உருவாக்கம்" இன்று வரை இலட்சியவாதமாகவே இருக்கின்றமையை அவரே ஒத்துக் கொள்கின்றமை இங்கு நயக்கத்தக்கது.

நாவலர் தனது உரைநடையில் பழைய மரபு வழி உரைநடை, எடுத்துரைப்பு முறை, விவரண முறை உள்ளிட்ட பல்வேறு உத்தி முறைகளை தேவைக்கேற்ப பயன்படுத்தினார்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதையும், சந்திபிரித்து எழுதுதல், தேவைக்கேற்ப நீண்ட, குறுகிய வாக்கியங்களை எழுதுதல், நிறுத்தற்குறிகளை சரிவர பயன்படுத்துதல் என்பவற்றை நடைமுறைப்படுத்தினார் என்பதையும் அவதானிக்க முடிகின்றது. நிறுத்தற்குறிகளை சரிவர பயன்படுத்தி, இலக்கண, எழுத்துப் பிழைகள் இன்றி பதிப்பித்ததனாலேயே நாவலரின் பதிப்பு "செபதிப்பு" என இன்றுவரை யாவராலும் கொண்டாடப்படுகின்றது. "இலக்கண இலக்கிய பிழைகளும் அச்சுப் பிழைகளும் இல்லாமல் உயர்ந்த தமிழிலக்கண இலக்கிய நூல்களையும் சைவசமய நூல்களையும் பதிப்பித்துதவுவார் அரியரான எமது இளமைக் காலத்தில் ஆறுமுகநாவலரவர்களே அந்நூல்களை பிழையறப் பதிப்பித்து உதவினவர்கள்" எனும் மறைமலையடிகளின் கூற்றும் "தமிழ் வசனநடையிற் குறியீடுகளபட்சியும், சந்திபிரிதலும் இவர்களாற்றான் முதன் முதல் கையாளப்பெற்றன. பழைய தமிழ் வசன நூல்களை (அக்காலத்தில் அச்சிடப்பட்ட கதாமஞ்சரி, பஞ்சதந்திரம்) படிக்க இயலாது. சந்தி பிரிக்காமல் அச்சிடப்பட்டிருப்பதால் நாவலர் அச்சிட்ட நூல்களை பார்த்த பின்னரே பலரும் சந்திபிரித்து தமது நூல்களை அச்சிடலாயினர்"

எனும் ஜம்புலிங்கம்பிள்ளையின் வரிகளும் நாவலரின் மொழி சார்ந்த அக்கறையை, கொள்கையை, செம்பதிப்பு முறையை தெளிவுபடுத்துகின்றன.

கடவுள் என்றும் உள்ளவர் அவருக்கு பிறப்பும் இறப்பும் இல்லை. அவர் எங்கும் நிறைந்தவர் அவர் இல்லாத இடம் இல்லை. அவர் எல்லாம் அறிந்தவர். அவர் அறியாதது ஒன்றுமே இல்லை. அவரது அறிவு இயற்கை அறிவு, ஒருவர் அறிவிக்க


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிபவர் அல்லர். அவர் எல்லாம் வல்லவர். அவரால் இயலாத கருமம் ஒன்றும் இல்லை.

(ஆறுமுகநாவல் 1969:1) மேற்படி எடுகோள், அவர் எழுதிய சிறுசிறு வாக்கியங்களுக்கும் நிறுத்தற்குறி பயன்பாட்டிற்கும் தக்க உதாரணம் ஆகும். இலக்கணத்தூய்மை நிறைந்த இப் பந்தியால் தமிழிற்கு வந்த கேடு யாது? இலக்கணம் என்பது பற்றிய பேராசிரியர் அ.சண்முகதாஸ் அவர்களின் கூற்று சுட்டியுரைக்கத்தக்கது.

“இலக்கணமென்பது மொழியில் விவரணமேயொழிய, மொழி இவ்வாறு பேசப்பட வேண்டும், இவ்வாறு எழுதப்பட வேண்டும் என விதிமுறை செய்வதல்ல என்பது நவீன மொழியியலின் முக்கிய கோட்பாடாகும். இந்த வகையில் மேலைத்தேயத்திலும் இங்கும் பல மொழிகளுக்கு எழுதப்பட்ட மரபுவழி இரக்கண நூல்கள் விதிமுறை இலக்கணங்களாகவே பெரும்பாலும் அமைந்து வந்துள்ளன. அது மாத்திரமன்றி, இம் மரபுவழி இலக்கண நூல்கள் இலக்கியம், தத்துவம் ஆகியன பற்றி அறிவதற்கான கருவி நூல்களே என்னும் கருத்தும் நிலவி வந்துள்ளது. இவ்விடத்திலே, ஆறுமுகநாவலரின் இலக்கணச் சுருக்கம் என்ற நூலின் முதலிரு வாக்கியங்களை நோக்குவோம்.

“இலக்கண நூலாவது உயர்ந்தோர் வழக்கத்தையுஞ் செய்யுள் வழக்கத்தையும் அறிந்து விதிப்படி எழுதுவதற்கும் பேசுவதற்கும் கருவியாகிய நூலாம்”.

“அந்நூல், எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், தொடர் மொழியதிகாரம் என மூன்றதிகாரங்களாக வகுக்கப்படும்”.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனும் எடுகோள்களையும் எடுத்தாள்கிறார் (சண்முகதாஸ்.அ. 1979) அத்தோடு நவீன மொழியியற் கோட்பாட்டின் ஊடாக நாவலரின் மொழியியற் சிந்தனையை இலக்கணச் சுருக்கத்தின் வழி ஆராய்கின்றார். நவீன மொழியியற் கோட்பாட்டுக்குள் நாவலர் எவ்வாறு உட்படுகின்றார் விலகுகின்றார் என்பதையும் தெளிவுறுத்துகின்றார். விலகுமிடம் பேச்சு மொழியைப் பயன்படுத்தாமை என்கின்றார். இனவிடுதலைப் போராட்டம் எழுச்சி பெற்றிருந்த காலகட்டத்தில் ஈழத்து தமிழ் சமூகமும் நாவலரின் இலக்கணத் தூய்மையோடு மொழித்தூய்மை வாதத்தையும் முன்மொழிந்து நடைமுறைப்படுத்தியது ஏன் என்பது இங்கு மனங்கொள்ளத்தக்கது. அதற்கு எது விடையோ அதுவே நாவலரின் இலக்கணத்தூய்மை வாதத்திற்கும் விடையாகின்றது. நமது சமகால நவீன மொழிக் கொள்கைகளை நூறு வருடத்திற்கு முன்னிருந்த மொழியின் மீதும் மொழிக் கொள்கையின் மீதும் பிரயோகித்து கருத்துரைப்பது என்பது அபத்தமே.

அத்தோடு இன்று ஈழத்து புனைவுகளில் வருகின்ற பேச்சுத் தமிழை தமிழ் நாட்டார் புரியவில்லை என்கிறார்கள். பேச்சுத் தமிழ் பிராந்திய, பிரதேச ரீதியாக வேறுபடுவது திருச்சி, மதுரை, மெட்ராஸ், யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, மலையகம் எனப் பேச்சுத் தமிழின் வழி எழுதின் குறித்த காலத்தின் பின் தமிழ் தன் அடையாளம் இழக்கும். எப்படித் தமிழில் இருந்து மலையாளம், தெலுங்கு எனத் திராவிட மொழிகள் பிரிந்து போயினவோ - தமிழ் இனம் சிறுபான்மையாயிற்றோ அது மென்மேலும் நிகழும். தமிழ் எனும் மொழி ஒன்று இருந்தது என்ற வரலாற்றுப் பதிவே எஞ்சும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவலர் உணர்ச்சி வெளிப்பாடு மிகுந்த உரைநடையை தமிழுக்கு அறிமுகம் செய்கிறார். துண்டுப்பிரசுரங்களும், கண்டனவுரைகளும் இதற்கு நற்சான்றுகளாகின்றன. இவற்றில் வருகின்ற விளிப்பும் உள்ளடக்கமும் கிண்டலும் கேலியும் நிறைந்ததாக, கோபம், மகிழ்ச்சி, விரக்தி போன்ற உணர்வுகளை வெளிப்படுத்துவனவாக அமைந்துள்ளன. கண்டனவுரைநடைகளில் நாவலர் பயன்படுத்தும் மொழிநடையை நு.்.மான் அதிகார மொழிநடை (Commanding) என எடுத்துரைப்பது மிகச் சரியானதேயாகும். இவை தவிர தாம் எழுதிய உரைகளை நவீன முறையியலில் எழுத முற்பட்டார். "திருத்தியும் விளக்கியும், கூட்டியும், புதுக்கியும்" உரை செய்து பதிப்பித்தார் பூலோகசிங்கம் அவர்கள்,

"வழக்கிலிருந்த உரைகளில் மாணவர்களுக்கு விளக்க வேண்டுவனவற்றை மேலும் விளக்கியும், அவர்கள் தெரிந்து கொள்ள வேண்டிய குறிப்புக்கள் பல கூட்டியும், பகுபத முடிவு சில காட்டியும், சொல்லிணக்கண சூசி சேர்த்தும், இன்றியமையாத அப்பியாசங்களை தொகுத்தும், நாவலர் புதிய முறையில் நன்னூலுக்கு காண்டிகை உரையினை எழுதினார்"

எனக் கூறுவது பொருத்தமான கருத்தாகும்.

"தனது காலத்திற்கேற்றவை எவை என்பதையும் இன்றியமையாதன எவை என்பதையும் சிந்தித்து அவற்றை செயற்படுத்தியமையே நாவலரது சிறப்புக்கும், தனித்துவத்திற்கும் அடிப்படை. பத்தொன்பதாம் நூற்றாண்டு தமிழ் சமுதாயத்திற்கு அவசியமாக இருந்த சில கருமங்களை நிறைவேற்றினார். நன்கு ஆற்றப்பட்ட அக் கருமங்கள் பிறருக்கு ஆதாரமாக அமைந்தன."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(கைலாசபதி.க.1979) எனும் கைலாசபதியின் பொதுநிலைக்கூற்று நாவலரின் மொழிக் கொள்கைக்கும் மிகப் பொருத்தமானதாகும். இங்கு நாவலர் தம் கொள்கை மற்றும் நோக்கிற்கேற்பவே தம் மொழிக் கொள்கையை கொண்டிருந்தார் என்பதும் அதற்கே பயன்படுத்தினார் என்பதும் தெளிவாகின்றது.

இவரின் இம் மொழிக் கொள்கையை பின்பற்றி பிற்கால மரபினரும் பதிப்பு, உரை செய்தல் என்பவற்றை நிகழ்த்தினர். காலத்திற்கேற்ப கொள்வன கொண்டு தவிர்ப்பன தவிர்த்து நாவலர் தம் மொழியைக் கையாண்டார். உதாரணமாக தொல்காப்பியர், நன்னூலார் எழுத்ததிகாரத்தில் கூறிய பிறப்பியலை தம் நூலான இலக்கணச் சுருக்கத்தில் கூறாது விடுத்தார் என்பது சுட்டத்தக்கது. பிற்காலத்தில் இலக்கணச் சுருக்கத்தின் வழியே பல நூல்கள் எழுந்தன. அவை இலக்கணத்தை விரித்தும் புதுக்கியும் அமைத்தன. தற்கால இலக்கண மற்றும் மொழியியல் பேராசிரியர்களின் நூல்களுக்கும் ஓரோர் வழி நாவலரின் இலக்கணச் சுருக்கமே முன்னோடி.

நாவலரின் பன்முக ஆளுமைக்கு அடிப்படையாக அமைந்தது அவரது மொழிப் புலமையே. தமிழ், சமஸ்கிருதம், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் புலமைத்துவம் உள்ளவராக நாவலர் திகழ்ந்துள்ளார். பேர்சிவல் பாதிரியாரிடம் ஆங்கிலம் கற்ற நாவலர் தமிழ் பண்டிதராக இருந்து அப் பாதிரியாருக்கு தமிழ் கற்பித்தார். மரபுக் கல்வியின் வழி சமஸ்கிருதத்தை கசடறக் கற்றிருந்தார். குறிப்பாக பத்தொன்பதாம் நூற்றாண்டிலும் அதற்கு முற்பட்ட காலத்திலும் வாழ்ந்த ஈழத்து தமிழ் தமிழறிஞர்களில் பிராமணர் அல்லாதாரும் சிறந்த சமஸ்கிருத விற்பன்னர்களாக திகழ்ந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. அந்த வகையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவலரும் அவ் வழி சமஸ்கிருத பாண்டித்தியம் உள்ளவராக திகழ்ந்தார். இறக்கும் தறுவாயில் நாவலர் எழுதத் தொடங்கியிருந்த நூல்களின் பட்டியலை அவதானிக்கும் போது இது தெற்றென புலப்படுகின்றது. அகராதி (தமிழ் - தமிழ்), அகராதி (ஆங்கிலம் - தமிழ்), அகராதி (சமஸ்கிருதம் - தமிழ்) தருக்கபரிபாஷை, இலக்கண வினாவிடை முதற்புத்தகம், சமஸ்கிரு வியாகரணசாரம், இரகுவம்சம் முதலியன அவை.

நாவலரின் சைவசமயப் பெரும் பணிக்கு வித்திட்ட செயற்பாடு பைபிளை மொழிபெயர்த்ததேயாகும். தன் சமய அடையாளம் இழக்காது அதே வேளை ஆசிரியர் பேர்சிவல் பாதிரியாரின் அன்புக்கட்டளையையும் நிராகரிக்காமல் செய்த பெரும்பணி இம் மொழிபெயர்ப்பாகும். அக்கால சென்னை வேதாகம சங்கம் தமிழ் பேரறிஞராக விளங்கிய மழவை மகாலிங்கஜயரை அணுகி அதனை மதிப்படும் படி கூறினார். அவர் செவ்வெனே ஆராய்ந்து நாவலரின் மொழிபெயர்ப்பையும் தமிழ் மொழி நடையையும் பெரிதும் பாராட்டினார். வின்சலோ அகராதியைத் தந்த வின்சலோ அவர்களும் விரமாமுனிவர் அவர்களும் யாழ்ப்பாண மொழிபெயர்ப்பை பாராட்டினார் என அறிய முடிகின்றது. தென்னிந்திய மிஷனரிகள் அதிக சமஸ்கிருதச் சொற்கள் விரவியதாகக் குற்றம் சாட்டிய பொழுதும்

"நாவலரின் மொழிபெயர்ப்பிலுள்ள 14,965 சொற்களில் 2994 சமஸ்கிருதச் சொற்கள் kabricius மொழிபெயர்ப்பிலுள்ள 15,575 சொற்களில் 2856 சொற்களே சமஸ்கிருத மூலத்தன. இதனால் சமஸ்கிருத செல்வாக்கு என்ற வாக்கு அடிபட்டுப் போயிற்று"


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனும் சோ.பத்மநாதனின் கூற்று நாவலரின் மொழி நடையை அவருடைய ஆங்கில தமிழ் சமஸ்கிருத புலமைத்துவத்தை எடுத்துக் காட்டுகின்றது. (சோ.பத்மநாதன், 2016, நாவலர் நறுமலர்)

நன்னூல் காண்டிய உரை, இலக்கண விளக்கச் சூறாவளி, இலக்கணக் கொத்து, தொல்காப்பிய சொல்லதிகார சேனாவரையர் உரை, பிரயோக விவேகவுரை போன்றவற்றை பரிசோதித்தும் புதுக்கியும் வெளியிட்ட திறம் அவரின் இலக்கண மற்றும் மொழிப் புலமைத்துவத்தின் சிறந்த அடையாளங்கள் ஆகும். சிவஞானபோத சிற்றுரை, திருமுருகாற்றுப்படை, தர்க்க சங்கிரகவுரை, அன்னப்பட்டியம் போன்ற பதிப்புக்கள் அவருடைய மொழிப் புலமைத்துவத்திற்கு அடையாளங்கள் ஆகின்றன. அவ்வாறே அவருடைய வசன நூல்கள் அமைகின்றன. அத்தோடு தம் பதிப்புக்களில் பல்வேறு வகையாக புதிய சொல்லாடல்களையும் அவர் நிகழ்த்தியுள்ளார். அதே போல மொழிபெயர்ப்புக்களின் வழி புதிய சொல்லாக்கங்களை தமிழில் நிகழ்த்தியுள்ளார்.

## முடிவுரை

ஈழத்தில் பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஆங்கில வழி வந்த புதுவது சார்ந்த சுதேச எழுச்சியின் வழி எழுந்த அறிஞர் வரிசையில் முன்வைத்து நோக்கத்தக்கவர் ஆறுமுக நாவலர். அவர் பல விடயங்களில் முன்னோடியாதலால் பல விமர்சனங்களுக்கும் உள்ளாகி வருகின்றவர். அவரது மொழி சார் சிந்தனை தன் சமயக் கொள்கையை பரப்பும் நோக்கத்துடனும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாவர்க்கும் எளிதாய், புரியத்தக்கதாய் அதே வேளை இலக்கணவமைதி கெடாததாய் இருக்க வேண்டும் என்பதாய் அமைந்தது. பின் நவீனத்துவ கட்டவிழ்ப்பு, வடிவவுடைப்பு பற்றிய உரையாடல் நிகழ்ந்து கொண்டிருக்கும் இக்காலத்தில் "பேச்சு மொழி" மொழியியலாளர்களால் முதன்மைப்படுத்தப்படுகின்றது. இன்றைய பல கவிதைகளில் ஒருமை பன்மை பேதமற்று, கால பேதம் இட பேதம் என்பன அற்று எழுதுபவரின் அறியாமையாலோ அல்லது அக்கறையின்மையாலோ இடம்பெற்று வருதலை நாம் காணலாம். அவற்றை பேச்சு மொழி என நம் நவீன மொழியியலாளர் கூறவும் கூடும். காலத்திற்கேற்ற மாற்றங்கள் இடம்பெறுதல் தவிர்க்க இயலாததும் அவசியமானதும் கூட. ஆனால் மொழியை தன்னடையாளம் இழந்து சிதைந்து போகவிடும் தன்மை உவப்பை தரக்கூடியது அல்ல. நாவலரின் மொழிக் கொள்ளை வழியே தான் இன்றளவும் தமிழ், தன்னடை கெடாது திகழ வழியேற்பட்டது என்பதை நவீன மொழியியலாளர்கள் சிந்திப்பார்களாக.

**உசாத்துணை நூல்கள்**

1. ஆறுமுகநாவலர், 1954, "பிரபந்தத் திரட்டு", வித்தியானு பாலன அச்சகம், சென்னை
2. ஆறுமுகநாவலர், 1955, "பெரிய புராண வசனம்", வித்தியானு பாலன அச்சகம், சென்னை
3. ஆறுமுகநாவலர், 1969, "பாலபாடம்", வித்தியானு பாலன அச்சகம், சென்னை
4. ஆறுமுகநாவலர், 1970, "இலக்கணச் சுருக்கம்", வித்தியானு பாலன அச்சகம், சென்னை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. ஆறுமுகநாவலர், 1978, "நன்னூல் காண்டிகை உரை", முதல் பாகம், (எழுத்ததிகாரம்), வித்தியானு பாலன அச்சகம், சென்னை

6. கைலாசபதி, க., 1979, "நாவலர் நூற்றாண்டு மலர்", ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சபை, இலங்கை

7. இரகுவரன், க., பிரசாந்தன், ஸ்ரீ., கௌரிகாந்தன், மு., (ப.ஆ.), 2016, "நாவலர் நறுமலர்", இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம், இலங்கை

**தி.செல்வமனோகரன்**
**விரிவுரையாளர்**
**சைவசித்தாந்ததுறை**
**யாழ்ப்பாண பல்கலைக்கழகம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விசேட கவனத்துக்குரியவர்களுக்குரிய கல்வி சமூக, பொருளாதார அணுகுமுறை

### யாழ்ப்பாண பல்கலைக்கழகம் - 2023

பேராசிரியர்.மா.சின்னத்தம்பி
முன்னாள் தலைவர்,
கல்வியியல் துறை

## அறிமுகம்

அனைவருக்கும் கல்வி என்ற உலக உடன்பாடு தாய்லாந்தில் 1990ல் ஜொம்டனில் நடைபெற்ற அனைவருக்கும் கல்வி பற்றிய உலக மகா நாட்டில் காணப்பட்டது. இதில் ஆரம்பக் கல்விக்கும் மேலதிகமாக அடிப்படைக் கல்வியை வழங்க வேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது. இந்த மகாநாட்டில் 155 நாடுகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டு உடன்பாடு கண்டனர். இந்த மகாநாடு 6 அம்சங்களில் செயற்படுவதற்கான சட்டகம் ஒன்றையும் தயாரித்தது. அதில் முதலாவது இலக்கு பின்வருமாறு குறிப்பிடப்பட்டது.

“முன்பிள்ளைப்பருவ பராமரிப்பு மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளை விரிவுபடுத்துதல். இதில் குடும்பங்களினதும், சமுதாயத்தினதும் இடைவினையுறவுகள் உள்ளடக்கப்படும். இதில் குறிப்பாக வறியவர்கள், அனுகூலம் பெறமுடியாதோர் மற்றும் உடலியல் குறைபாடு உடையோர் கவனம் செலுத்தப்படும்” (1)

இத் தீர்மானம் வழமையானதும் முறைசார்ந்ததுமான கல்வித் திட்டமிடல், கல்விசார் செயற்பாடுகள் என்பவற்றின் போது ஒரு சாரார் அத்தகைய தொழிற்பாட்டு வீச்சுக்குள் வருவதில்லை. கல்வி அபிவிருத்தியின் நலன்கள் சார்ந்த ஒளிவீச்சு அவர்கள் மீது படுவதில்லை என்பதை உள்ளூர உணர்ந்து கொண்டதை வெளிப்படுத்தி நிற்கின்றது. இதனால் “குறிப்பாக” என்று கவனயீர்ப்புச் செய்தியாக அனுகூலம் பெறமுடியாதவர்கள் மற்றும் உடலியல் குறைபாடுடையவர்கள் பற்றிய கல்வி பற்றி குறிப்பிட்டது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் மரபு வழியான கல்விச் சிந்தனைகள், கருத்தியல்கள், சராசரியான மனிதர்களின் கல்வி பற்றியே வற்புறுத்தி வந்துள்ளன. கல்வி நிறுவனங்களின் உருவாக்கம், கலைத்திட்ட உருவாக்கம், ஆசிரியர்களின் கற்பித்தல் முறைப் பயிற்சி, கற்றல் - கற்பித்தல் துணைச்சாதனங்களின் வடிவமைப்பு, இணைக்கலைத்திட்ட உருவாக்கம், மதிப்பீட்டு நுட்பங்கள் போன்ற எல்லா அம்சங்களையும் பற்றிய உயர்மட்ட தீர்மானங்கள் பெரும்பாலான மாணவர்கள் சராசரியான தகைமைகளுடன் வளர்வது பற்றியே கவனம் செலுத்தி வந்துள்ளது. இந்த சராசரி ஆற்றலுக்கான கல்வி ஏற்பாட்டில் மேலே வருபவர்கள் அதி உச்சமான நலன்களைப் பெற்றுக் கொள்வதற்கான சமூக, பொருளாதார, கல்வி ஏற்பாடுகளும் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளன. ஆனால், இந்த மரபுவழி கல்விச் செயல் நெறிகளுக்குள் வர முடியாது தவிர்க்கப்படுபவர்களும் உள்ளனர். ஒப்பீட்டு ரீதியில் சராசரி தகைமை பெறக்கூடியவர்களை விட இவர்களது எண்ணிக்கை குறைவு என்பதாலும் தம் உரிமைத் தேவை, பிரச்சனை பற்றி குரல் உயர்த்தும் வல்லமையும், வாய்ப்பும் வளர்க்கப்படாமையினாலும் இவர்கள் செயலமைப்பு முறையிலான கல்விச் செயற்பாடுகளிலிருந்து வசதியான முறையில் தவிர்க்கப்பட்டு விட்டனர். அல்லது இவர்களது கல்வி சார் தேவையின் முக்கியத்துவம் உணரப்படாத நிலையில் புறந்தள்ளப்பட்டு விட்டனர். அவர்கள் தான் தேவையுடையவர்கள் ஆவார்.

அவர்களது கல்விக்கான தேவை, அதன் சமூகம் மற்றும் பொருளாதாரம் சார்ந்த தகைமை நிலை மற்றும் பிரச்சனைகள் பற்றியும் ஆராய்வது இக் கட்டுரையின் நோக்கமாகும்.

**விசேட தேவையுடையோர்**

ஒரு நாட்டின் குடிமக்களில் ஒரு சாரார் சிறப்பார்ந்த கவனயீர்ப்பை வேண்டி நிற்கின்றனர். அவர்கள் தான் விசேட


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவையுடையோர் ஆவார். ஒவ்வொரு நாடும் தமது தகுதி விதிகளை தீர்மானித்து அதன்படி விசேட தேவையுடையோர் பற்றிய வரையறையை நிர்ணயிக்கின்றன. இலங்கையில் பின்வருவோர் விசேட தேவையுடையவர்களாக இனங்காணப் பட்டுள்ளனர்.

- மீத்திறனும், விசேட நிபுணத்துவமும்
- கற்றல் இயலாமையுடையோர்
- தற்சிந்தனை உடையோர்
- பல்வகை இயலாமையுடையோர்
- உடலியற் குறைபாடுகள் கொண்டவர்
- வேறு சுகாதார குறைபாடுகள் கொண்டவர்
- மொழிதலும், மொழிக் குறைபாடுகளும் கொண்டவர்
- கேட்டல் குறைபாடு உடையோர்
- பார்வை குறைபாடு உடையோர்
- பூரணமான பார்வை மற்றும் கேட்டல் குறைபாடு கொண்டவர்
- மெதுவான உள வளர்ச்சி கொண்டவர்
- மூளைப் பாதிப்புக்கு உட்பட்டோர்
- உக்கிரமான மனவெழுச்சி பிரச்சனை கொண்டவர்

இவர்கள் பருமட்டாக நான்கு வகையான இயல்புகள் கொண்டவர்களாவர். அந்த இயல்புகள் பின்வருமாறு குறிப்பிடப்படுகின்றது.

- மீத்திறன் மிக்கவர்
- குறைபாடு கொண்டோர்
- கட்புல செவிப்புல பாதிப்புடையோர்
- உள மற்றும் மூளை வளர்ச்சி குன்றியோர்

இவர்களில் உண்மையில் அனுகூலம் மற்றும் நேர்முறை இயல்புடையவர்களாக மீத்திறன் மிக்கவர்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோக்கப்படுகின்றனர். மற்றையவர்கள் பிரதிகூலங்கள் அல்லது எதிர்நிலைப் பண்புகள் கொண்டவர்கள் ஆவர். சாதாரண சூழலிலும், சாதாரண வாழ்வுத் தொழிற்பாடுகளிலும் இசைந்து செல்ல முடியாத அல்லது அவற்றை இயல்பாக முழுமையாக பயன்படுத்த முடியாதவாறு உடல் மற்றும் உள சமநிலை குன்றியோராகக் காணப்படுபவர்கள் இவர்கள் ஆவார். யுனிசெப் (UNICEF) நிறுவனத்தின் சிறுவர் உரிமைகள் பற்றிய சமவாயம் உள அல்லது உடல் குறைபாடுடைய பிள்ளைகள் பற்றி தனது உறுப்புரை 23 ல் குறிப்பிடுகின்றது. இதன் படி பின்வரும் அம்சங்கள் கவனயீர்ப்புக்கு உரியனவாகும்.

> "உள அல்லது உடல் ஊனமுடைய ஒரு பிள்ளை அதன் கௌரவத்தை உறுதிப்படுத்துவதும் சுய நம்பிக்கையை ஊக்குவிப்பதும், சமூக நடவடிக்கைகளில் தீவிரமான பங்குகொள்ளக் கூடியதுமான சூழலில், முழுமையான கண்ணியமான வாழ்க்கையை அனுபவிக்க வேண்டுமென்பதை அரச தரப்பினர் ஏற்றுக் கொள்ள வேண்டும்" (2)

இதன்படி உடல், உளக் குறைபாடுடைய பிள்ளைகளின் கௌரவம், சுயநம்பிக்கை, பங்கேற்கும் ஆற்றல், கண்ணியத்துடன் வாழும் உரிமை என்பன உறுதிப்படுத்தப்படல் வேண்டும். இதற்குரிய கல்வி பொருத்தமான முறையில் வழங்கப்படுவது அவசியம்.

இதே உறுப்புரையின் 3 ஆம் 4 ஆம் பந்திகளில் இவர்களது கல்வி பற்றி பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

> "பிள்ளையின் கலாசாரம், ஆன்மீக மேம்பாடு அடங்கலாக முழுமையான சமூக ஒருமைப்பாட்டையும், தனிப்பட்ட முன்னேற்றத்தையும் அடைவதற்கு ஏற்றதான கல்வி" (3)

இதில் கல்வி இத்தகைய பிள்ளைகளிடம் கலாசார மேம்பாட்டையும், ஆன்மீக மேம்பாட்டையும் கல்வி உருவாக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டுமென்றும் அதன் வழியாக அவர்கள் சார்ந்து சமூக ஒருமைப்பாட்டையும் தனிப்பட்ட முன்னேற்றத்தையும் கல்வி உறுதிப்படுத்த வேண்டுமென்றும் வலியுறுத்தப்படுகின்றது.

இதே உறுப்புரையின் 4 ஆம் பந்தியில் கல்வி தொடர்பான தகவல்களை பரப்புவதில் அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டும் (4) என்றும் குறிப்பிடப்படுகின்றது.

சர்வதேச ரீதியில் இத்தகைய பாதிப்புறுவோரின் கல்வி தொடர்பாக நாடுகளின் அரசாங்கங்கள் கவனம் செலுத்த வேண்டிய முதன்மை அம்சங்கள் தெளிவுபடுத்தப்பட்டுள்ளன. இவை வழிகாட்டும் சட்டகங்கள் என்ற அளவில் தான் ஏற்கப்பட்டுள்ளன. நடைமுறைகளிலான பலவீனங்களும், புறக்கணிப்புக்களும், தாமதங்களும், உடல், உள ஊனமுற்றோர் கல்வி ஏற்பாட்டை வெகுவாக பாதித்தே வருகின்றன.

- கல்வித் திட்டமிடுவோர், கல்வி முகாமைத்துவ அணியினர், கல்வி நிறுவனங்கள், ஆசிரியர்கள் போன்றவர்கள் இத்தகைய பலவீனமான சமுதாய பிரிவினர் பற்றி சிந்திக்கும் போதும் செயற்படும் போதும் வினைத்திறனும், சமத்துவ நோக்கும் கொண்டிருப்பதில்லை என்பது எமது கல்விச் செயலமைப்புச் சார்ந்த - அமைப்புச் சார்ந்த குறைபாடாகும்.
- வளங்களுக்காகவும், வாய்ப்புக்களுக்காகவும் எந்நேரமும் போட்டியிடுகின்ற அல்லது ஏங்கி நிற்கின்ற இந்தக் குறைபாடுகள் கொண்ட இச் சமூகப் பிரிவினர் வறிய நாடுகளில் வறியவர்களினுள் வறியவர்கள் ஆக்கப்பட்டு விடுகின்றனர்.
- அசாதாரண நிலைமைகளின் போது முதல் பாதிக்கப்படும் தூசிப் படையினராகவும் இந்த உடல், உளக் குறைபாடுடையவர்கள் அமைந்து விடுகின்றனர். பஞ்சம், வெள்ளப்பெருக்கு, யுத்தம், இடப்பெயர்வு, கலவரங்கள் போன்ற சந்தர்ப்பங்களில் குடும்ப, சமூக மற்றும் அரச முன்னுரிமைப் பட்டியல்களில் இவர்கள் இடம்பெறுவதில்லை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விதிவிலக்காக பெறப்படும் அனுகூலங்கள் மாத்திரமே இவர்களுக்கு கிடைக்கின்றது.

➢ சமூகங்களிலும், தேசிய ரீதியாகவும் பல சமயங்களில் சர்வதேச ரீதியாகவும் கல்வி ஒழுங்கமைப்பு, கல்வி நிறுவனங்கள், கல்வி தொழில்நுட்பங்கள் தொடர்பாக மாற்றங்கள் அல்லது நவீன மயமாக்கம் ஏற்படும் போதெல்லாம் இவர்கள் சுலபமாக மறக்கப்பட்டு விடுகின்றார்கள். முன்னேற்றங்கள் "பொதுவாக" மேற்கொள்ளப்பட்டால் போதுமானது என்ற எண்ணமும் உணர்வும் முனைப்புடையோர் மத்தியில் உள்ளது. இதே போல் நவீனமயமாக்கத்தின் பயன்களை இழப்பு ஏதுமின்றி முழுமையாகப் பெறுவதற்கு சில உடல், உள மற்றும் நிதிசார் தகைமைகள் அவசியமாகி விடுகின்றன. இதனால் வலுவுடையோரே அவற்றை உடமையாக்கிக் கொள்கின்றனர். இதில் இந்தப் பலவீனமான சமூகப் பிரிவினர் விலக்களிக்கப்பட்டு விடுகின்றனர். அவ்வாறு விலக்களிக்கப்பட்டுள்ளதை உணராமலே கூட, கைவிடப்பட்ட, நலிவுற்ற கல்வி ஏற்பாடுகளுக்குள்ளேயே இவர்கள் நீண்ட காலம் வாழ்கின்றனர். இவர்களது தேவை பற்றிய கூக்குரல்கள் கூட முடிவுகள் மேற்கொள்வோரின் காதுகளில் காலம் தாழ்ந்தே விழுகின்றது. அவ்வாறு விழுகின்ற குரல்களின் ஓலமும், விரக்தியும் களையப்படுதற்கு நீண்ட காலம் எடுக்கின்றது. கல்வியுலகின் உள்ளூர் மட்டத்திலிருந்து தேசிய மட்டம் வரை பல நாடுகளில் உடல், உள பாதிப்புக்கு உட்பட்டவர்கள் தொடர்பாக பல முரண்பட்ட கல்விசார் கருத்து நிலைகள் காணப்படுகின்றன.

➢ இவர்கள் முறைசார் கல்வி ஏற்பாடுகளுக்குள் வர வேண்டியதில்லை. ஏனெனழில் உடல், உள குறைபாடுகளற்றவர்கள் கூட பாடசாலைகளுக்கு ஒழுங்காக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருவதில்லை, இடைவிலகி விடுகின்றனர், பாடங்களில் சித்தியடைவதில்லை, கல்வியை நிலைக்குத்து அடுக்கு முறையில் தொடர்வதுமில்லை. இதனால் உடல், உள குறைபாடுடையவர்கள் இந்த முறையில் பொருந்திக் கொள்வது சாத்தியமற்றது. இதனால் இதற்குள் நுழையாமல் இருப்பதே நல்லது என்று எண்ணுகின்றனர்.

தற்போது நடைமுறைப்படுத்தப்படுகின்ற உள்ளடக்கும் கல்வி (Inclusive Education) கல்வி குறைபாடுடையவர் சாதாரண மாணவர்களின் வகுப்பறைகளில் கற்றலில் ஈடுபட வேண்டுமே என்பதை முன்மொழிகின்றது. ஆனால் பலரிடம் இத்தகைய எதிர்மறை எண்ணங்களும் அவை சார்ந்த செயற்பாடுகளும் காணப்படுகின்றன.

- கல்வி நிறுவனங்களின் உட்கட்டமைப்பு வசதிகள் வடிவமைக்கப்படும் போதும் நடைமுறைப்படுத்தப்படும் போதும் இலங்கை போன்ற குறை விருத்தி மற்றும் நெருக்கடிக்குள் இருக்கும் நாடுகளில் இத்தகைய குறைபாடு உடையவர்களது தேவைகளும், பிரச்சனைகளும் தீவிரமாக கவனத்தில் கொள்ளப்பட வேண்டியதில்லை என்றே எண்ணுகின்றனர். தேசிய அறிவுறுத்தல்கள் மாத்திரமே கருத்திற் கொள்ளப்படுகின்றனர். இவர்கள் மேலதிக முயற்சிகளுடனும், பிறரது தயவுடனும் தாம் தம் தேவைகளை - கிடைக்கும் உட்கட்டமைப்புக்குள் பெற வேண்டும் என்றும் எண்ணுகின்றனர். அனுதாப உணர்வுடன் இவர்களுக்கான கல்வி வழங்கப்படுதல் போதுமானது என்ற எண்ணம் இவர்களிடம் பதிந்து கிடக்கின்றது.

- விசேட தேவையுடையோருக்கான மாணவர்களுக்கு கற்பிப்பதற்கு சிறப்பான மனப்பாங்கும், தேர்ச்சிகளும் தேவைப்படுகின்றன. சிறந்த இடைவினையுறவு ஆற்றல் அவசியமாகின்றது. மேலதிக முயற்சிகளுடன் கற்பிக்க வேண்டும். விசேடமான துணைச் சாதனங்களை தயாரிக்கவும்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயன்படுத்தவும் கூடியவர்களாக ஆசிரியர்கள் விளங்க வேண்டும். அதனால் பெரும்பாலானவர்களிடம் இதற்கான இயல்பான விருப்பம் காணப்படுவதில்லை.

சாதாரண மாணவருக்குரிய கற்பித்தல் முறைப் பயிற்சியையும், ஆசிரியக் கல்வியையும் பெறுவதற்கே பெரும்பாலானவர்கள் விரும்புகின்றனர். இது பல சமயங்களில் முரண்பாடாகவே காணப்படுகின்றது. பலதரக் கற்பித்தல், குறைதீரக் கற்பித்தல் என்பவற்றுடன் இத்தகைய விசேட தேவைக் குரியவர் களுக் கான கற் பித் தலையும், சிறப்பானவர்களுக்கான கற்பித்தலையும், சிறப்பான முயற்சி மற்றும் ஈடுபாடுகளுடன் கற்பிப்பதற்கான ஏற்பாடுகள் ஆசிரிய கல்வியில் உள்ளடக்கப்படல் வேண்டும். உள்ளடக்கும் கல்விக்கான ஆசிரியக் கல்வி ஏற்பாடுகள் விசேடமாக ஊக்குவிக்கப்படுவதும் அவசியமாய் உள்ளது.

➢ இத்தகைய பிள்ளைகள் தாம் வாழும் சூழலில் இயங்கும் எந்தவொரு பாடசாலையிலும் இணைந்து கல்வி கற்பதற்கு உரிமையுடையவர்கள். இவர்களுக்கான அனுமதியினை மறுப்பது சட்ட ரீதியில் குற்றமாகும். உண்மையில் பாடசாலை முகாமைத்துவமும், நிர்வாகமும் மனதளவில் இவர்களை அனுமதிக்கவும், உதவியும், ஊக்கமும் வழங்கவும் தயாராக வேண்டும். இது சமூக நீதியாகும். தாமாக விரும்பி பெற்றுக் கொள்ளாத தீங்கு இதுவாகும். அவர்களை இத்தகைய தீங்குறு உணர்வுகள், விளைவுகள் என்பவற்றிலிருந்து வெளியே எடுப்பதில் பெரும்பாலானவர்கள் அக்கறை கொள்வதில்லை. இவர்களிடம் மனமாற்றமும், செயலூக்கமும், தீங்குறும் இத்தகைய மாணவர்கள் நோக்கி அதிகரிப்பதற்கான முயற்சிகள் மற்றும் விழிப்புணர்வு சமூக நிறுவனங்களினால் ஊக்குவிக்கப்பட வேண்டும்.

➢ விசேட தேவையுடைய குறிப்பாக குறைபாடுடைய


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளைகளுக்கு பாடசாலை மட்டத்தில் கற்றல் சார்ந்தும், சாராதும் பல விசேட ஏற்பாடுகளும், சலுகைகளும் அவசியமாகின்றன. பொதுவாக போதிய வளங்களின்றி சிரமப்படும் பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோரிடம் இத்தகைய விசேட ஏற்பாடுகளுக்கு சார்பான மனப்பாங்குகள் விருத்தி செய்யப்படாமை வருத்தம் தருவதாகும்.

உண்மையில் வாழ்நாள் முழுதும் இவர்கள் எல்லா முன்னேற்றங்கள் மற்றும் நன்மைகளை இழந்து விடாமல் இருப்பதற்கு பாடசாலை மட்டத்திலான இத்தகைய சலுகைகள் உதவும் என்பதை பெரும்பாலானவர்கள் உணர்ந்து கொள்வதில்லை. சமூகங்களின் நிறைவான முன்னேற்றத்தை ஏற்படுத்துவது என்பது இத்தகைய தீங்குறு மாணவ அணியினரையும் இணைத்துச் செல்வது தான் என்ற கருத்தையும், உணர்வையும் பாடசாலை சமூகங்களில் பரப்ப வேண்டிய காலகட்டத்தில் நாம் அனைவரும் உள்ளோம்.

## உடல், உள குறைபாடுடையோரும் சமூக, பொருளாதார ஏற்றத்தாழ்வும்

பார்வைக் குறைபாடு, கேட்டல் குறைபாடு, மூளை வளர்ச்சியிலான பாதிப்பு, உள வளர்ச்சிக் குறைபாடு கொண்டவர்களும், பல்வேறு இயலாமைகளுக்கு உட்பட்டவர்களும் எத்தகைய வாழ்க்கைப் பாணியையும், வசதியையும், வாய்ப்புக்களையும், பாதுகாப்பையும், மதிப்பையும் பெறுவர் என்பது அவர்கள் சார்ந்துள்ள சமூக பொருளாதார தர நிலைகளில் பெரிதும் தங்கியுள்ளது.

இத்தகைய குறைபாடுடையவர்களை அவர்களது சமூக பொருளாதாரம் தொடர்பாக மூன்று படிநிலைகளில் அவதானிக்க முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. பின்தங்கிய சமூகம் சார்ந்த வறியவர்கள்
2. சராசரி பொருளாதார வசதியுடையவர்கள்
3. மேட்டுக் குடியினரான உயர்வகுப்பு செல்வந்தர்கள்

**பின்தங்கியவர் (Backward Class)**

முதலாவது வகுப்பினர் அடிப்படையில் நிலவுரிமை, மூலதன உரிமை, கல்வி என்பன இல்லாது பயிற்சி ஏதுமற்ற உடல் உழைப்பு மூலம் வருமானம் பெறுகின்ற சமூக ரீதியிலான சிறுபான்மையினர் பெரிதும் பொருளாதார வசதியும் வாய்ப்பும் மிக்க பகுதிகளிலிருந்து தொலைவில் ஒதுங்க வாழ்பவராக இருப்பவர் பெரிதும் உள் ஒதுங்கிய கிராமங்களிலும், நகரங்களிலும், சேரிகளிலும் இவர்கள் வாழ்பவர்களாக இருப்பர். இவர்களுக்கு கல்வி கற்கவும் முன்னேறவும் தேவையான வாய்ப்புக்கள் கிடைப்பதில்லை. தம்மை வலுவூட்டிக் கொள்வதற்கும் வசதிகள் கிடைப்பதில்லை. சமூக பாதுகாப்புக்களும் உத்தரவாதப்படுத்தப் படுவதில்லை. இவை நீடித்திருக்கும் வறுமைக்குள்ளும் சமூக மதிப்பற்ற வாழ்க்கைக்குள்ளும் இவர்களை நிரந்தரமாக அழுத்தி வைத்துக் கொள்கின்றன (5). இவர்களது வாழ்வு மீள முடியாதளவு சிதைக்கப்பட்டு விடுகின்றது. நீடித்த வறுமையினால் ஊட்டமின்மை, சுகாதாரக்கேடு, கல்வியின்மை, சுத்தமான குடிநீர் கிடையாமை போன்ற பாதிப்புக்களுக்கு உட்படும் போது இவர்களது பிள்ளைகள் பெருமளவுக்கு உடல், உள, மூளை குறைபாடுகள் கொண்டவர்கள் ஆகிவிடுகின்றனர்.

இத்தகைய பிள்ளைகள் விசேட கல்வி வசதிகள் பற்றி அறியாமலே இருந்து விடுகின்றனர். அவர்களது பெற்றோருக்கு தொழில் மற்றும் உணவு தவிர ஏனையவை பற்றி எதுவுமே தெரியாது. இதனால் அவர்களது பிள்ளைகள் குறைபாடுகளிலிருந்து மீள்வது பற்றிய எந்தவொரு அறிவும், உணர்வும், நாட்டமும், வசதியும் இன்றி பெற்றோர் வாழ்கின்றனர். இதனால் இத்தகைய சமூக, குடும்பம் சார்ந்த குறைபாடு கொண்டவர்கள் இத்தகைய விசேட கல்வியின் நிழல் படாமல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வறியவர்களாகவும், பிச்சைக்காரர்களாகவும், அவமதிப்புக்கும், புறக்கணிப்பும் உள்ளவர்களாகவும் வாழ்ந்து மடிந்து போகின்றனர்.

கிராமிய மட்டங்களிலும், நகர்ப் புறங்களிலும் கிராம சேவையாளர்களும், சமூக நலப் பணியாளர்களும் (Social Workers) இணைந்து அரச சார்பற்ற நிறுவனங்களினதும் சனசமூக நிலையங்களினதும் ஆதரவு மற்றும் உதவியுடன் இவர்களை இனங்கண்டு அவர்களை விசேட கல்வி ஏற்பாடுகளுக்கு கொண்டு வர வேண்டும். இது தான் விசேட கல்வியின் விளைதிறன் மற்றும் உண்மைத் தன்மையை உறுதிப்படுத்துவதற்கான முதற்கட்ட பணியாகும். இவர்களுக்கான வதிவிட கல்வி ஏற்பாடுகள் (Residential Learning Facilities) வழங்கப்பட வேண்டும். வறுமையும் புறக்கணிப்பும் உள்ள வாழ்விடப் பின்னணியிலிருந்து வெளியே கொண்டு வந்து, பின்பு கல்வி வழங்குவது தான் சரியானதும், நேர்மையானதுமாகும்.

**சராசரி மக்கள்** (Middle Class)

எமது முறைசார் கல்விச் செயலமைப்பு, அது சார்ந்த விசேட கல்வி ஏற்பாடுகளுக்குள் அதிகம் வந்து சேர்பவர்கள் இவர்களே. இவர்கள் ஓரளவு குடும்ப சொத்துக்கள், சேமிப்புக்கள், கிரமமான தொழில் வாய்ப்பு, இடைநிலைக் கல்வி, ஓரளவு சுகாதாரமான வசிப்பிடங்கள் கொண்ட குடும்பங்களாக விளங்குவர்.

இத்தகைய குடும்பங்களில் உள்ள குறைபாடு கொண்ட பிள்ளைகள் கூட பல சமயங்களில் தாமதமாகவே சரியாக இனங் காணப்படுகின்றனர். கண்பார்வைக் குறைபாடு, காது கேட்டல் குறைபாடு, மூளை வளர்ச்சி, உளவளர்ச்சிக் குறைபாடுகள் உரிய காலத்தில் பெற்றோரினால் இனங்காணப்படுவதில்லை. பள்ளிப் பருவத்தின் போது தான் ஆசிரியர்களின் உதவியுடன் அல்லது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருத்துவ மற்றும் சிகிச்சை முகாமின் போது தான் குறைபாடுகள் இனங் காணப்படுகின்றன. அதாவது குறைபாடுகள் வலிமை பெற்ற பின்பு தான் அடையாளம் காணப்படுகின்றன.

இத்தகைய குடும்பங்கள் சார்ந்த குறைபாடு கொண்ட பிள்ளைகளை பாடசாலைகளில் சேர்ப்பதற்கு இவர்கள் முனைவதுண்டு. விசேட கல்வி தொடர்பாக தெரிவிக்கப்பட்டு வரும் பிரச்சனைகள் பொதுவாக இவர்கள் சார்ந்தவை தான் என்பது ஆய்வாளர் அவதானமாகும். இவர்களிலும் ஐம்பது சதவீதமானவர்களே இவர்களுக்கான கல்வி ஏற்பாடுகளில் ஒழுங்கு முறையான அனுகூலங்களைப் பெற்று வருகின்றனர் என்பது சுட்டிக் காட்டப்பட வேண்டும். பெண் பிள்ளைகளாயின் கண்பார்வைக் குறைபாடு தவிர்ந்த ஏனைய குறைபாடுகளை வெளிப்படுத்துவதில் பெரும்பாலான பெற்றோர் தயக்கம் காட்டுகின்றனர். திருமண ஏற்பாடுகளில் எதிர்காலத்தில் பாதிப்பு ஏற்படும் என எண்ணி குறைபாடுகளை மறைக்க விரும்புகின்றனர். சாதாரண பாடசாலைகளில் இதே குறைபாடுகளுடன் - பிரகடனப்படுத்தப்படாத குறைபாடுகளுடன் அதிக சிரமங்களுடன் கல்வி பயில்கின்றனர். பெற்றோரும் மிக நெருங்கிய நண்பர்களுமே இக் குறைபாடுகளை அறிவர். எனினும் மறைத்து வாழ்வர்.

இதனால் விசேட கல்வி ஏற்பாடுகளின் கீழ் கிடைக்கும் சலுகைகளையும் சிறப்பு நலன்களையும் இவர்கள் பயன்படுத்தி முன்னேற தவறி விடுகின்றனர்.

பெற்றோரும், சமூகமும் “வெளிப்பகட்டு விருப்பங் களுக்காக” குறைபாடுகளை மறைக்கவும், அதன் வழி பொருத்தக்கேடான கற்றல் முறையை பின்பற்றவும் வழிவகுத்தல் கூடாது. இது பற்றிய விழிப்புணர்வு வெகுசன ஊடகங்களின் வழியாக செறிவான முறையில் வழங்கப்படல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

21 வயதுடைய கண்பார்வையற்ற ஜேர்மனிய பெண் லாறா றெயிசர் (**Lara Reiser**) சமரூன் நாட்டில் பார்வையற்ற பிள்ளைகளது பள்ளிக் கல்வி பற்றிக் கூறியது.

இவர்கள் இடையிடையே கல்வி பெறும் நிலைமையே 12 வயது வரை காணப்படுகின்றது. ஒழுங்கான கல்வியை இவ் வயதில் பெறுவதில்லை. முதல் 6 வருட படிப்பை அதிகமானோர் இழந்து விடுகின்றனர். சில சமயம் பட்டம் பெற்றாலும் கண் பார்வையற்றவர்கள் வேலை பெற முடியாது. யாரும் வேலை வழங்குவதில்லை. தம்மைப் பேணும் தகுதியை பட்டப்படிப்பு கூட அவர்களுக்கு வழங்குவதில்லை. (மூலம் : Development and Corporation - No.5-2015, p30)

## மேட்டுக் குடியினர் (Elites)

அதிகளவு சொத்து, உயர்ந்த கல்வி, சிறந்த தொழில், உயர் வருமானம், சமூக உயர் அடுக்கு அங்கீகாரம், தொழில் வழியான அதிகாரம், சமூக அந்தஸ்து கொண்ட சமூக வகுப்பினர்கள் இவர்கள். இவர்களது குடும்பங்களிலும் உடல், மூளை, உள பாதிப்புக்குட்பட்டவர்கள் இருப்பார்கள். ஆனால் இவர்களது நிலையும் வசதியும் வேறுபட்டவை.

இத்தகைய மேட்டுக்குடி சார்ந்த குறைபாடுடையவர்கள் வசதிமிக்க வாழிடங்களில் இருப்பர். சுத்தமான அழகான உடைகள் அணிவர். தனிப்பட்ட வேலையாள் உதவியைக் கொண்டிருப்பர். தனிப்பட்ட போக்குவரத்து வாகனங்களில் பாதுகாப்புடன் செல்வர். உள ரீதியில் தாழ்வுணர்ச்சிக்கு உட்பட்டிருக்க மாட்டார்கள். ஏனெனில் அந்தஸ்து சார்ந்த திருப்தி உள நிறைவை வழங்க முடியும். சில சமயங்களில் மேல் நிலை உணர்வுகள் (Superiority Complexes) கொண்டவர்களாகவும் காணப்படுவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்கள் விசேட கல்வி ஏற்பாடுகளில் உரிய காலத்தில் கலந்து கொள்வர். எவரிடமும் அனுதாபங்களை இவர்கள் எதிர்பார்க்க மாட்டார்கள். பதிலாக முன்னுரிமைகளை எதிர்பார்க்கக் கூடும். பொதுவான விசேட கல்வி ஏற்பாடுகளில் கிடைக்கும் வசதிகளை பெருக்கிக் கொள்ள அல்லது நிறைவாகப் பயன்படுத்த இவர்களால் முடியும். ஊட்டமும், நல மேம்பாடும், நிதி வசதியும், அந்தஸ்து சார் உள நிறைவும் காணப்படுவதால் விரைவாக இக் குறைபாடுகளிலிருந்து மீள்வதற்கான வாய்ப்புக்களையும் இவர்கள் அதிகம் கொண்டிருப்பர்.

விசேட கல்வி தொடர்பான நவீன கற்றல் உபகரணங்கள், நூல்கள், ஒலிப்பதிவுக் கருவிகள், உணர் நிலைச் சாதனங்கள் என்பவற்றை மின்னியல் ஊடாக மாதிரியில் கொள்வனவு செய்யவும், பயன்படுத்தவும் இவர்களால் முடியும். கற்பதற்கான சிறப்பு உதவியாளர்களையும் கூட கொண்டிருப்பர்.

பல பொதுவான விசேட கல்வி நிகழ்ச்சித் திட்டங்களின் போது கூட "குறைபாடுடையவர்களில் உயர்ந்தோர்" போன்ற உணர்வலைகளுடன் சில சமயங்களில் சிலர் நடந்து கொள்ளவும் கூடும்.

இங்கு விபரிக்கப்படும் எல்லா விசேட கல்வி ஏற்பாடுகள், வளங்கள், வாய்ப்புக்களை பகிர்வதில் இவர்கள் அதிகம் போட்டியிட மாட்டார்கள் என்பது திருப்தி தரும் அம்சமே.

எதிர்கால விசேட கல்வி நிகழ்ச்சித்திட்டங்கள், செயற்றிட்டங்கள், நிறுவனங்கள் என்பனவற்றில் இத்தகைய மேட்டுக்குடி சார்ந்த விசேட கல்வி மாணவ அணியினரை அதிகம் இணைக்கவும், அவர்களிடமிருந்து ஆகக்கூடிய வளங்களையும், உதவியையும் திரட்டவும் முயற்சிகள் தேவைப்படுகின்றன. நிச்சயமாக அவர்களும் மனமுவந்து உதவுவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறான சமூக, பொருளாதார பின்னணியுடன் ஒன்றிணைந்து விசேட கல்வி ஏற்பாடுகளின் செயலாக்க பணி நிலைகளைத் திட்டமிட்டு நடைமுறைப்படுத்துவது பற்றி ஆழமாக சிந்திக்க வேண்டும்.

**மீத்திறன் மிக்கவர்கள்**

எமது முறைசார் கல்வி ஏற்பாடுகளில் அதீத கவன ஈர்ப்புக்குரியவர்களாக கருதப்படும் மற்றொரு தொகுதியினர் மீத்திறன் மிக்க மாணவராவார். மீத்திறன் பிள்ளைகளை இனங் காண்பதற்கு மீத்திறன் மிக்கவர்கள் பற்றிய எண்ணக்கரு பற்றியும் வரைவிலக்கணம் பற்றியும் விளங்கிக் கொள்ள வேண்டியது அவசியமாகின்றது.

சாதாரணமான பிள்ளைகளுடன் ஒப்பிடும் போது மிகவும் கூடுதலான கற்கும் ஆற்றலைக் கொண்டவர்கள் என்று குறிப்பிடப்படுகின்றது. இசை, ஓவியம் மற்றும் பொறிகள் சார் உளச் சார்புடையவர்களாகவோ அல்லது எழுத்தறிவு அல்லது அருவமான அறிவு என்பவற்றை பெறுவதில் மிகையான ஆற்றல் உடையவர்களாக இவர்கள் விளங்க முடியும் என்று ஹில்லிங்வெத் (Hilling Worth) குறிப்பிடுகின்றார்.(6)

பெறுமதிமிக்க முயற்சிகள் எதுவாயிருப்பினும் அவற்றில் மிகச்சிறந்த படைப்பாற்றலை வெளிப்படுத்துபவர் எவராயினும் அவர்கள் மீத்திறன் கொண்டவர்கள் என்று பல்வேறு அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர். (7) பாடசாலைகளில் மிகவும் உன்னதமான கற்றல் உளச்சார்பு கொண்டவர்களையும் மீத்திறன் மிக்கவர்கள் என்று அழைக்கின்றனர். இவர்கள் மீது அதீதமான கவனம் செலுத்தி முக்கியத்துவம் வழங்கப்பட வேண்டும். ஏனெனில் இவர்கள் எதிர்காலத்தில் எல்லாத் துறைகளுக்கும் தலைமை தாங்கி வளம்படுத்தக் கூடியவர்கள். பொருளாதார, சமூக, விஞ்ஞான, தொழில்நுட்ப பண்பாட்டு துறைகளின் போக்கையும், நோக்கையும் ஒழுங்குபடுத்தக் கூடியவர்கள் இவர்களே. மிகவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறப்பான உயர்தகைமை மிக்க தேசிய மனித வளமாகவும், சிந்தனைக் குவியமாக (Thinks Tanks) விளங்கக் கூடியவர்கள் இத்தகைய மீத்திறன் மிக்க மாணவர்கள் ஆவார்.

இவர்களை இனங்காணாமல் இவர்கள் புறக்கணிக்கப்பட்டு விடுகின்றனர். இதனால் தேசிய இழப்பு தொடர்ச்சியாக ஏற்படுகின்றது. வகுப்பறைகளில் கற்பிக்கும் பெரும்பாலான ஆசிரியர்களுக்கு சாதாரண மாணவர்களிலிருந்து இவர்களைப் பிரித்தெடுப்பதற்கான குறியீடுகள் மற்றும் அளவு கருவிகள் பற்றி அதிகம் போதிக்கப்படுவதில்லை.

போல் (Paul Witty) என்ற அறிஞர் இளம் மாணவ வயதினரின் சுடர்மதி மிக்கவர்களைக் கண்டறிவதற்கு எட்டு வகையான தகைமை விதிகளை (Criteria) முன்வைக்கின்றார். (8) இவை தொடர்பான அறிவும், கூர்ந்த அவதானமும், போதிய பரீட்சயமும் ஆசியர்களுக்கு இருப்பதில்லை. இதனால் உரிய காலத்தில் மிகச் சரியான மாணவர்களை நாம் தவறவிட்டு விடுகின்றோம். அவர்களை விட நுண்மதி குறைந்தவர்களுடன் இணைந்திருக்கச் செய்த சராசரியானவர் போல் கற்பித்து வருகின்றோம். இதனால் விஞ்ஞானிகளையும், உயிரணு நிபுணர்களையும், விண்வெளி கூர்மதியாளர்களையும் எமது நாடுகள் இழந்து விடுகின்றன.

இவர்களை வகுப்பறைகளில் கையாள்வது தொடர்பாக மூன்று அணுகுமுறைகள் சிபார்சு செய்யப்படுகின்றது (9).

- துரிதப்படுத்தல் (Acceleration)
- தனித்துவப்படுத்தல் (Segregation)
- வளம்படுத்தல் (Enrichment)

பாடசாலைகளின் முகாமையாளர் அணியினரும் கல்வி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிர்வாகிகளும், ஆசிரிய கல்வித் துறையினர், உளவியலாளர் ஆகியோருடன் இணைந்து இவை தொடர்பான ஆசிரியர்களின் அறிவையும், பிரயோகத் திறன்களையும் உயர்த்துவதற்குரிய செயற்றிட்டங்களை தயாரித்து பாடசாலை மட்டங்களில் நடைமுறைப்படுத்த வேண்டும்.

எமது நாட்டில் தற்போது காணப்படும் சில நடைமுறைகள் கூர்மதி மிக்கவர்களுக்கான சில ஊக்குவிப்புக்களாக மாத்திரமே விளங்குகின்றன. இவை தொடர்பாக நிகழ்வுகளாக விருத்தி செய்யப்படவில்லை. இரு வகுப்புக்களை ஒரே வருடத்தில் கடந்து போவதற்கான ஏற்பாடு (Double Promotion Scheme) மற்றும் புலமைப்பரிசில் திட்டம் (Scholorship Scheme) போன்றன இத்தகையன. ஒன்றில் இவை சீராக கண்காணிக்கப்படுவதில்லை. அல்லது இவை திசை மாற்றப்பட்டு விடுகின்றது. சராசரி மதிநுட்பம், கற்றல் திறன் உடையவர்களை மாத்திரம் பராமரிக்கும் பாடசாலைக் கல்வி முறையில் புதிய மாற்றங்கள் தேவை. இது இவை கூர்மதி மிக்க மாணவர்களுக்கு முன்னுரிமையும் முக்கியத்துவமும் வழங்க வேண்டும்.

நெடுங்கோட்டு ஒழுங்கு முறையில் இவர்கள் பாடசாலை மட்டத்திலிருந்து பல்கலைக்கழகம், தொழில்வாண்மைக்கல்வி, ஆராய்ச்சி போன்ற உயர்நிலைகள் வரை முன்னுரிமையுடன் கற்பிக்கப்பட வேண்டும். புத்தாக்க வேணவா, திறன்கள் தனியான தேசிய நிறுவனங்கள் உருவாக்கப்பட்டு, வளங்களதும் ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும். உலக தொழில் வாய்ப்புக்களை கைப்பற்றி தொழில்நுட்ப மேம்பாட்டையும், அந்நியச் செலாவணியையும் எமது நாட்டுக்குள் கொண்டு வந்து சேர்ப்பதற்குரிய இந்த மீத்திறன் மிக்கவர்கள் போஷிக்கப்பட வேண்டும்.

கண் பார்வையற்றவர்களும், உடல் குறைபாடு உடையவர்களும் கல்வி பெறக் கூடிய பாடசாலைகள் அவர்களுக்கு வாசிப்பு, எழுத்து, எண்கணிதம் மாத்திரம் கற்பிப்பது போதுமானதல்ல.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உளவியல் பாதுகாப்பு அதிகம் வழங்கப்பட வேண்டும். சமூக பணியாளர்களும், உளவியலாளர்களும் இவர்களுக்கு அதிகம் உதவ வேண்டும்.

இவர்களில் அதிகமானோர் ஊட்டச்சத்து குறைபாடு கொண்டவர்களாக உள்ளனர். அதிகமானோர் பிறெய்லி கற்றிருக்கவில்லை - லாறா றெயிசன்

## முடிவுரை

அதீத கவன ஈர்ப்புக்குரிய மாணவர்கள் இருநிலைகளில் - பருமட்டாக இனங் காணப்பட்டுள்ளனர். நலிவுறும் மாணவர்கள், கூர்மதியாளர்கள் ஆகியோரே இவர்கள்.

சமகாலத்தில் இருசாராரையும் முன்னேற்றுவதற்கான தேசிய நிகழ்ச்சித்திட்டங்கள், செயற்றிட்டங்கள் தயாரிக்கப்பட வேண்டும்.

சிறப்பான கல்வி நிறுவனங்களும், பல்கலைக்கழகங்களில் இதற்கான பீடங்களும் உருவாக்கப்பட வேண்டும்.

பல்கலைக்கழக மாணவர், ஆசிரியர் சங்கங்கள், மகளிர் அமைப்புக்கள், இளைஞர் கழகங்கள் இவை சார்ந்த செயற்றிட்டங்களில் தன்னார்வத்துடன் தொடர்ந்து பங்கேற்க வேண்டும்.

வெகுசன ஊடகங்களும், கலை இலக்கிய மன்றங்களும், சமூகப் பெருவிழாக்கள் என்பவற்றூடாகவும், இவை பற்றிய அறிவையும், உணர்வு பூர்வமான ஆதரவையும் செயற்பாடு களையும் முன்னேற்ற வேண்டும்.

சமுதாயக் கல்வி நிகழ்ச்சி நிரலில் இத்தகைய கல்விக்கான வாய்ப்புக்களை அகலப்படுத்துவதும், அதிகரிப்பதும் அவசியமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவையனைத்தும் ஒன்றுடன் ஒன்று தொடர்புடைய தாக்கப்படுதல் வேண்டும். அரசிடம் அதிகம் எதிர்பாராமல் தனியார் தொழில் துறையினரிடமிருந்தும், அரச சார்பற்ற நிதி நிறுவனங்களிடமிருந்தும் நிதி உதவியையும், உட்கட்டமைப்பு உதவிகளையும், உள ரீதியான ஆதரவையும் அதிகரிப்பதில் இக் கல்வித் துறையினர் அக்கறை காட்ட வேண்டும்.

அனுதாப நோக்கு என்பதிலிருந்து விலகி சமத்துவம், சரிநிகழ், தேசிய மனித வள மேம்பாடு என்ற புதிய சிந்தனைகளுடனும், புத்தாக்கச் செயற்பாடுகளுடனும் அரசும் - சமூகமும் இணைந்து செயற்படும் போது அதீத கவன ஈர்ப்புக்குரியோருக்கான கல்வி விரிவாக்கமும், வேகமும் பெற்று வளர்ச்சியடைய முடியும்.


**உசாத்துணை நூல்கள்**


01. Jeyaweera, Swarna and Gunawardena, Chandra (2002) Education for All, Common wealth Education fund - Sri Lanka, Colombo - P1
02. UNICEF (திகதியிடாதது) சிறுவர் உரிமைகள் பற்றிய சமவாயம். பக்கம் -21
03. மேலது - பக்கம் - 22
04. மேலது
05. மேலதிக விளக்கத்திற்கு பார்க்கவும்
LUSTING NORA and STERN NICHOLAS (2000) Broadening the Agenda for poverty Reduction Finance, and Development, December 2000. PP3-7
06. Aggarwall. J.C (2004) Educational Vocational Guidance and Counseling, Doaba Honse, Delhi. P316
07. பார்க்கவும், மேலது
08. பார்க்கவும், மேலது பக்கம் 317
09. விளக்கத்திற்கு பார்க்கவும் - மேலது பக்கம் 320




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சாவழி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனமார்ந்த நன்றிகள்



எங்கள் அன்புக்குரிய அமரர் பேராசிரியர் இரத்தினம் விக்கினேஸ்வரன் அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு உடனடியாக நேரில் வந்து ஆறுதல் தெரிவித்து இறுதி நிகழ்வில் பங்குகொண்டவர்களுக்கும் பல்வேறு தேசங்களிலிருந்து தொலைபேசி, சமூக ஊடகங்கள் மற்றும் மின்னஞ்சல் போன்றவற்றினூடாக அனுதாபங்களை தெரிவித்த பாசமுள்ள உறவினர்களுக்கும் பத்திரிகைகளில் கண்ணீர் அஞ்சலி தெரிவித்த உள்ளங்களுக்கும், கண்ணீர் அஞ்சலிப் பதாதைகளை வைத்தவர்களுக்கும், மற்றும் மலர்மாலைகளூடாக அஞ்சலித்த உறவுகளுக்கும் துண்டு பிரசுரம் வழங்கிய நல்லுள்ளங்களுக்கும் இறுதிப் பயணத்தின் போது அன்னாரின் வீட்டிலும், யாழ்ப்பாண பல்கலைக்கத்திலும் இரங்கல் கூட்டத்தினை நடாத்தி இரங்கல் உரை நடாத்திய பெருந்தகைகளுக்கும், இணுவில் கோயில்வாசல் சந்தியில் அன்னாரின் கட்டவுட் செய்து வைத்த இணுவில் வாழ் இளைஞர்களுக்கும் அவற்றுக்கான நிதிஉதவியை செய்த ஜேர்மன் ஒன்றியம், லண்டன் ஒன்றியம் ஆகியோருக்கும் மற்றும் இணுவில் லயன்ஸ் கழக உறுப்பினர்களுக்கும், பல்கலைகழகத்திலும் அன்னாரின் பூதவுடலுக்கு அஞ்சலி செலுத்துவதற்கான ஏற்பாடுகளை மனப்பூர்வமாக செய்து தந்த பல்கலைக்கழக நிர்வாகத்தினருக்கும், இம்மலரை குறுகிய காலத்தில் சிறப்புற வெளிக்கொணர்ந்த ஐங்கணன் அச்சகத்தினருக்கும் மற்றும் அனைத்து வழிகளிலும் உதவி புரிந்த அன்பான உறவுகள் யாவர்க்கும் எமது சிரம் தாழ்த்தி நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

*சைவப்பாடசாலை வீதி,*
*கோண்டாவில் மேற்கு,*
*கோண்டாவில்.*
***19.03.2023***

*இங்ஙனம்*
*மனைவி, பிள்ளைகள்*
*சகோதரர்கள்,*
*உறவினர்கள்*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

திருமதி. பவானி விக்கினேஸ்வரன்
சைவப் பாடசாலை ஒழுங்கை
கோண்டாவில் மேற்கு
கோண்டாவில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கீதாசாரம்

எது நடந்ததோ அது நன்றாகவே நடந்தது

எது நடக்கின்றதோ அது நன்றாகவே நடக்கின்றது

எது நடக்க இருக்கின்றதோ அதுவும் நன்றாக நடக்கும்

உன்னுடையது எதை இழந்தாய் எதற்காக நீ அழுகின்றாய்?

எதை நீ கொண்டு வந்தாய் அதை நீ இழப்பதற்கு

எதை நீ எடுத்துக் கொண்டாயோ

அது இங்கேயே கொடுக்கப்பட்டுள்ளது

எது இன்று உன்னுடையதோ

அது நாளை மற்றொருவருடையதாகின்றது

மற்றொரு நாள் அது வேறொருவருடையதாகும்

இதுவே உலக நியதியும்

எனது படைப்பின் சாராம்சமுமாகும்.

-பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐங்கணன் - கோண்டாவில்
தொ.பே.- 077 132 7303